திருநெல்வேலி ஜில்லா சங்கரன்கோவில் தாலூகா
பனையூர் என்னும் சேத்திரத்தில் கோயில்கொண்டு
எழுந்தருளியிருக்கும் மகாசந்நிதானம்
ஸ்ரீ சங்கரநாராயணர் தெட்சிணாமூர்த்தி சுவாமிகளின்
குருமூர்த்தியான

# ராமகிரிச் சித்தர் ரசாயன சாஸ்திரம்

மதுரை வரகவி மு. கணபதியா பிள்ளை அவர்களிடமிருந்த
பழங்கால ஏட்டுச் சுவடியிலுள்ள உரைநடை
முதற்பதிப்பு

இஃது
சென்னை மாநில முன்னாள் முதலமைச்சரும்,
வடலூர் சுத்த சன்மார்க்க நிலைய ஸ்தாபகருமான
உயர்திரு *O. P.* ராமசாமி ரெட்டியார் M. L. C.
அவர்கள் பொருளுதவியால்

சோடச நூல் ஆசிரியரும், மருத்துவ ஜோதிட நூற்களின்
புலவருமான

மதுரை வரகவி
**மு. கணபதியா பிள்ளை** R. I. M. P.
அவர்களால் விளக்கி எழுதி

மதுரை ஸ்ரீ ஜெகதாம்பாள் அச்சகத்தில் அச்சிட்டு
வடலூர் சுத்த சன்மார்க்க நிலைய உரிமையாகச்
சமர்ப்பிக்கப்பெற்றது.

1961. [விலை ரூ. 4

AII.6
AI (6)

முதற் பதிப்பு காப்பி 1000.

இந்நூல் கிடைக்குமிடம் :
**சுத்த சன்மார்க்க நிலையம்,**
வடலூர் P. O.
கடலூர் தாலூகா,
தென்னாற்காடு ஜில்லா.

# ஸ்ரீ ராமகிரிச் சித்தர் ரசாயன சாஸ்திரம்.

## முன்னுரை.

உலகத்திற்கே இருதயம்போல் விளங்கும் இந்தியாவின் முகமண்டலமாகத் திகழ்வது சென்னைமாநிலம். இதன் கண் போன்றது மதுரை. கருத்துப் போன்றது நீர்நிலம், மலைநிலம், பொழில், மொழி, தொழில்களின் எழில்பெற்ற திருநெல்வேலி மாவட்டம். அமிழ்தினுமினிய தமிழ்மொழி பிறந்த பொதிகையை அணிகலனாகப் பூண்டிருக்கும் இந்நாட்டின் கிளைகளான சங்கரன்கோவில், கரிவலம் வந்த நல்லூர், தென்மலை, சிவகிரி, வாசுதேவநல்லூர் முதலிய பஞ்ச சேத்திரங்களின் நடுநாயகமாக விளங்குவது அனைவரும் புகழும் பனையூரென்னும் புண்ணிய தலம். அன்னாள் மன்னர்களான வரதுங்க பாண்டியன், அதிவீர ராமனின் படையெடுப்பைச் சமாதானப் படுத்தி உடனிருக்க வைத்த பெருமையும் இவ்வூருக்கு உண்டு. வெள்ளையராட்சியிலே கீழ்பாகங்களை ஆளும் நாயக்கர் வர்க்க குறுநில மன்னர்களிடம் திரை வசூலிக்கும் பொறுப்பை எட்டையாபுரம் மன்னரிடம் விட்டதுபோல், மேற்பாகங்களை ஆளும் பாண்டிய மன்னர்களுக்குத் தலைமை தாங்கிய புலித்தேவர் பரம்பரை வாழும் நெற்கட்டுஞ்செவலுக்கு ஓரிருகற் கிட்டமாக துலங்கும் இத்தலத்திலே திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மகானுபவர் ஸ்ரீ சங்கரநாராயணரும் அவர் குமாரர் ஸ்ரீ தட்சிணாமூர்த்தியுமே ஆவர். ஓடம் நிறையச் சிப்பிகளை அள்ளிக்கொண்டுவந்தாலும் ஒவ்வொன்றில்தான்

உயர்ந்த முத்துக்கள் அகப்படுவது போல், மனிதரில் மாணிக்கமாய் வந்த மகான்கள் அடங்கிய சமாதிகள்தான் காலக்கிரமத்தில் கூடகோபுரக் காட்சிகளோடு பாடல் பெற்ற தலங்களாய் விளங்கிக் கொண்டிருக்கின்றன. இவ்விதம் திருக்கோவில் கொண்டிருக்கும் பெரியோர்களின் சரிதங்களை ஆராயும்போது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குருமூர்த்தி வந்து உபதேசித்திருப்பதாகவே புராணம் கூறுகின்றது. சிறப்பான மாளிகையையும் ஒருவர் வந்து திறப்புவிழா நடத்தி வைப்பதுபோல், உபதேசக்கிரமத்தையும் உலகம் சுவிசேசமாகக் கொண்டிருக்கின்றது. இதுபோலவே பக்குவியான சங்கரநாராயணருக்கும் பனையூரின் அண்மையிலுள்ள ராமகிரியின் குகையில் வசித்த சித்தர் பெருமான் குருவாக வந்து உபதேசித்தார். இக்காரணம் பற்றியே அம்முனிபுங்கவரை இராமகிரியார் என்று அழைக்கப்படுகின்றது.

---

தீயிருந்தால் புகையும், பூவிருந்தால் கமழும் என்பது போல், விட்டகுறை தொட்டகுறையின் காரணமாய் இளமைதொட்டே சத்சங்கம், ஒழுக்கம், சீவகாருண்யம், கல்வி அறிவு, அடக்கம், கடமை தவறாது நடந்து, அவா வெகுளி மயக்க முதலிய தீக்குணங்களின்றி, பனையூரில் பிறந்து வளர்ந்து படித்துக் கொண்டிருந்தார் சங்கரநாராயணர். முந்தை வினையின் காரணமாக, சுந்தரமூர்த்திக்கு விவாகம் நடந்ததுபோல், பருவம் வந்த அவருக்கு உறவின்முறையார்கள் திருமணம் செய்து வைக்க எண்ணினர். பெயர் போல் குணம் படைத்த எவர்ணமான தவசியம்மையை அன்னாருக்கு மணமுடித்து வைத்தனர். இல்லறமல்லது நல்லறமன்று என்று இதோபதேசமும் செய்தனர். காடைக்

கண்ணியில் யானை அகப்படுமா? மோட்சாபேட்சை மட்டும் உள்ள அவர், உற்றார் தொந்தரவிற்காக புத்தரைப்போல் குடும்பவாழ்க்கையில் ஈடுபட்டார். மனைவியும் தானும் பனையூருக்கு வடபாலுள்ள தென்மலைக்குச் சென்று, பாவமற்ற வாத்திமைத் தொழிலால் ஜீவனம்பண்ணிக் கொண்டு, வள்ளுவர் வாழ்க்கைபோல் உள்ளத் தூய்மையுடன் விளங்கிக் கொண்டிருந்தனர். கடமையின் காரணமாக சில குழந்தைகள் பிறந்தன. குளிக்கப்போய் சேறு பூசிக்கொண்டது போல், மேலும் மேலும் பாசபந்தங்கள் பெருகுவதைக் கண்டு, ஆலமுண்டவனை எண்ணி வியாகூலமடைந்து கொண்டிருந்தார். முடிவான கட்டத்தில் அவன் அவள் அதுமூலமாக வந்து தடுத்தாட் கொள்வதுதானே கடவுட் செயல்? சடாமகுடமும் தண்டு கமண்டலமும் காவி உடையும் கம்பீர நடையுமாகப் பள்ளிக்கூடத்திற்கே வந்தார் பவுன்போன்ற இராமகிரியார். காணாதபொருளைக் கண்டது போல் பாதத்தில் வீழ்ந்து பணிந்து பயபக்தியோடு பணிவிடைகள் செய்தார் சங்கரநாராயணர் அவர் வந்திருந்த சமயத்தில் பிறந்த குழந்தைதான் தட்சிணாமூர்த்தி. குழந்தைச் சப்தம் கேட்டதுமே அக்குழந்தையை ஏந்திவரச் செய்து ராமகிரியாரே தன்கையால் சேனைப்பாலூட்டி தெட்சிணாமூர்த்தி என்ற திருநாமம் சூட்டி ஆசீர்வதித்து, இவன் துருவரைப்போல் வந்த திரிகாலஞானி; இவனை உன் தவக்குடிலிலேயே கிடத்திக்கொள்; என்று சங்கரநாராயணருக்குக் கட்டளையிட்டுவிட்டு அவரை அழைத்துக்கொண்டு சென்று பனையூருக்கு மேல்பாகத்திலுள்ள நீர்வீழ்ச்சி நதி தீரத்தில் கங்கைக் கரையில் சங்கரரைப்போல் வீற்றிருந்து, சங்கரநாராயணருக்கு ஆத்மோபதேசத்தை அனுக்கிரகித்தார். பாத்தி மறிந்த ராமகிரியார் தொட்டவுடன் சோதி

கிட்டியதால், இராமகிருஷ்ணருக்கு முன் விவேகானந்தரை போல் இவரும் நிட்டை கூடிவிட்டார். வந்தகாரியம் முடிந்ததால் ராமகிரியாரும் தன் சொந்த வாசஸ்தலத்திற்குச் சென்றார்.

சித்திரதீபம்போல் சிலநாள் சமாதியிலிருந்த சங்கரநாராயணர், ராமகிரியாரின் சங்கற்பப்படி சமாதி கலைந்து பனையூரிலேயே ஒரு குடிலில் தவம் புரிந்துகொண்டு மக்களையும் வளர்த்து வாலிபமாக்கி விட்டார். தன்னுடன் இருக்கும் தட்சிணாமூர்த்தியைத் தவிர மற்ற மக்கள் நால்வரும் இல்லத்துறவிகளாய் நெடுவேலி, காசிமேஜர்புரம், தென்காசி, எலத்தூர் முதலிய இடங்களில் வாசம்செய்து மகாஞானிகளாய் ஆங்காங்கே சமாதி கொண்டனர். தெட்சிணாமூர்த்தியும் சங்கரநாராயணரும் பக்தஜனங்கள் குழுமி போற்ற பனையூரிலேயே தன் தவக்குடிலில் சமாதி நிலை அடைந்தனர்.

பனையூரின் மேற்கே நதி தீரத்தில் சங்கரநாராயணருக்கு இராமகிரியார் உபதேசித்தது, அக்காலம் சித்திரை மாதம் இருபதாம் நாளாகும். அதை ஞாபகார்த்தமாகக் கொண்டாடவே அந்நாளிருந்து இந்நாள்வரை ஒவ்வொரு வருடமும் சித்திரை மீ 20ஆம் நாளன்று காலையில் யானை பரி தேர் விருது மங்கள வாத்தியங்களுடன் பக்தகோடிகள் குழும அந்நதி தீரத்திற்குச் சென்று இராமகிரியாரை அழைத்து வருவதான உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது. மதியம் மகேசுர பூஜையும் மாலையில் அறிஞர்களின் சொற்பொழிவுகளும் இரவு மும்மூர்த்திகள் எழுந்தருளும் உற்சவமும் ரட்சை அணிதலும் பிரபலமாக நடைபெற்று வருகின்றன. இம்மும்மூர்த்திகளின் மகிமையை

அறிந்த பக்தகோடிகள் லட்சக்கணக்கில் கூடி பக்தி சிரத்தையாய் வழிபட்டு எண்ணிய காரியசித்தியும் எய்துகின்றனர். தெட்சிணமூர்த்தியின் பெருமையும் சாபானுக்கிரக சாமர்த்தியமும் இளமையிலேயே துறவடைந்து இருந்த இடத்திலேயே இருந்து எண்பது ஆண்டுகள் அங்கமே முள்ளு முள்ளாக வடிய அருந்தவம் செய்த மகிமையும் கூறப்புகுந்தால். உப்புச் சுவையற உப்பைக் கட்டி உடம்பையும் பொன்னாக்கிய கடந்த ஞானி. அன்பர் கொடுத்த ஓர் செம்புக்காசை, உதட்டின்மேல் வைதது ஒன்பதரை மாற்றாக்கி, ஒரு ஏழைக்குக்கொடுத்த தீனதயாளு. எத்தனையோ சித்தாடி. புத்துமூடி சத்தி வடிவேலனைப் நிற்கும் சாட்சாத். சித்து விளையாட்டிலும், முத்தி நிலை நாட்டிலும், திருவாரூர்த் தெட்சிணமூர்த்தியும் தென்பனையூர்த் தெட்சிணமூர்த்தியும் ஒன்று என்றே கூறலாம். இப்பெரியாரின் விரிவான சரிதம் இம்மூர்த்தி ஆலயத்தில் மடாதிபதியான குன்றக்குடி மகாசன்னிதானம் ஸ்ரீ கணபதி சாமிகள் முன்னிலையில் 1930ல் அரங்கேற்றப் பெற்றதும் குன்றக்குடி வைத்தியர் என்னும் வரகவி மு. கணபதியா பிள்ளையால் இயற்றப் பெற்றதுமான "பனையூர் பன்மணி மாலை" என்ற நூலில் கலிவெண்பாவாகக் கூறப்பட்டிருக்கின்றது. அச்சரிதத்தை விளக்கித் தமிழ் உரைநடையில் "தென்பனையூர்த் திருவிளையாடல்" என்னும் புத்தக மூலமாக இனி வெளியிடப்படும்.

கைமாறு கருதாது பெய்யும் மழைபோல் பெரியோர்கள் எல்லோருமே மக்கள்பால் கருணைமேலிட்டு அவரவர் பக்குவத்துக்குத் தக்கதாக பலசரக்கு மளிகைபோல் பல கலை ரகசியங்களையும் ஒளியாமல் அருளியிருக்கின்றனர்.

அவற்றில் ஒன்று பஞ்சலோக வேதைக் கலை. இக்கலையின் உண்மையை, வெந்தழலில் இரதம் வைத்து ஐந்து லோகத்தையும் வேதித்து விற்றுண்ணலாம் என்று. தாயுமானவரும் எடுத்துக் கூறியிருக்கின்றார். கவிகளாகப்பாடி உரை தேடி பரிபாஷைகளால் வாடிக்கொண்டு மலையாமல் எளிய தமிழ் உரைநடையில் இந்த ரசாயன நூலை ஆன்றோர் ஆக்கியிருப்பதே இந்நூலுக்கு ஒரு தனிச்சிறப்பாகும். ராமகிரியார் தன் சீடர் சங்கரநாராயணரிடம் கொடுத்த பலகலை ஏட்டுச்சுவடிகளில் இந்நூலும் ஒன்றாகும். குருபரம்பரையாக இவ்வேடுகள் கையாளப் பட்டவை. ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிகள் காலத்தில் அம்மகானுர் ஸ்ரீ நித்தியானந்த சுவாமிகளிடமும், எமது பிதா முத்துசுவாமி பிள்ளையிடமும் உபதேசக்கிரமமாய்க் கொடுத்த ஏட்டுச்சுவடிகள் பல. இவற்றுள் எமது பிதாவிடம் கொடுக்கப்பெற்றிருந்த ஏட்டுச்சுவடிகளையும், குன்றக்குடியில் காட்டுச்சாமி ரெட்டிச்சாமி நாமச்சாமி என்றெல்லாம் மக்களால் போற்றப்பட்டு வந்த மகானுபாவர் ஸ்ரீ மவுனசாமிகள் எமக்கு உபதேசக்கிரமமாய்க் கொடுத்த சுவடிகளையும், இளமைதொட்டே பல வருடங்களாக யாம் ஆராய்ந்து வரும்பொழுது இச்சுவடியும் தென்பட்டது. இம்முறைகள் மிக எளிதாகவும் ஐயந்திரிபின்றியும் புலப்படுகின்றமையால் இதை ஒரு புத்தக வடிவாக்கி வெளியிட்டால் எத்தனையோ வேதைபிரியர்கட்கு ஒத்தாசை செய்ததாக இருக்குமே என்று எண்ணினன். ஏட்டிலிருந்த முறைகளை நோட்டிற்குக் கொண்டு வந்து நோட்டிலிருந்து அச்சுபாரச் சீட்டில் வரைந்து கூடுமான வரை விளக்கியும் திருத்தியும் வெளியிட முன்வந்தனம். புத்தகக்கடை வைத்திருப்பவர்கள் எல்லோருமே பெரிய வித்துவான்கள் என்று எண்ணிவிட முடியாது. இந்நூலை வெளியிடுவதால் இக்கலையில் இவருக்கு மிக்க அனுபவம்

உண்டு என்று மொய்க்க ஆரம்பித்துவிடக் கூடாது. அந்தந்தக் கலையின் அருமையும் பெருமையும் அந்தந்தக் கலைஞர்கட்கே சந்தேகமற விளங்கும். இந்நூலில் குற்றம் குறை தவறுதல் இருப்பினும் கற்று அறிந்தோர் சீனியும் மணலும் விரவியிருந்தாலும் மணலைநீக்கி சீனியைக்கொள்ளும் எறும்புபோல் அனுபவிகளைக்கொண்டு திருத்தம் செய்து பொருத்தமானதை உணர்ந்து நம்நாட்டுச் சித்தாதிமுனீசுரர் பெரியோர்களின் பேராற்றலும் பெரும உழைப்பும் தியாக புத்தியும் உள்ளூர உணர்ந்து பூரிப்பார்கள் என்றே நம்புகின்றனம்.

**வெண்பா.**

**சீராரும் தென்பனையூர்ச் சித்தர்பிரான் ராமகிரி**
**நாராரும் சங்கரநா ராயணரை—பேராரும்**
**தெச்சிணா மூர்த்திதனைச் சிந்தித்தா லிந்தவித்த**
**லச்சணமே தோன்று மகத்து**

**சித்தசன் மார்தட்டாச் சீரார் வடலூரின்**
**சுத்தசன் மார்க்கத் துறைநிறுவும்—உத்தமராம்**
**ராமசாமி ரெட்டிமணி ராமகிரிச் சித்தரினால்**
**தாமகிழ்ந்தச் சிட்டீந்தார் தான்.**

மதுரை வைத்திய ஜோதிட வரகவி
*மு. கணபதியா பிள்ளை.*
*1961.*

## காலம், அளவு, புடம், எரிப்பு, ஊது திட்டங்கள்.

1 நாள் = 8 சாமம். இரவு பகல் 24 மணி நேரம்.
1 சாமம் = 3 மணிநேரம். 1 மணிநேரம் = $2\frac{1}{2}$ நாழிகை.
1 நிமிடம் = $2\frac{1}{2}$ விநாடி. $3\frac{3}{4}$ நாழிகை = 1 முகூர்த்தம்.
4 நெல்லெடை = 1 குன்றிஎடை.
$3\frac{1}{2}$ குன்றிஎடை = 1 பணஎடை. 10 வராகன் = 3 ரூபா எடை.
10 பணஎடை = 1 வராகனெடை.
1 வராகனெடை = 32 குன்றிஎடை. $1\frac{3}{4}$ தம்பிடிஎடை.
1 கழஞ்சி = மாகாணி பலம். 40 குன்றிஎடை-2 தம்பிடிஎடை.
$1\frac{1}{4}$ வராகனெடை = 1 கழஞ்சி. 5 சேர் = 1 விசை.
24 ரூபாயெடை = 1 சேர். வைத்தியபலம் 1 = 3 ரூபா எடை.
1 உரி = அரைப்படி. (பட்டணம் படி)
2 படி = 1 குருணி or மரக்கால். 4 படி = 1 பதக்கு. 2 மரக்கால்.
8 படி = 1 தூணி. 24 படி = 1 கலம்.
வெருகடி 5 விரல்நுனி பிடிஅளவு. திரிகடி 3 விரல்பிடிஅளவு
6 ரூபா எடையுள்ளது ஒரு எரு. 2 எரு காடைப்புடம்.
3 எரு கவுதாரி புடம். 10 எரு குக்குடப்புடம்.
50 எரு வராகபுடம். 100 எரு கஜபுடம். 1000 எரு கனபுடம்.
1 துருத்தி ஊதுவது கன்னம். 2 துருத்தி உருக்கு.
4 துருத்தி சத்துஉலை. இருவிரல்கன விறகு 1 தீபாக்கினி.
2 விறகு கமலாக்கினி. 5 விறகு காடாக்கினி.
காற்றில் கட்டுவது வாயு புடம். ஜலத்தில் அமிழ்த்துவது ஜலபுடம். நெல்லில் வைத்து மூடுவது நெல்புடம்.
சூரியனில் வைப்பது ரவிபுடம். புகையடங்கி இடுவது அவி புடம். மணல்மூடி இடுவது மணல்புடம் உமியில் எரிப்பது உமிப்புடம். குழிதைலம்எடுப்பது குழிதைலபுடம். குழிக்குள் புடமிடுவது குழிப்புடம். குப்பியில்வைத்து எரிப்பது குப்பி புடம். வாதம் காற்று. பித்தம் நெருப்பு. சேத்துமம் ஜலம்

மிகினும் குறையினு நோய்செய்யு நூலோர்
வழிமுதலா வெண்ணிய மூன்று—(குறள்)

# ஸ்ரீ பழனியூராண்டவர் குருமூர்த்தியான
# ராமகிரிச் சித்தர் ரசாயன சாத்திரம்.

---

## 1 பாதரசக் கட்டு

வேலிப் பருத்தியைப்போல் வேலிகளில் படர்ந்திருக்கும் பாலாட்டின் குழை. இதன் கொழுந்தைக் கிள்ளி நுகர்ந்தால் தும்மல் வரும். இதைக் குருட்டுக்கோழியவரை என்றும் கூறுவர். இதன் இலைகளை சில கிராமவாசிகள் கறி சமைத்தும் உண்பர். இதன் சாறு தண்ணீர்போல் இருக்கும். இதன் இலைகளை கசக்கிப் பிழிந்த சாறு உள்ளங் கையில் விட்டு அதில் பாதரசம் போதுமானது விட்டு விரலால் மத்திக்க அந்த ரசம் உருட்டும் பருவமாக வரும். இதை, உளுந்து அரைத்துச் செய்த குகைக்குள் வைத்து ஷை சாந்தினுல் குகை வாய் மூடி, சற்று உலர்த்தி, குகை மூடும் அளவாக சதுரமாகக் கிழித்த துணிகளை செம்மண் குழைத்த குழம்பில் தோய்த்து ஒன்றன் மேல் ஒன்ருக நான்கு சீலை மண் செய்து உலர்த்தி, காற்றில்லாத ஒரு மூலையில், இரண்டு படி வரகுத் தானிய உமிக்குள் வைத்து இரவு நேரம் புடமிட்டு பகல் நேரம் ஆறினபின் எடுக்கவும். இப்படியே உளுந்து மாக் குகைக்குள் வைத்து 40 புடங்களிட்டால் ரசம் மணியாய் வெள்ளிபோல் உருகி ஆடும். இது கம்பி தகட்டிற்கும் வரும். வேதை முறைப்படி போவது வாதிகள் கடமை. 125வது முறையை கவனிக்கவும்.

## 2 கருங்கோழியண்டரசமணி (கவி)

ஞானிக ளண்டந்தன்னில் நடுவினில் பொருந்துமுள்ளே
சூதகந் தன்னைவார்த்துத் தொக்கவாய் மெழுகுசெய்து

ஊனினை யடக்கியுள்ளே ஒக்கவே பொறித்தபின்பு
மேனியில் வந்தசாற்றால் வெந்தபின் குளிகையாச்சே 1

குளிகையை வாயிலிட்டுக் குலமன்னர் முன்னேசென்றால்
பழிபடு தலையுமீளும் பன்னிரு காதமட்டும்
வழிதனைத் தொலைக்கும் பொல்லா வழக்குடன் தூதுசெல்
[லும்
அழகுடல் தனமறைக்கு மம்புகுண்டகலுந்தானே, 2

---

இரத்த முதல் எல்லாம் கருப்பாக இருக்கும் கருங்கோழி இனத்தின் கன்னிக் கோழி முதன் முதலாக முட்டையிடும் போது, அதன் முதலாவது முட்டையை எடுத்து, சிறிது துளையிட்டு, அதனுள் 2 கழஞ்சி ரசம் விட்டு. துளையின் வாயை, மெழுகால் அடைத்து மூடி, அக் கோழியின் மற்ற முட்டைகளோடு இந்த முட்டையும் சேர்த்து அடைவைத்து குஞ்சு பொறித்தபின் இந்த முட்டையை எடுத்து அதனுள்ளிருக்கும் ரசத்தை ஒட்டிலிட்டு சிறு தீ எரித்து குப்பைமேனிச்சாறு சுருக்கிட அந்த ரசம் மணியாகும் என்பது ஷி கவியின் உரை.

## 3 துருசு ரசக் கட்டு

ஒரு இரும்புச் சட்டியின் உள்பாகத்தை வெள்ளிபோல் விளக்கி, அதில் 4 பலம் துருசுத்தூளிட்டு 2 பலம் ரசமும் விட்டு, அவை முங்கும்படி எலுமிச்சம்பழச் சாறு விட்டு அசையாமல் ஒரு மூலையில் 3 நாள் வைத்து 4ம் நாள் எடுத்து நீர்விட்டுக் கழுவிப் பார்க்க ரசம் கட்டி அந்தச் சட்டியில் அப்பிக்கொண்டிருக்கும் அந்த ரசத்தை கல் வத்தி

விட்டு ஜலம் வார்த்து அறைத்துக் கழுவ மின்னிப் பிரகாசிக்கும். இதனால் விக்கிரகங்கள் செய்தும் பூசிப்பர். இதற்கு மேல் சோற்றுப்புக்கட்டு கவசித்து புடமிட்டு, செந்தூரம் செய்து, வியாதிக்கும் வேதைக்கும் பயன்படுத்துவர்.

## 4 நீர்மல உப்பில் பாசாண ரசக்கட்டு

தன் மலம் மண் படாமல் உலர்ந்தது போதுமானது ஒரு பாண்டத்திலிட்டு தீ எரித்துக் கருக்கி சாம்பலாக்கி அதில் பள்ளிச் சிறுவர் மூத்திரம் குருணி விட்டு கலக்கி தெளியவைத்து, அந்தத் தெளிவை இறுத்து ஒரு பாண்டத்தில் விட்டு சுண்டக் காய்ச்சினால் உப்பு பானையுள் படிந்திருக்கும். அந்த உப்பைச் சுரண்டி எடுத்துப் பத்திரப் படுத்தவும். இந்த உப்பில் சிறிது எடுத்து சிறுநீரால் அறைத்து, குகை பிடித்து அதனுள் பாசாணம் 2 கழஞ்சி வைத்து மூடி மேல் சீலை மண் செய்து உலர்த்தி, கதுவாலிப் புடமிடக் கட்டும். இப்படிக் கட்டின பாசாணத்தை அறைத்துக் குகை பிடித்து அதனுள் ரசம் விட்டு மூடி சீலை மண் செய்து சிறு புடமிட அந்த ரசம் கட்டும்.

## 5 மூலப் புளி வேதை

தன்மலம் ஒட்டிலிருந்து, சிறுநீர் விட்டுக் கலக்கி 7 நாள் வைத்து புளித்தபின், தெளிவை இருத்து பீங்கானி விட்டு ரவியில் காயவைத்து, அந்த உப்பை எடுத்து, இந்த உப்பு பலம் 7½ நெல்லிக்காய்க் கெந்தகம் பலம் 7½, கல்வத்தி லிட்டு சிறுநீரால் 15 நாள் இரவும் பகலும் விடாமல்

அறைத்து, பாசிப்பயறு அளவாக உருட்டி இரு விரலால் அழுத்த துவரைப் பருப்புப் போலாகும். இவ்விதம் செய்த வில்லைகளை 8 நாள் உலர்த்தி, கனத்த சீசா நிறம்ப அடைத்து, சீசாவின் வாயில் பன்றி மயிரின் கத்தை சொருகி ஒரு வாயகன்ற மண்தாழியின் தூரில் ஷை சீசாவின் கழுத்து நுழையும் துளையிட்டு ஷை சீசாவை தலைகீழாக அதில் சொருகி அடுப்பின்மேல் வைத்து அந்த அடுப்புக் குள் சீசா வாய்க்கு நேராக ஒரு கோப்பையை வைத்து அந்தத் தாழிக்குள் சீசா மறைய மணல் கொட்டி மூடி அந்த மணலின்மேல் 40 எரு அடுக்கி புடமிடவும். அடுப் புக்குள் இருக்கும் கோப்பையில் தைலம் இறங்கும். இந்தத் தைலத்தைப் பத்திரப்படுத்தவும். ஒரு ஓட்டில் 10 செம்புக் காசுகள் இட்டு ஷை தைலம் ஒன்றிரண்டு சொட்டு விட்டு அந்தக் காசுகளை விரவி ஓடு மூடி சீலைமண் செய்து கதுவா லிப்புடமிட்டு ஆறி எடுக்க அந்தக் காசுகள் பழுத்து இருக்கும்.

## 6 மூலப் புளி உப்பு வேதை

மண்படாமல் காய்ந்த தன் மலம் பலம் 6. நெல்லிக் காய்க் கெந்தகம் பலம் 9. தன் சிறுநீரால் 13 நாள் இர வும் பகலும் அறைத்து, முன் முறைப்படி வில்லைகள் செய்து 8 நாள் உலர்த்தி முன் முறைப்படி தைலம் இறக்கிப் பத்தி ரப்படுத்தவும். முன் முறைபோல் செம்புக் காசுகளில் விரவி புடமிட்டு ஆறி எடுக்க பழுக்கும். இவை மகான்க ளின் மகா ரகசிய முறை.

## 7 பொன் வைப்பு

புளி இலையை எலுமிச்சம்பழச்சாறுல் அறைத்து நல்ல செம்புத் தகட்டில் பூசி சோத்துக் கத்தாளை மடல் பிழந்து அதனுள் வைத்து மூடி சீலை மண் செய்து 10 எரு புடம் இப்படி 3 புடமிட செம்பின் களிம்பு நீங்கி வர்ணமாகும். இந்தச் செம்பே வேதைகளுக்கு உரியதாகும். இத்தகைய செம்பு ராவின தூள் 12 தோலா எடுத்து, அவுரி இலை இடித்துப் பிளிந்த தனிச்சாறு அது முங்கவிட்டு அந்தப் பாத்திரத்தோடு 2 நாள் ஊறவைத்து, 3ம் நாள் அந்தச் செம்பை ஈரத்தோடு எடுத்து, துத்திச் செடியின், இலை, பூ, பிஞ்சுகளுடன் பறித்து, இடித்து அறைத்து குகை செய்து அந்தக் குகையுள் ஷெ செப்புத்தூளை ஈரத்தோடு வைத்து, சாந்து மூடி சீலை மண் செய்து, வீட்டு எரு 12ல் புடமிட்டு, ஆறி எடுத்துப் பார்க்க இந்தச் செம்புத் தூள்களில் பாதி தங்க நிறமாகவும் பாதி சுத்தமான தாமிர நிறமாகவும் கலந்து காணும். இப்படி இல்லாவிட்டால் தான் செய்தது தவறு என்று எண்ணி மறுபடியும் முன்போல் செய்யவும் அந்த நிறம் வரும். அதன்பின் அந்தத் தூளோடு, ரசம் வெள்ளைப் பாசாணம், சுத்தக் கட்டி வெள்ளிப்பொடி வகைக்கு ஒரு கழஞ்சி வீதம், சேர்த்து அறைத்து விரவி, பொக்கணம் தூக்கி மூலிகை என்னும் முடக்கற்றான் இலை அறைத்த குகைக்குள் வைத்து மூடி சீலைமண் 5 செய்து, முன்போல் புடமிட்டு ஆறி எடுக்கவும். அந்தக் கவசங்களை நீக்கி உரசிப்பார்க்க 6 மாற்று இருக்கவேண்டும். தவறி னுல் தன் செய்கை தப்பிதம் என்று எண்ணி மறுமுறையும் ரசம் முதலியவை சேர்த்து முன்போல்புடமிட சொன்னபடி இருக்கும். 6 மாற்றுக்கு மேலும் காண்பது அனுபவசாலி

கள் அறிவர். அதன்பின் அதை குடைகரியுள் வைத்து உமியோட்டில் உருக்கி குரடால் எடுத்து, கரியோடு ஜலத்தில் முக்கவும். பின்பு வெடியுப்பு சீனிக்காரம் சமமாக எடுத்து எலுமிச்சம்பழச் சாற்ருல் அறைத்து, ஷெ உருகின கட்டிக்கு தடவி, உமி ஓட்டில் கரி நெருப்பிலிட்டு புரட்டிக் கொடுத்து எடுத்து வேண்டிய விதம் செய்துகொள்ளலாம் தாய் என்ற தங்கம் சேர்த்தும் மாற்றை உயர்த்திக் கொள்ளலாம்.

## 8 வெள்ளீய வெள்ளி

இலுப்பை இலையை காடி நீரின் தெளிவு விட்டு இடித்துப் பிழிந்த சாற்றில் வெள்வங்கத்தை உருக்கி இரண்டு தபா சாய்த்து பின்பு எருமைச் சாணி கரைத்த நீரில் சாய்த்து, வேப்பிலே சாறிலும் சாய்க்க வலியும். அதன்பின் இந் நூலில் கூறியுள்ள சாறுவரா முலிகையில் சாறுவரச் செய்யும் குருச்சிந்தூரம் ஒரு மா அளவு எடுத்து, நந்தியா வட்டை இலேகளே உரலில் இடித்து ஷெ சிந்தூரம் விரவி இரவு முழுதும் வைத்துப் பிழிய சாறு வரும். அந்தச் சாருல் ஷெ வெள்ளீயத்திற்குச் சுருக்கிட நீர் நீங்கி வெள்ளியாம்.

## 9. நாகக்கட்டு, சிந்தூரம்.

குப்பைமேனி இலேயும் சோற்றுப்பும் நிதானமாகச் சேர்த்து அறைத்து நாகம் கழஞ்சிக்கு பொதிந்து மூடி அதன்மேல் செவ்வாமணக்கின் பட்டையும் இலேயும்

முத்தும் சமமாக அறைத்து பொதிந்து சீலமண் செய்து காட்டு எருவில் கோழிப்புடமிட கட்டும். இதைச் சிந்தூரம் செய்யவேண்டின் பெருஞ் செருப்படி பச்சிலைக்கு முன் முறைப்படி குருச்செந்தூரம் கொடுத்து எடுத்த சாறு சுருக்கிட சிந்தூரமாம் இந்த செந்தூ.ம் ஒரு மா எடுத்து ஒரு கழஞ்சி சுத்த தாமிரத்திலிட பழுக்கும்.

## 10 அயச்செம்பு வேதை

பூனைக்காலி விதையை குப்பைமேனிச் சாறுல் அறைத்து அந்தச் சாறில் கலக்கி, கொட்டிலாத்துச் சல்லிகளை உலையில் வைத்து பழுக்கக் காய்ச்சி அதில் தோய்க்கவும். இவ்விதம் 6 தபா செய்து, அதன்பின்: நீர்மேல் நெருப்பு, மூலிகையின் விதையை எலுமிச்சம்பழச் சாறுல் அறைத்து அந்த பழச் சாறில் கலக்கி இதில் முன்போல் 6 தரம் தோய்க்க செம்பாம். இந்த செம்பு உலையிலிட்டு உருகும்போது இந்த செம்பு கழஞ்சி தங்கத்திற்கு கொடுக்கவும் இந்தப்படி 3 தபா கொடுத்து மாற்ற செம்பாம். இதை வெள்ளியில் எடைக்கு எடை கொடுக்கவும்.

## 11 தாரரசம். தங்கசிந்தூரம்

பொன்னரிதாரம் சுத்தித்து கழஞ்சி 4, ரசம் கழஞ்சி 4 இதை எலுமிச்சம்பழச் சாறுல் அறைத்து பதங்கமாக எரிக்க தங்க சிந்தூரமாம். சுத்தித்த பொன்னரிதாரம் தோலா எடை 3 எலுமிச்சம்பழச் சாறுல் அறைத்து குகையும் மூடியும் செய்து அதனுள் வீரத்தூள் சிட்டிகை அளவு இட்டு

அதன்மேல் ரசம் தோலா 3விட்டுஅதன்மேல் சிட்டிகை வீரத் தூளிட்டு மேலே ஷெ சாந்து பொதிந்து மூடி, 4 சதுரமான சீலமண் செய்து, மணலில் மூடி 5 எரு புடமிட்டு ஆறி எடுத்து மருந்தை பழச் சாறுல் அறைத்து முன்போல் 10 எரு புடம் அதன்பின் அறைத்து முன்போல் மணல் மறைவில் 50 எரு புடமிட ரோஜாப்பூ நிறமான சிந்தூரமாம். குன்றி எடை அனுபானங்களிலிட சயரோக முதல் சகல ரோகமும் தீரும். தங்க சிந்தூரத்திற்கு மேலான குணம் இது தரும்.

## 12 உப்புக் கட்டு

கருக்குவாய் பட்டை அறைத்த குகைக்குள் சோற்றுப்பை வைத்து சீல மண் செய்து 15 எரு புடமிடவும் இப்படி 10 புடமிட உப்பு கட்டும். இப்படி கட்டின உப்பு கவசித்து புடமிட சகல சரக்கும் கட்டும். முறையாகத் தயாரித்த ஆறுமாதக் காடி நீரால் அறைத்து முன்போல் 10 புடமிட்ட சோற்றுப்பு, கடைசியாக சுண்ணும்பு நீறுள் வைத்து எரித்து எடுக்க கட்டாம். இதுவும் சகல சரக்கும் கட்டும். பண எடை அனுபானத்திட குன்மம் வாயு முதலிய பல நோய் நீக்கும். அடுக்குக் கல்லில் (சிமிண்டு செய்யும் கல்) இதை வெந்து எடுத்து சிறுநீர் விட்டு நீற்றி குகை பிடித்து அதற்குள் சோற்றுப்புக் கல்கள் வைத்து மூடி புடமிட கட்டும். அந்த உப்புக் குகைக்குள் நமச்சாரக் கட்டி வைத்து மூடி சீல மண் செய்து சிறு புடமிட நமச்சாரம் கட்டும். இந்த நமச்சாரம் நாகம் உருகும் முகத்தில் சிறிது கொடுக்க நாகம் கண்ணடங்கிக் கட்டும். இந்த நாகம் கட்டின தாமிரம் உருகும்போது சிறிது கொடுக்க பழுக்கும்.

## 13. நாகக்கட்டு.

இலுப்பை எண்ணெயில் 7 தபா உருக்கிச் சாய்க்க நாகம் சுத்தியாம். இந்த நாகம் மருதோணி இலை அறைத்த குகைக்குள் கழஞ்சி வீதம் வைத்து பொதிந்து புடமிட கட்டும்.

## 14. நமச்சாரக் கட்டு.

புளியமரத்தின் பொருக்குப் பட்டைகளை குவித்து தீ யிட்டு எரித்த சாம்பலை ஜலம் விட்டு கலக்கி அந்த தெளிவு நீரை இறுத்து ஒரு பாண்டத்திலிட்டு ஒட்டக் காய்ச்ச பாண்டத்தில் உப்பு படிந்திருக்கும் அதை ஓலையால் வழித்து எடுத்து வைக்கவும். இதில் சிறிது எடுத்து குப்பைமேனி சாறுல் அறைத்து குகை பிடித்து அதனுள் அரைப் பலம் நமச்சாரக் கட்டி வைத்துப் பொதிந்து சீலை மண் செய்து புடமிட்டு ஆறி எடுக்க நமச்சாரம் கட்டும். இது சிறிது நாகம் உருகும்போது கொடுக்க நாகம் கண் ணடங்கிக் கட்டும். இந்தச் சார பற்பம் குன்றி எடை அனுபானங்களிலிட குன்மம் பீலிகை கெண்டை சூதகக் கட்டுகளும் தீர்க்கும் சகல சரக்கும் கட்டும்.

## 15. பொரிகாரகட்டு வெள்ளைப்பாசாண கட்டு.

மடையன் என்கிற மடல் துத்தமும் சீனி வெள்ளைக் கல்லுப் பொடியும் சமமாக அறைத்து குகை செய்து அத னுள் பொரிகாரம் வைத்து சிறு புடமிட கட்டும். இந்தப் பொரிகாரத்தை அறைத்து குகைசெய்து அதனுள் வெள்ளைப் பாசாணக் கட்டி வைத்து பொதிந்து அதன்மேல்

நமச்சாரமும் சீனிக்காரமும் சமமாக அறைத்து கவசித்து நாலு சீலை மண் செய்து சிறு புடமிட பாசாணம் கட்டும். இந்த பாசாண குகைக்குள் ரசம் கட்டும். இது இரண்டி லொன்று தாமிரத்தில் கொடுக்க பழுக்கும்.

## 16. கரியுப்பு நீறு பாசாண வேதை.

கொடிக் கள்ளிப் பாலில் கரியுப்பு விரவி ஓட்டிலிட்டு வறுக்க நீருகும். இந்த நீரும் நமச்சாரமும் சரி எடையாக அறைத்து, வெள்ளைப் பாசாணத்திற்கு கவசம் கட்டி ஒரு இடுக்கியினுல் பிடித்து தீயில் நன்ருக வாட்டி எடுத்து அதை கொடிக்கள்ளிப்பால் விட்டு அறைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஓடு மூடி சீலைமண் செய்து நிதானமாய்ப் புட மிட்டு எடுத்து, இப்படி அந்தப் பாலால் அறைத்து 3 புட மும், அப்புறம் அறைத்து பாசாணத்தில் 5 புடமுமிடவும். பொரிகாரத்தை கொடிக்கள்ளிப்பாலில் தோய்த்து வெயிலி லிட நீருகும், அதை ஷெ பாலால் அறைத்து, அந்தப் பாசாணத்திற்கு கவசம் கட்டி கதுவாலிப்புடமிட நன்ருய்க் கட்டி உருகும். இந்தப் பாசாணம் நல்ல செம்பு கழஞ்சி ஒன்று உருகும்போது ஒரு மஞ்சாடி கொடுக்க எட்டு மாற்றுக் காணும்.

## 17 சிப்பிச் சேநீரில் தாளக நீறு வேதை

சிப்பிச் சுண்ணும்பு கழஞ்சி 3, நமச்சாரம் கழஞ்சி 3, சூடன் கழஞ்சி 2, சீனிக்காரம் கழஞ்சி 1. இந்த நாலுவகை மருந்தும் ஒன்று சேர்த்து கல்வத்திலிட்டு, வாயமுத நீர் விட்டு அறைத்து கோப்பையில் வைத்து, சாணி கறைத்து விட்ட தாழியில் பதித்து தாழி வாய்க்கு ஈரத்துணி வேடு

கட்டி காற்றுடா மூலையில் வைக்க ஜெயநீராம். இந்த சே நீரில் தாளகத்தை 3 நாள் ஊறப்போட்டு 2 நாள் ரவி காயவைத்து சீலையில் சுண்ணும்பு தடவி தாளகக் கட்டிக்கு 4 சீலை செய்து, அரசம்பட்டை சாம்பல், புளியம்பட்டை சாம்பல் வகைக்கு அரை நாழி கலந்து ஒரு கலசத்தில் பாதி யிட்டு மேல் கவசம் வைத்து மேலும் சாம்பல் மூடி சாமம் தீ எரிக்க தாளகம் நீரும். இந்த நீறு வெள்ளீயம் உருகும் போது சிறிது கொடுக்க அந்த வெள்ளீயம் நீருகும். இந்த நீற்றை வாயமுதத்தால் மத்தித்து வெள்ளித் தகட்டில் தடவி ஓட்டில் வைத்து சீலைமண் செய்து புடமிட அந்த வெள்ளி நீருகும். இந்த நீறும் ரசமும் எடைக்கு எடை சேர்த்து அறைக்க அந்த ரசம் நீருகும். இந்த நீற்றை வாயமுதம் விட்டு அறைத்து உருட்டி காயவைத்து, மணலை நன்ருய் வறுத்து கீழே கொட்டிப் பரப்பி அதன் நடுவில் ஷ்டி உண்டையை வைத்து மேலும் வறுத்த மணல் கொட்டி மூடி ஆறவிட்டு எடுக்கவும். இப்படி வறுத்த மணல் புடம் 3 இட்டு எடுத்து, தங்கத்தகடு பொடியாக வெட்டி ஷ்டி நீறு சரி எடை கூட்டி ஒரு குகைக்குள் வைத்து சீலை செய்து புடமிடவும். இப்படி 2 புடமிட நீருகும். இந்த நீற்றை தாரி வெள்ளி 20க்கு ஒன்று கொடுக்கப் பழுக்கும். இந்த நீற்றை அனுபானங்களில் குன்றி எடை கொடுக்க சய ரோக முதல் சகல ரோகமும் நிவாரணயாம்.

## 18 பாசாணக் கட்டு வேதை

வெள்ளைப் பாசாணமும் சவுக்காரமும் சரி எடையாக எலுமிச்சம்பழச் சாறுவிட்டு அறைத்து உண்டை செய்து, ஒரு சட்டியுள் வைத்து அதன்மேல் ஒரு செம்புக் கிண்ணம்

கவிழ்த்தி மூடி அந்தக் கிண்ணவாய் சூழ பசையிட்டு ஒட்டி அதன்மேல் மணல் கொட்டி மூடி அடுப்பில் வைத்து ஒன்றரை மணி நேரம் எரிக்கவும். பிறகு ஆறினபின் எடுத்து ஒரு செங்கல்லை துளைத்து அதனுள் சோற்றுக் கத்தாளைச் சோறு வைத்து அதன்மேல் ஷ பாசாணம் வைத்து மேலும் சோறு வைத்து மூடி அந்த செங்கல்லுக்குப் பொருத்தமான வேறொரு செங்கல்லால் மூடி சீலைமண் செய்து குக்கிட புடமிடவும். இவ்விதமாக 3 புடமிட கட்டும். இது தாமிரத்தில் கொடுக்க பழுக்கும். செங் கொடிவேலி வேர் முலைப்பாலால் அறைத்து தாமிரம் உருகுமுகத்தில் கொடுக்கினும் பழுக்குமாம்.

## 19 பூ நீறுச் சுண்ணம்

உவர் நிலங்களில் அதிகாலையில் கதிர்போல் முளைத்திருப்பது பூ நீறும். இதைச் சுத்தி செய்தது சோடா உப்பென விற்கப்படுகிறது. இந்த உப்பும் சகல சரக்கும் கட்டும். உவர் நிலத்தில் பொறுக்கி எடுத்த பூ நீறு பலம் ½ வேலிப்பருத்தி சாறுல் 2 சாமம் அறைத்து வில்லை செய்து ஓடு மூடி சீலைமண் செய்து கதுவாலி புடமிடவும் இவ்விதம் 5 புடமிட கடும் சுண்ணமாம். இதோடு துருசு சவ்வீரம் ரசகற்பூரம் சம எடைகளாக சேர்த்து ஷ சாறுல் அறைத்து வில்லை தட்டி காயவைத்து சுண்ணும்பு நீறுள் வைத்து எரித்து எடுக்க கடும் சுண்ணமாம். வீரம்பூரம் சேராமல் துருசு மட்டும் சேர்த்துப் புடமிட்டால் சிந்தூரமாம். இச் சிந்தூரம் அரிசி எடை அனுபானங்களிலிட, குன்மம், குட்டம் சகல நோய் தீர்க்கும். தைலம் லேகியம் சூரணங்களிலிட அவை கட்டும். இதால் சகல சரக்கும் கட்டும். குளிகை

பற்பங்களுக்கு பண எடை கூட்டவும் வேதைகளுக்கு இது ஆதியாம்.

## 20 பூ நீறில் எழுவகை சேநீர் பிரிப்பது

உவர் மண்ணுள்ள பூமிகளில் சித்திரை வைகாசி மாதப் பௌர்ணமி தினத்தில் சூரியோதயத்திற்குமுன் கதிர்போல் ஒன்று இரண்டு அங்குல அளவில் பூத்துக் கிளம்பி இருப்பது பூ நீறும். இதை மண்படாமல் எடுத்து 10 விசை அளவாக ஒரு பீங்கானில் இட்டுக்கொண்டு, ராமேசுவரத்தில் சீதை மஞ்சள் என்று சொல்லும் மான் கொம்பு போன்ற கவர்களுள்ள கடற்கல்லை ஒரு பாண்டத்திலிட்டு மூடி சீலமண் செய்து, உலையில் வைத்து ஒருமணி நேரம் ஊதி எடுக்க சுண்ணமாம். இது குருச்சுண்ணம் என்பர். இந்த சுண்ணத்தில் ஒரு சிட்டிகை எடுத்து ஷ பூ நீறில் தூவி விரவி பகலில் சூரியவெப்பத்திலும் இரவில் சந்திர ஒளியிலும் வைக்க முதலில் எண்ணை போன்ற திராவகம் வெளிப்படும். அதை புட்டியில் அடைத்துக்கொண்டு பிறகு அந்த பூ நீறை 2 நாள் வெயிலில் காயவைத்து ஷ குருபற்பம் சிட்டிகை கலந்து முன்போல் ரவியிலும் நிலவிலும் வைத்து அடியில் ஒரு தட்டை பீங்கானில் சாய்வாக வைக்க, வேறு நிறமாக சேநீர் பிரியும். இதையும் வேறு புட்டியில் பதனம் செய்யவும். பின்னரும் பூ நீரை 2 நாள் காயவைத்து சிட்டிகை குரு சுன்னம் தூவி முன் முறை போல் செய்ய வேறுவிதமான சேநீர் பிரியும். இப்படி 7 தபா செய்ய 7 விதமான சேநீர் பிரியும். 7வது முறையில் சுத்த ஜலம் போன்ற சேநீர் பிரியும். இதையே சுத்த கங்கை என்பர். இதுதான் பூ நீற்றின் தீட்சை முறையாம். இப்படிச் சுத்திகரித்த கசியாத காரமுள்ள பூ நீறு பலம்

ஒன்று வீரம் விராகனெடை ஒன்று சேர்த்து, வேலிப் பருத்திச் சாறுல் அறைத்து வில்லை தட்டி உலர்த்தி ஓடு மூடி சீலைமண் செய்து 50 எருவில் புடமிடவும். மீண்டும் முன் போல் வீரம் கூட்டி அறைத்து புடமிடவும். இவ்விதமாக வீரம் கூட்டியே 10 புடமிட உயர்ந்த பூநீறுச்சுண்ணமாம். இதனுல் சகல சரக்கும் கட்டலாம். அனுபானத்தில் அரிசி வீதம் கொடுக்க சகல குன்மம் வாய்வு முதலிய நோய்களும் தீரும்.

> கோவானூருப் பொட்டலிலே குண்டுமணியம்மன் வீதி
> [யிலே
> சாவாமூலி முளைத்திருக்கு ததைச் சார்ந்துகும்மியடி
> [யுங்கடி.

என்று சித்தர்கள் பாடியிருப்பதும் இந்தப் பூநீறின் பெருமையை விளக்கித்தான் என்பது கவனிக்கத்தக்கது.

## 21 குருமுறை வங்க நீற்றின் தொடர்

கருவங்கம் கழஞ்சி ஒன்று தகடாகத் தட்டி, மனோசிலை கழஞ்சி அரை கோழிமுட்டை வெண்கருவால் அறைத்து அந்தத் தகட்டிற்குப் பூசி உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி சீலைமண் செய்து குக்கிட புடமிட அந்த வங்கம் பற்பமாம். அந்த பற்பம் ஒரு மஞ்சாடி எடுத்து கோழிமுட்டை வெண்கருவால் மத்தித்து வெள்ளித்தகடு கால் கழஞ்சிக்குத் தடவி ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலை மண் செய்து புடமிட அந்த வெள்ளி பற்பமாம். இந்த வெள்ளி பற்பம் கழஞ்சி அரைக்கால் வீரம் கழஞ்கி அரைக் கால் சேர்த்து வெள்ளைக்கரு விட்டு மத்தித்து, சித்தா

மணக்கு எண்ணெயில் 3 தபா உருக்கிச் சாய்ந்த வெள்ளியத் தகடு கழஞ்சி ஒன்றுக்கு பூசி காயவைத்து ஒடு மூடி சீலை மண் செய்து, புடமிட பற்பமாம். ஒரு கழஞ்சி ரசம் குகை யிலிட்டு உருகுமுகத்தில் இந்த பற்பம் ஒரு கழஞ்சிபோட்டு கிண்ட வெள்ளியாம். இது நாலுக்கு ஒன்று தாரியில் கூட்ட ஒன்பதரையாம்.

## 22 பொரிகாரக் கட்டு தொடர்

அப்ரேகத்தை ஆலம்பால் விட்டு அறைக்க மெழுகாம். இந்த மெழுகை பொரிகாரத்திற்குப் பொதிந்து புடமிட கட்டும். இப்படி கட்டின பொரிகாரத்தை அறைத்து நமச் சாரக் கட்டிக்குப் பூசி புடமிட நமச்சாரம் கடடும். இந்த நமச்சாரக் கட்டை அறைத்து துருசுக்கட்டிக்குப் பூசிப் புட மிட துருசு கட்டும். இவ்விதம் கட்டின துருசை அறைத்து நாகத்திற்குப் பூசிப் புடமிட நாகம் கட்டும். இவ்விதம் கட்டின கட்டுகளை அதனதன் முறைப்படி வேதையிலிடப் பழுக்கும்.

## 23 தாமிர வெண்ணீறு

சவ்வீரமும் நமச்சாரமும் சரி எடையாக முலைப்பால் விட்டு அறைத்து பிள்ளையன் காசு தட்டி அந்தக் காசில் தடவி ஒட்டில் வைத்து ஒடு மூடி சீலை மண் செய்து புடமிட தாமிரம் தூய வெண்ணீறும்.

## 24 ரசமணி உருகியாடிய சிந்தூரம்

கெட்டியான சீலையில் எருக்கலம் பாலூட்டி அதை நாலாக மடித்து அதன்மேலும் எருக்கலம்பால் நன்றாக

ஊட்டி உலர்த்தி அந்தச் சீலை நடுவில் கிராம்புத்தூள் ஒரு களஞ்சி பரப்பி அதன்மேல் ஆறு கழஞ்சி ரசம் விட்டு துளா யந்திரம்போல் கூட்டிக் கட்டி, ஒரு பானையில் ஊமத்த இலைச் சாறு ஞ்சாச் சாறு வகைக்கு இரண்டு படி விட்டு ஷெ ரச முடிப்பை சாறுள் தொங்கவிட்டு அந்தச் சாறு வற்றும் வரை எரித்து ஆறினபின் எடுக்க ரசம் நவநீதம் போல் இறுகி இருக்கும். அதன்பின் கொல்லன் கோவைக் கிழங்கும் கார்த்திகைக் கிழங்கும் சமமாக அறைத்து ஒரு குகைக்குள் பாதி வைத்து அதன்மேல் ஷெ ரச வெண்ணை யை வைத்து அதன்மேல் ஷெ சாந்து பாதியை வைத்து மூடி சீலைமண் செய்து குக்கிட புடமிடவும். இப்படி 2 புட மிட ரசம் கட்டி உருகும். ரசம் உருகும்போது வெற்றிலை பாக்கு மென்று அந்த உமிழ்நீர் சொரிய அந்த ரசம் மின் னிப் பிரகாசிக்கும். இவ்விதம் கட்டிய ரசம் மடல்துத்தம் வகைக்கு கழஞ்சி ஒன்று சேர்த்து அறைத்து ஒரு குளிகை யாக்கி, காக்காய் நிமிளை, மனோசிலை, நெல்லிக்காய் கெந்த கம் வகைக்கு ஒரு கழஞ்சி வீதம் சேர்த்து பூவரசின் காய்ச் சாறுல் அறைத்து அதன்பின் மஞ்சள் தைலத்தால் மத்தித்து அந்தக் குளிகைக்குப் பூசி, குகையில் வைத்து சில்லிட்டு மூடி சிலைமண் செய்து இலகுவான புடமிடவும், இவ்விதம் புடத்திற்குப் புடம் ஷெமருந்து லேபனம் பண்ணி குகையிட்டு முன்போல் 30 புடமிட மாதுளம்பூ நிறமான சிந்தூரமாம். இந்தச் சிந்தூரம் வெள்ளி 64க்கு ஒன்று கொடுக்க பனிரெண்டாகப் பழுக்கும்.

## 25 களங்கமற்ற தாமிர சிந்தூரம்

கெந்தகம் சேர்த்துப் புடமிட்டு வெட்டையாக்கின தாமிரத்தை செவ்வல்லிக் கிழங்கின் சாறுல் 2 சாமம்

அறைத்து வில்லை தட்டி ஓட்டிலிட்டு ஓடு மூடி சீலைமண் செய்து 30 எரு புடம் இவ்விதம் 10 புடமிட குங்குமம்போல் சிந்தூரமாகும். இனிப்பு களிம்பு முதலிய கெட்ட குணங்கள் இராது. அனுபானங்களில் ஒன்றிரண்டு அரிசி வீதம் கொடுக்க குன்மம் வாயு குட்டம் முதலிய கடூர நோய்கள் தீரும்.

## 26. துருசுக் குரு

குஞ்சு பொறித்த கோழிமுட்டைத் தோடுகளை ஒரு சட்டியிலிட்டு அதில் உவர் மண்ணும் தண்ணீரும் விட்டு கலக்கி வேகவைத்து இறக்கி ஜலம் விட்டு சவ்வு நீக்கி எடுத்துக் கழுவி உலர்த்த முட்டைத்தோடு சுத்தியாம். இந்தத்தோடு கழஞ்சி 4, வெள்வங்கம் கழஞ்சி 4 பொடியாகக் கத்தரித்து கல்வத்தில் அறைக்க வங்கம் மாயும். அதில் பாதியை வச்சிரக் குகையில் வைத்து அதன்மேல் துருசு கட்டி ஒரு கழஞ்சி வைத்து அதன்மேல் மருந்து பாதியிட்டு மூடி குகைக்கு சில்லு மூடி சீலைமண் செய்து கனபுடமாகப் போடவும் குருவாகும். எதற்கும் நாலுக்கு ஒன்று கூட்டவும்.

## 27 சாதிலிங்கம் கட்டி உருக

ஒரு ஓட்டில் சாதிலிங்கக் கட்டி ஒன்று வைத்து அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து ஒரு குச்சியின் நுனியில் துணி கட்டி அதனால் ஆதாளம்பால் தோய்த்து கட்டிக்குச் சுருக்குக் கொடுத்துக் கொண்டிருக்க அது கட்டும். இந்த லிங்கம் கழஞ்சி ஒன்று காரீயம் கழஞ்சி ஒன்று இது இரண்டும் வாயமுதம் விட்டு அறைத்து குகையில் வைத்து உருக்க

உருகும். அது உருகும்போது துத்தநாகம் பொடித்து கொடுக்கவும் களங்கமாகும். தாரி 20க்கு களங்கம் ஒன்று கொடுத்து, வங்கம் குத்தி ஊதிப் போடவும் பழுக்கும்.

## 28 அயச் செம்பு

இரும்பு அரபொடி கழஞ்சி ஒன்று மடல் துத்தம் கழஞ்சி ஒன்று லிங்கம் கழஞ்சி அரை, துருசு, ரசம் வகை கழஞ்சி கால்,பொரிகாரம் கழஞ்சி அரை கூட்டி அறைத்து வச்சிரக் குகையில் வைத்து சீலைமண் செய்து உலையில் வைத்து குகை பழுக்க உள்மருந்து உருக ஊதி எடுக்கச் செம்பாம்.

## 29 நாகம் கட்டி சிந்தூரமாக

செந்நாகம் கழஞ்சி ஒன்று வடிகட்டின சுண்ணும்பு பொதிந்து புடமிடவும். இப்படி 3 புடமிட நாகம் கட்டும். இந்த நாகம், ரசம் வகைக்கு கழஞ்சி ஒன்று நாகத்தை உருக்கி தொந்தித்து, புதுச் சட்டியிலிட்டு எலுமிச்சம்பழச் சாறு விட்டு இரண்டு சாமம் வறுக்கவும். பிறகு மனோசிலைத் தூள் கழஞ்சி 2 சன்னஞ் சன்னமாகத் தூவி வறுக்கவும் சிந்தூரமாம். இந்தச் சிந்தூரம் வெள்ளி 10க்கு ஒன்று கொடுக்கவும் பழுக்கும்.

## 30 மூலிகையில் ரசக் கட்டுகள்

முள்ளிப்பழம் என்னும் முள்ளுக் கத்திரிப்பழச் சாறு விட்டு ரசம் வேண்டியதை கல்வத்தில்அறைக்க, மணியாம். காரை முள் புரையிட்டு வைக்க இறுகி குளிகையாம். கயிறு கோர்த்து மூன்னரை கிடக்க சுக்கில தம்பனமாம். செப்புச்

சிமிழில் அடைத்து சிசுக்களுக்குக் கட்ட சகல தோஷம் பலவித நோய்களும் தீரும். இரண்டு எலுமிச்சங்காயளவு சடைக்கஞ்சாவை அறைத்துத் திரட்டி அந்த குகையுள் ஆறு கழஞ்சி ரசம் விட்டுமூடி சதுரக் கள்ளியைத் துளைத்து அதற்குள் இந்தக் கவசத்தை வைத்து அந்த மரத்தின் சக்கையால் துளைத்த பாகத்தை மூடி 41 நாள் சென்றபின் எடுத்து அதன்பின் மருதோணி இலை அறைத்த சாந்துள் வைத்து எடுக்க குளிகையாம்.

## 31 உருக்குமான வேதை

இரும்பு அரபொடி துத்தநாகம் உமிபோல் சீவியது வகைக்கு கழஞ்சி ஒன்று, முள்ளி இலை முருக்கு இலையும் சமமாக அறைத்து ஒரு குகையுள் பாதி வைத்து அதன் மேல் ஷி மருந்து வைத்து அதன்மேல் அறைத்த மூலிகை வைத்து மூடி சீலமண் செய்து உலரவைத்து உலையில் வைத்து நன்றாக ஊதி ஆறவிட்டு எடுத்து வெள்ளி 9 பண எடைக்கு ஷி சிந்தூரம் கால் பண எடை கொடுத்து நன்றாக ஊதி உருக்கி ஆறி எடுக்க 5ஆகப் பழுக்கும்.

## 32 சாதிலிங்கம் கட்டி வேதையாட

சாதிலிங்கம் கழஞ்சி ஒன்று ஓட்டிலிட்டு அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து எலுமிச்சம்பழச்சாறு படி அரைக்கால் சுருக்கிட்டு பின்பு மூலைப்பால் படி அரைக்கால் சுருக்கிட்டு எடுத்து காரீயம் வெடியுப்பு பொரிகாரம் வகை கழஞ்சி ஒன்று பொடித்து சட்டியிலிட்டு எரிக்க உருகும். அதில் ஷி லிங்கத்தைப் போட்டுப் புரட்டினால் அது லிங்கத்திற்கு கவசம்போல் பிடித்துக் கொள்ளும். அதை அப்படியே

எடுத்து சீலைமண் செய்து காடைப்புடமிடக் கட்டும். இந்த லிங்கத்திற்குச் சரியிடை தங்கம் கொடுக்க நொறுங்கும். அந்த எடைக்கு ரசம் கூட்டி அரைத்து சிறுபுடமிட்டு வைத்துக் கொள்ளவும். இது செம்பு 10க்கு ஒன்று கொடுத்து இந்தச் செம்பு வெள்ளி 7க்கு 3 கொடுக்கவும் பழுக்கும்

## 32-a வெடியுப்பு சேநீர் சூடசுன்ன வேதை.

வாழைக்கிழங்கும் கரிவாய்ப்பட்டையும் இடித்து ஒரு சட்டியுள் வைத்து அதில் சீனிக்காரம் வெடியுப்பு வைத்து மூடி சட்டிமூடி சீலைமண் செய்து எரிக்க பிட்டுப் போலாகும். அதை எடுத்து தீக்கொளுத்த சுன்னமாம். அதற்கு இரட்டிப்பாக சூடனில் பொதிந்து ஊத சுன்னமாம். அதிலே நமச்சாரம் கூட்டி அறைக்க செயநீராம். இதில் சூடன் துவைத்து சங்குச் சுன்னக் குகைக்குள் வைத்து மூடி பொதிந்து சீலைமண் செய்து ஊத சூடன் சுன்னமாம். இதை ஐந்து சுன்னக் குகையில்வைத்து வாட்ட கடும் சுன்னமாம். இந்த சுன்னத்தால் சரக்கெல்லாம் கட்டலாம். வேதையாடலாம். இந்த சூடன் சுன்னத்தை அறைத்து விரத்திற்குப் பூசி வாட்ட அது சுன்னமாம். இந்த விரச் சுன்னத்தை அறைத்து துருசுக்கட்டிக்கு அப்பி வாட்டி அஞ்சு சுன்னக்குகையில் வைத்து ஊத துருசு சுன்னமாம். இந்த எடைக்கு சாரம் கூட்டி அறைக்க சேநீராம். இதில் பூரம் தோய்த்து ஊத பூரம் சுன்னமாம். இந்த சேநீர் காண்டியில் விட்டு ரசம் விட்டு கொதிக்க வைக்க ரசம் கட்டி மணியாம். இப்படி ஒட்டி ஒட்டி தொந்திக்க நூறு தொந்தம் ஏறும். வேதைகண்டு நடத்த நவலோகமும் பேதிக்கும் பழுக்கும்.

## 33 கவுரி வெள்ளை தாளகம் சிலை கட்டு முறை.

அன்னபேதியை அறைத்து கவுரி பாசாணத்திற்குபூசி அதன்மேல் நீலி இலையை அறைத்துப் பொதிந்து சட்டியில் வைத்து அடுப்பேற்றி சிறு தீ எரித்து கால்படி ஆமணக்கு எண்ணை சிறுகச் சிறுக விட்டு வறுத்து கருகின உடன் எடுக்கக் கட்டும். இதுபோல், வெள்ளைப்பாசாணம், தாளகம், மனோசிலையையும் தனித்தனியே கட்டிக்கொள்ளலாம்.

## 34 சாதிலிங்கம் கட்டு சேநீ நீர் அயச் செம்பு வேதை.

துருசு, ரசம், கரியுப்பு வகைக்கு கழஞ்சி அரை, கல்வத்தில் அறைத்து வில்லை செய்து உலர்த்தி இரும்புக் கரண்டியிலிட்டு உருக்க சேநீராம். இந்த சேநீர் கழஞ்சி ஒன்று எடுத்து ஒரு கழஞ்சி சாதிலிங்கத்திற்குச் சுருக்கிட லிங்கம் கட்டும். அதை பத்திரப்படுத்தவும் அதன்பின் தலைமயிர், வெண்காரம், செப்புத்தொட்டி, இராசா விருத்தம் வகைக்கு கழஞ்சி ஒன்று சேர்த்து எலுமிச்சம்பழச்சாரால் அறைத்து கொட்டிலாத்துச்சல்லி (அயம்) கழஞ்சி 3 எடுத்து ஒரு குகையுள் முன்அறைத்த மருந்து பாதியை வைத்து அதன் மேல் ஷ சல்லியை வைத்து மேலும் ஷ அறைத்த பாதி சாந்து இட்டு மூடி 3 சீலைமண் செய்து உலையில் வைத்து உருக்க அந்த அயச்சல்லி செம்பாம். இந்தச் செம்பு 7 உருகும்போது ஷகட்டின லிங்கம் 3 கொடுத்து உருக்கவும். இந்தச் செம்பு 2ம் தாரி வெள்ளி 8ம் கூட்டி பொரிகாரம் வைத்து உருக்க அதிகம் பழுக்கும். குறிப்பு. அயச் செம்புகள் உருகாமல் கொத கொதத்தால் நாலைந்து நாக்கிளாம்

பூச்சிகளிட தண்ணீராய் உருகியாடுமாம். அக்கிராக்காரம் இரும்பை உருகச் செய்யும் மூலிகையாம்.

## 35 சவ்வீர வேதை

சவ்வீரம், ரசம் வகைக்கு கழஞ்சி ஒன்று. குப்பைமேனி சாறுலும் களச்சி இலைச்சாறுலும் அறைத்து பின்பு முட்டை மஞ்சள்கரு பொரிகாரமும் கூட்டி அறைத்து செம்புக் கிண்ணத்திலிட்டு அடுப்பேற்றி வறுத்து எடுத்து வைத்துக் கொண்டு, வெள்ளி கழஞ்சி ஒன்று உருகும்போது ஷி மருந்து ஒரு மஞ்சாடி கொடுக்க பழுக்கும்.

## 36 சர்வ நோய் நீக்கும் துத்தநாக சிந்தூரம்.

இலுப்பை எண்ணையும் பசு வெண்ணையும் இரும்புக் கரண்டியுள் தடவி, அதில் 10 பலம் துத்தநாகம் இட்டு உருக்கி கோமூத்திரத்தில் சாய்க்கவும். இவ்விதம் 3 தபா செய்து, வெள்ளாட்டுப் பாலில் 20 தபா சாய்க்கவும் அதன் பின் ஒரு சட்டியில் ஷி நாகம் 5 பலம் இட்டு அடுப்பு எரித்து உருகும்போது, 5ம் காய்ச்சல் வெடியுப்புபலம்5 அசமதாகம் பலம் $2\frac{1}{2}$, சுக்கு மஞ்சள் வகைக்குப் பலம் அரை, இந்த நாலு சரக்கும் பொடி செய்து ஷி நாகத்திற்கு சன்னஞ் சன்னமாகக் கிராசம் கொடுத்து வறுத்து பிறகு செந்நாயுருவி பொடியாக நறுக்கியது பலம் இரண்டரை சிறுகச் சிறுகப் போட்டு வறுத்து சுத்தியலால் மத்தித்து நடத்தி திரும்பவும் வறுத்து செங்களித்த நிறமாக வரும் பருவத்தில் இரும்புச் சட்டியை இறக்கி ஆறவைத்து கல்வத்தில் அறைத்து சீசாவில் பத்திரப்படுத்தவும். இந்தச் சிந்தூரம் திரிகடுகு தூள் வெருகடி எடுத்தும் தேன் குழைத்தும்,

குன்றி முதல் பண எடை வரை கொடுத்துவர, சர்வநோய், காசம், எலிகடி, பாண்டுவகை, ஈளை இருமல் மந்தாரகாசம், சுவாசகாசம் அரிகுரல், நெஞ்சு நோவு சிலேற்பன நோய் 96ம் தீரும். பித்தரோகம் 128 உஷ்ண நோய் 300 சுக்கிலப் பிரமேகம் 18 கல்லடைப்பு 17 சதையடைப்பு 16 குன்மம் 8 சோபாரோகம் 12 முகஎரிவு கைகால் எரிவு தீரும், ஆவரைப் பஞ்சாங்க சூரணம் வெருகடி எடுத்து பணஎடை சிந்தூரம் வைத்து ஆவரைத் தைலம் குழைத்து காலை மாலை 40 நாள் கொள்ள, நீரிழிவு சலக்கழிச்சல் 20 மூத்திரக் கிருச்சரம் 18 உள்ளுருக்கி 8 எலும்புருக்கி 6ம் தீரும். கொடிவேலிவேர்ச் சூரணம் வெருகடியில் பண எடை சிந்தூரம் கூட்டி தேன் மத்தித்து உண்ண சத்திகுன்மம் வலிகுன்மம் எரிகுன்மம் வாய்வு எலிகடி வாதம் 80 ஈளை இருமல் குட்டம் 18 சிரங்கு பத்து வயிற்றுக்கனப்பு வயிற்றுவலி சிலேற்பன கோபமும் தீரும். சிந்தூரம் அரைப்பண எடை புனுகு அரைப்பண எடையுடன் பேய்ப்பீர்க்கின் கூட்டுத்தூளும் மத்தித்து ஆண்குறியில் பூசிப் புணர ஸ்திரீயின் கெர்ப்ப ரோகம், மலட்டுப்புழு, கெர்ப்ப விப்புருதி, சூதகவாயு முதலிய நோய்கள் நீங்கி புத்திரப் பேறுண்டாம். இந்த சிந்தூரம் இ பண எடை எடுத்து மூலத்தில் தடவ மூல முளைகள் கரைந்துவிடும். சகலமூலரோகமும் தீரும். வேதை முறை அறிக.

## 37 வேதைக் குரு

சாதிலிங்கம் அரிதாரம் மனோசிலை கெந்தகம் வகைக்கு கழஞ்சி ஒன்று, தனித் தனி பொடித்துக் கலந்து வெள்ளிச் சிமிழில் அடைத்து வேலிப்பருத்திப்பால் விட்டு வெள்ளி மூடியால் அடைத்து, 7 சீலைமண் செய்து குழிக்குள் மழுக்

காரையின் கரியிட்டு அதுமேல் கவசம் வைத்து மேலும் கரி மூடி தீ எரிக்கவும். ஆறினபின் எடுத்து நல்ல வெள்ளி கழஞ்சி ஒன்றுக்கு ஒரு மஞ்சாடி கொடுக்கப் பழுக்கும்.

## 38 செம்புக் கட்டு

தாமிரத் தகடு தட்டி எருக்கலம்பாலில் 3 நாள் ஊற வைத்து எடுத்து உருக்கி குப்பைமேனிச் சாறில் சாய்க்கவும். அதன்பின் சுத்தித்த கோழிமுட்டைத்தோடு சீனி வெள்ளைக்கல் குப்பைமேனியும் சமமாக அறைத்து பொதிந்து புடமிடவும். இப்படி 3 புடமிட்டு அதன்பின் உருக்கி குப்பைமேனிச் சாறில் 3 தபா சாய்க்கவும். செம்பு கட்டும். வேதைக்கு ஒடாது.

## 39 அப்ரேகக் குரு தாமிர வேதை

அப்பிரேகம் வெடியுப்பு சமம் குப்பைமேனிச் சாறால் அறைத்து வில்லை தட்டி ஓட்டில் வைத்து மூடி சீலைமண் செய்து புடமிடவும். அதை எடுத்து செம்பு நாலுக்கு ஒன்று கொடுக்கவும். ஷெ ஒரு கழஞ்சிக்கு, வெள்ளீயம் கழஞ்சி ஒன்று உருக்கி அரிதாரம் கழஞ்சி ஒன்று தக்கிக்கவும். 3 தரம் உருக்கிவிட்டு அறைத்து பிறகு கெந்தகம் வெடியுப்பு வகை கழஞ்சி ஒன்று கூட்டி சேர்த்துக் கத்தாளைப்பாலால் அறைத்து வில்லை செய்து உலர்த்தி குகையிலிட்டு மூடி சீலைமண் செய்து புடமிடவும், இதை எடுத்து ஷெ தாமிரம் 4க்கு இது ஒன்று கூட்டி உருக்கவும். இதை நல்ல வெள்ளி 4க்கு ஒன்று கூட்டி உருக்கவும் பழுக்கும்.

## 40 வங்கமணிக் குரு பற்பம்

வெள்ளீயம் கழஞ்சி அரை தகடு தட்டி முதிர்ந்த ஆவரைப்பட்டை அறைத்துப் பொதிந்து சீலைமண் செய்து 7 எருவில் புடமிட பற்பமாம். இந்தப் பற்பத்தின் எடை ரசம் கூட்டி காற்ருடா அறையில் ஆறவைத்து கவசம் காயவைத்து 7 எருவில் புடமிட்டு எடுத்து மஞேன்மணியைப் பூசிக்கவும் என்ருர். இது ரசமணிக் குருவாக இருக்கலாம். இந்த ரகசியத்தை விவரம் தெரிந்தவர்கள் அனுபவத்தால் அறிந்துகொள்ளவும். ஷை வங்கபற்பம் ரசத்தில் கொடுக்க மணியும் ஆகலாம். ஷை பற்பம் யோகசித்தி ஞானசித்தி கவுனசித்தி தரும் என்றும் வேருெரு ஏட்டில் குறிப்பிட்டிருந்ததும் ஆனந்த மூலி என்பது இந்த முறையைக்கொண்டு ஆவரை என்றும் தெளியக் கிடக்கின்றது.

## 41 நாகச் செய நீர், லிங்க வேதை

நாகம் பலம் ஒன்று இரும்புக்கரண்டியிலிட்டு உருக்கி அதில் ரசம் பலம் ஒன்று விட்டு கல்வத்தில் கொட்ட மாவாகும் அதோடு கந்தகம் பொடி செய்தது பலம் ஒன்று சேர்த்து விரவி வீரத்தூள் பலம் ஒன்று தூவி கல்வத்தோடு ஒரு மூலையில் வைக்க புகையும். மேலே ஒரு கோப்பை மூடிவைக்கவும் செயநீராகும். இந்தச் செயநீரைப் பத்திரப்படுத்தவும், இது பெருமை மிக்க நீராம். 34வது முறையில் கூறியபடி கட்டின சாதிலிங்கமாவது அல்லது வேறு விதமாகக் கட்டின சாதிலிங்கமாவது இந்தச் செயநீரிலிட்டுத் துவைத்து அதன்மேல் தங்கத் தகட்டைப் பொதிந்து சுற்றி குறடால் பிடித்து தீபநெருப்பில் வாட்ட தங்கத்தை உள்ளே இழுத்துக்கொள்ளும் சிவப்பு ஆகும்.

இந்த தங்க லிங்கக் குரு வேதைகளிலிட பழுக்கும். இந்த செந்தூரமும் அந்த ரசநீரும் பல துறைக்கும் பயன்படும். வறுமையை நீக்கும் வாலையருளை நோக்கும் என்று கூறினர்.

## 42 வெடியுப்பு செயநீர் சவுக்கார எண்ணெ எடுக்க

5ம் காய்ச்சல் வெடியுப்பு பலம் ஒன்று புங்கமரத்தின் வேர்ப்பாலில் 5 நாள் ஊறவைத்து (ஷி வேர் பட்டை சீவி துவைத்து பிளிந்துகொள்க) பின்பு, எலுமிச்சம்பழச்சாறில் பூநீறு பலம் கால் கரைத்து தெளிவு இறுத்து ஷ்டி உப்பில் விட்டுக் கிளரி 5 நாள் உலர்ந்தபின், எலுமிச்சம்பழச்சாறில் புளியைக் கரைத்து வடிகட்டி அதில் விட்டு உலரவைத்து நன்ருய் உலர்ந்தபின் புங்கின் வேர் சீவி அறைத்து அதனைப் பொதிந்து கவசம் கட்டி ஒரு ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலமண் செய்து 20 எருவில் புடமிடவும். இந்த வெடியுப்பை நுணுக்கி ஒரு கோப்பையிலிட்டு சாணித் தாழியில் பதித்து சேநீர் முறைப்படி சேநீர் எடுத்து புட்டியில் பத்திரப்படுத்தவும். இந்தச் சேநீரில் சவுக்காரம் தோய்த்து வெயிலிலிட எண்ணெ கக்கும். அதன்பின் சிப்பிச் சுண்ணும் புள் வைத்து மூடி ஒரு சாமம் எரித்து ஆறி எடுக்க சவுக்காரம் நீரும் பிரயோகம் கண்டு நடத்திக்கொள்ளவேண்டியது. இது சிறந்த குருவாம்.

## 43. நிமிளை செம்பு வேதை

பொன்னிமிலையை காடித் தெளிவால் அறைத்து செம்புக்குப் பொதிந்து புடமிடவும், இப்படி 3 புடமிட்டு எடுத்து குகையிலிட்டு பொரிகாரம் கொடுத்து உருக்கி

இது ஒன்று வெள்ளி இரண்டு காரம் கூட்டி உருக்க பழுக்கும்.

## 44 கெந்தக மெழுகு வேதை

ஒரு கத்தரிக்காயை இரண்டாகப் பிளந்து அதனுள் கெந்தகம் வைத்து அந்தக் காயால் மூடி முக்கால் பலம் மூப்புரி நூல் சுற்றிக் கட்டி ஒரு புது சட்டியில் போதுமான தேங்காய் எண்ணெ விட்டு இதில் ஷ்டி காயைத் தொளா யந்திரமாகத் தொங்கவிட்டு சதிரோர் சாமம் தீ யெரித்து ஆறி எடுக்க கெந்தகம் மெழுகாகி இருக்கும். இந்த மெழுகு வெள்ளியில் கொடுக்க பத்தாகப் பழுக்கும்.

## 45 சேர்மான வேதை

நல்ல செம்பு 9 சருகுப் பித்தளை 6 துபாய் 5 சேர்த்து உருக்க தாரிவெள்ளி.

## 46 ரசக் கட்டு

சுண்ணுப்பு தடவின துணியில் துருசுக் கட்டியை முடிந்து, காரீயம் உருகும்போது அதில் முக்கி எடுக்க துருசு வெளுக்கும். அந்தத் துருசு நாலுக்கு ஒன்று பாசாணம் சேர்த்து அறைத்து வில்லை தட்டி உலர்த்தி ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலைமண் செய்து (அல்லது குகையில்) சிறு புடமிட்டு எடுத்து, இது 4 பங்கு பாசாணம் ஒரு பங்கு ரசம் ஒரு பங்கு வெடியுப்பு அரைக் கால் பங்கு கூட்டிக் குழப்பி இரும்புக் கரண்டியிலிட்டு 60 நாழிகை எரித்து மறுபடி களிம்பொட்டும் சீலையில் கட்டித்தூக்கி வைக்கவும் கட்டும். இம்முறை அனுபவத்தால் தெளிக.

## 47 சாதிலிங்கக் கட்டு

உருக்குத் தொட்டி கழஞ்சி ஒன்று சட்டியிலிட்டு எரித்து முருங்கைஇலைத் தண்ணீர் சுருக்கிட மெழுகு பதமாம். அதை சாதிலிங்கம் ஒரு கழஞ்சிக்குப் பொதிந்து பூசி ஒரு சீலைமண் செய்து சிறுபுடமிடவும் லிங்கம் கட்டும். இந்த லிங்கத்தை நல்ல செம்பு 8க்கு ஒன்று கொடுக்க நாலாகப் பழுக்கும.

## 48 கரியுப்புக் கட்டு ரகசியம்

சீனிவெள்ளைக் கல்லுப்பொடி 3 பங்கு கரியுப்பு 2 பங்காக நிறுத்து தண்ணீர் விட்டு அறைத்து, கரியுப்பு விளைந்த மணிகளாகப் பொறுக்கி எடுத்து மணிக்கு மணி இந்தச் சாந்து நெற்கனமாகக் கவசித்து அவைகளை ஒரு நாள் நிழலில் உலரவைத்து ஒட்டிலிட்டு சீலைமண் செய்யாமல் ஒடு மூடி குக்கிட புடமிட்டு ஆறி எடுக்க சில கவசங்கள் வெடித்தும் சில கவசங்கன் வெடியாமலும் இருக்கும். வெடித்த கவசத்திலுள்ள உப்பை வேருகவும் வெடியாத கவசத்திலுள்ள உப்பை வேருகவும் வைத்துக்கொள்ளவும். இதில் வெடியாத கவசத்திலுள்ள உப்புத்தான் குரு உருவான உப்பு. இந்த உப்பு வாயமுதம் விட்டு மத்தித்து வெடியுப்புக்குக் கவசம் கட்டி சிப்பிக்குள் வைத்து சீலைமண் செய்து புடமிட வெடியுப்புக் கட்டும் அப்படியே சீனிக்காரம், பொரிகாரம், அரிதாரம் பூரம்வீரம் லிங்கம் சகல சரக்கும் கட்டலாம். முன் சொன்ன வெடிக்காத கவசத்திலுள்ள குரு உருவான உப்பு கழஞ்சி ஒன்று சுத்தி செய்த ரசம் கழஞ்சி 4 ஆக ஐந்தும் முலைப்பால் விட்டு அறைத்து

உருட்டிக் காய்ந்தபிறகு, முன்முறைப்படி கட்டின பொரிகாரத்தை முலைப்பாலால் அறைத்து அந்த மணிக்கு மேல் கவசம் கட்டி உலரவிட்டு குகையிலிட்டு மூடி சீலைமண் செய்து 4 எருவில் புடமிடவும் அதன்பின் அந்த குகைக்குள் வைத்து கரிப்போட்டு ஊத மணியாம் ஒட்டி ஒட்டித் தொந்திக்க நூறு தொந்தம் வரை ஏறும். மதியிட்டால் மதியாம் பரியிட்டால் பரியாம். இதை முன்னே பார்த்து மற்றவைகளை பின்னே பார்க்கவும் என்று கூறினர். குறிப்பு இதில் சீலிவெள்ளைக் கல்லைக் கண்டுகொண்டால் எல்லாம்சித்திக்கும். மதியிட்டால் மதி பரியிட்டால் பரி என்பது வெள்ளியத்திலும் பித்தளையிலும் வேதையிட வெள்ளியாகவும், பொன்னாகவும் மாறும் என்பது யுக்தி. இது சுலபமான ரகசிய முறை.

## 49 கரியுப்பு மணி

கோழிக்காரம் லாலாவிட்டறைத்து கரியுப்புக்கல்லுக்கு கவசம் கட்டி ஒட்டில் வைத்து குக்கிட புடமிடவும். இந்த உப்பை குடைகரியுள் வைத்து உருக்க மணியாகத் திரளும். இந்த உப்பு, காரீயம் சீவினது பச்சைக் கற்பூரம் வகைக்கு கழஞ்சி கால், லாலாவிட்டறைத்து இந்த எடை சவ்வீரம் கூட்டி அறைத்துவைத்துக்கொண்டு, நல்ல செம்பு கழஞ்சி ஒன்று தங்கம் கழஞ்சி கால் சேர்த்து உருக்கி இந்தச் செம்பு எடைக்கு முன் கூட்டின மருந்து கவசமாகத் தடவி செங்கல் துளைத்த குழிக்குள் வைத்து செங்கல் மூடி சந்து வாய்க்கு சீலைமண் செய்து கெஜபுடமிட்டு ஆறி எடுக்க நீறும். இந்தச் சிந்தூரம் ஒரு மஞ்சாடி, பச்சைச் சாதிலிங்கம் கால் மஞ்சாடி, பச்சைக் கற்பூரம் கால் மஞ்சாடி,

பொரிகாரம் கால் மஞ்சாடி சேர்த்து, பச்சைப் புனுகு சவ்வாது பசு வெண்ணெ இதில் ஒன்று கூட்டி மத்தித்து, தாரி வெள்ளி கழஞ்சி ஒன்றுக்கு இந்த செந்தூரம் மஞ்சாடி இரண்டு கொடுத்து உருக்க ஆறேகாலாய்ப் பழுக்கும். (லாலா என்பது வெண்கரு, முலைப்பால், வாய்நீர் இவைகளில் ஒன்று யுக்தி).

## 50 கரியுப்பு நீறு

ஷை கல்லு நீற்றி அதை சுண்ணும்புத் தண்ணீரில் கரைத்து தெளிய வைத்து இறுத்து அதில் புளியைக் கரைத்து வடிகட்டி அதில் சீனிக்காரம் கால் கழஞ்சி இட்டு கலக்கி, அதில் கரியுப்பு அரைக் கழஞ்சி மணிகளாகப் பொறுக்கிப்போட்டு எரிக்கவும் குருஉப்பாகும், இந்த உப்பில் கெந்தகம், சவுக்காரம், சூடன், சவ்வீரம் வகைக்கு கால் கழஞ்சி சேர்த்து அமுதம் விட்டு மத்தித்து அறைத்து கிழியாஞ்சிட்டியில் வைத்து மேலே ஒரு கிழியாஞ்சிட்டி மூடி சீலைமண் செய்து கஜபுடமிட நீரும். இந்த நீறு, வெள்ளியம், காரீயம், தங்கம், ரசம், அரிதாரம், துருசு, இரும்பு, அரபொடி, வெள்ளைப்பாசாணம், இந்துப்பு, பொரிகாரம், வெடியுப்பு இந்தப் பன்னிரண்டும் வகைக்கு கால் கழஞ்சி வீதம் சேர்த்து, எருக்கலம்பால் விட்டு அறைத்து உருண்டையாகப்பண்ணி, உப்பும் புளியும் சமமாக அறைத்து அந்த உண்டைக்குக் கவசம் கட்டிப் பொதிந்து உமியில் வைத்து காற்றுடா மூலையில் புடமிடவும். இக்குரு மஞ்சாடி இரண்டு எடுத்து தாரிவெள்ளி ஒரு கழஞ்சி உருகும்போது கொடுக்கவும். அதன்பின் உருகினதை வங்கம் குத்தி ஊதிப்போடவும். அந்த மட்டத்தை

குடைகரியில் வைத்து பொரிகாரமிட்டு உருக்கவும் நாலா கப்பழுக்கும். இது பத்துக்கு ஒன்று தங்கம் கூட்டி உருக்க அஞ்சாகப் பழுக்கும்.

## 51 சாதிலிங்கம் கட்டி மெழுகாக

வெடியுப்பு, பூநீறு, சீனிக்காரம், நமச்சாரம், இந்துப்பு வகை கழஞ்சி ஒன்று, கரியுப்பு கழஞ்சி அரை எல்லாம் முலைப்பால் விட்டு அறைத்து, சாதிலிங்கம் கழஞ்சி 2க்கு கவசம் கட்டி காயவைத்து அதன்மேல், கரியுப்பும் வில்வப் பழச்சோறும் சமம் அறைத்து பொதிந்து ஒரு சீலைமண் செய்து காயவைத்து ஒன்றரை எருவில் புடமிடவும். இவ் விதம் 3 புடமிட கட்டும். இந்த லிங்கத்தை ஓட்டில் வைத்து அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து, வெடியுப்பு, பூ நீறு, கரியுப்பு. சீனிக்காரம், நமச்சாரம், இது 5ம் வகைக்கு அரைக் கழஞ்சி வீதம் பொடித்து. ஆழாக்கு முலைப்பாலி லிட்டு கலக்கி அந்த லிங்கம் முங்கச்சுருக்குக் கொடுக்கவும். உருகும்.மெழுகு பதத்தை ஊசிகுத்திப்பார்க்கவும், மெழுகு பதம் வந்ததும் எடுத்து அம்மியில் அறைத்து சிமிழில் வைத்துக்கொள்ளவும். ஒரு கழஞ்சி துய்யான் உருகும் போது இந்தமெழுகு ஒரு மஞ்சாடி கொடுக்கவும் பழுக்கும்.

## 52 தாளகக் கட்டு

மூங்கில் இலையை உரலிலிட்டு இடித்துத் துகைத்து இந்நூலில் கூறியுள்ள சாறு வரும் துருசுக்குரு சற்றுதூவி உரலோடு மூடிவைத்து ஒரு நாழிகைக்குப் பிறகு கம்பிளித் துணியில் வைத்துப் பிழிய சாறு வரும். ஒரு ஓட்டில் சுத்

தித்த தாளகக் கட்டி வைத்து அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து டூ சாறு சுருக்குக் கொடுக்கவும். இவ்விதம் இரண்டு தரம் செய்ய தாளகம் கட்டும். பிரயோகம் கண்டு நடத்தவும்.

## 53 தாளக சுத்தி பற்பம்

தாளகம் பலம் ஐந்து துணியில் கிழிகட்டி 3 படி சுண்ணம்புக்கல்லுள் வைத்து ஜலம் விட்டு நீற்றி கழுவி எடுக்கவும். இவ்விதம் ஏழு தரம் செய்ய எண்ணெ கக்கிவிடும். அதன்பிறகு ஒருசட்டியிலிட்டு அடுப்பேற்றிஎரித்து, சோத்துக்கத்தாளைச்சாறு; வெங்காயச்சாறு, கொட்டைக்கரந்தைச்சாறு, மொசுமொசுக்கைச்சாறு, அஞ்சிலைநொச்சிச்சாறு வகைக்கு ஒரு படி சுருச்கிட பரிபூரண சக்தியுடையதாம். இவ்வுதம் செய்ததே ஔஷதங்களுக்கும் ஏற்றதாம். ஒரு சட்டியில் மூக்கரைசாரணைசமூலம் இடித்து வைத்து நடுவே டூகட்டிகள் வைத்து அந்தசாந்து மூடி சட்டி மூடி சீலைமண் செய்து நாலு சாமம் எரித்து எடுக்க உயர்ந்த பற்பமாம். அரிசி குன்றி விதம் அனுபானங்களிலிட சய ரோகம் குட்டரோகம் சகல ரோகமும் தீரும்.

## 54 செம்பு சுத்தி

குஞ்சு பொறித்த கோழிமுட்டைத்தோடு சுத்தி செய்தது பலம் ஒன்று அந்த எடை நமச்சாரம் கூட்டி மாளு மட்டும் அறைத்து, பொரிகாரத்தூள் கால் பலமும் கலந்து வைத்துக்கொண்டு குகையில் ஒரு பலம் செம்பு உருகும் போது டூ பொடியைத் தூவவும் செம்பு வூரலற்றுப் பலக்கும். இதில் வேதைகளிட நன்மை படக்கும்.

## 55 வங்கக் குரு

வங்கம் பலம் ஒன்று அடிமுடியுப்பு பலம் ஐந்து வெடியுப்பு பலம் இரண்டு, வங்கத்தை சட்டியிலிட்டு உருக்கி ஷ உப்புகள் கிராசமிட்டு சோத்துக்கத்தாளை வேரினுல் கிண்டி வறுத்து எடுத்து மூலைப்பால் விட்டு அறைத்து வில்லை தட்டி காயவைத்து ஓடு மூடி சீலைமண் செய்து முழப்புடமிட குருவாம் இக்குரு பத்துக்கு ஒன்று கொடுக்க பழுக்கும். அடிமுடியுப்பு பூநீறு என்பது யுக்தி.

## 56 வெள்ளைப் பாசாண கட்டு, தாளக கட்டு

பேயன்வாழைக் கிழங்குள் வைத்து மூடி சீலைமண் செய்து கஜபுடமிட பாசாணம் கட்டும். இவ்விதம் தாளகம் கெந்தகமும் கட்டலாம். மேற்பிரயோகம் கண்டு நடத்திக் கொள்ளவும்.

## 57 வெள்ளீயம் அயம் நீற

இலைக்கள்ளி அறைத்து வெள்ளீயத் தகடுகளுக்கு பொதிந்து சீலைமண் செய்து குழியில் கஜபுடமிட நீறும். இவ்விதமே அயமும் நீற்றலாம். மொசு மொசுக்கை அறைத்து பொதிந்து புடமிட்டாலும் வெள்ளீயத் தகடுகள் சங்குபோல் நீறும். முந்திரிக்கட்டை துளைத்து அதில் சுத்தித்த இரும்புஅரபொடி செலுத்தி சக்கையால் அடைத்துசீலைமண் செய்து கஜபுடமிட்டரல் அயம் பற்பமாக நீறும், முறை கண்டு பிரயோகம் செய்துகொள்ளவும்.

## 58 வெங்காரம், துத்தநீறு பாசாணக் கட்டு

பிரமி அறைத்து பொதிந்து புடமிட மடையன் என்ற துத்தம் நீறும். வெங்காரமும் நீறும், இந்த வெங்கார நீறு பொதிந்து புடமிட நமச்சாரமும் பாசாணமும் கட்டும் இது வேதையிலிட பழுக்கும். மடல் துத்த நீறு வகாரத் திற்கு முக்கியமானது.

## 59 மடல் துத்தம் உருகிக் கட்ட

சீனிக்காரம் பொரிகாரம் சமமாக எடுத்து முலைப்பா லால் அறைத்து ஷெ துத்தத்திற்கு பொதிந்து கவசித்து 3நாள் வெயிலிலிட்டு ஒரு சீலைமண் செய்து சிறுபுடமிட்டு எடுக்க உருகும் அதன்பின் எள்ளுப்புண்ணுக்கு அறைத்து பொதிந்து புடமிட உருகினது கட்டியாகிவிடும். முருங்கை இலை கவச புடத்திற்கும் இவ்விதமேயாகும். குறிப்பு. மேலே கூறிய சீனிக்காரம் என்ற இடத்தில் ஏடு பழுதா யிருந்ததால் சீனம், அல்லது சீரகம் என்னும் இரண்டில் ஒன்றுதான் என்று தெளியக் கிடக்கின்றது இது வேதை களிலிட பழுக்கும்.

## 60 சாதிலிங்கக் கட்டு வேதை

ஒரு கழஞ்சி சாதிலிங்கம் ஒட்டிலிட்டு ஆதாளம்பால் படி அரைக்கால் சுருக்கிடவும். பிறகு இது கழஞ்சி ஒன்று காரீயம் கழஞ்சி ஒன்று சீவி சேர்த்து அமிர்தம் விட்டு அறைத்து குகையில் வைத்து உருக்க உருகும். உருகின பின் கண்ட எடையில் பாதி தங்கம் கூட்டி உருகும்போது, துத்தநாகம் கொடுக்க களங்கமாகும். இந்த களக்கம் ஒ ு

கழஞ்சி எடுத்து தாரி வெள்ளி கழஞ்சி இருபது உருகும் போது கொடுத்து வங்கம் குத்தி ஊதிப் போடவும். பழுக்கும்,

## 61 தாமிர சுத்தி வெள்ளி

தாமிரம் உருக்கி தேசி நீரில் ஏழு தரம் சாய்த்துக் கொள்ளவும். அதன்பின் மாதுளைவேர் அறைத்து குகைக்குள் வைத்து மேற்படி தாமிரம் வைத்து மூடி 10 தபா உருக்கவும். பின்பு நாய்க்கொட்டான் வேரும் புளிமடலைக் கிழங்கும் சமமாக அறைத்து அதில் விரவி உருக்க வெள்ளியாம்.

## 62 கெந்தகச் செம்பு

குப்பைமேனி வேர் பெருந்திராய் வேர் கெந்தகமும் சமமாக மஞ்சள் கிழங்கின் சாறுவிட்டு அறைத்து உருட்டி ஊமத்திலை அறைத்துப் பொதிந்து எரு மூட்டம் அடுக்கி வேகவைத்து எடுக்கச் செம்பாம். பெரிய வௌவால் மலமும் கெந்தகமும் குப்பைமேனிச் சாறு விட்டு அறைத்து ஒரு தரம் உருக்கி மறுதரம் காரம் குத்தி உருக்கினாலும் கெந்தகம் செம்பாம்.

## 63 லிங்க மெழுகு வேதை

சிறு புள்ளடி வேர் அறைத்து ஒரு கழஞ்சி சாதிலிங்கத்திற்கு கவசித்து அதன்மேல் மேற்படி இலை அறைத்து கவசித்து 3 சீலைமண் செய்து காடைப் புடமிடவும். இப்படி 5 புடமிட்டுப் பார்க்க மெழுகு ஆகும். செம்பு 5 வெள்ளி 7 பொன் 7 ஆக 19ம் உருகும்போது மேற்படி மெழுகு ஒன்று

கொடுக்க ஐந்தாகப் பழுக்கும். இதில் தங்கம் கூட்டிப்பார்ப் பது யுத்தி. தாய் என்பது தங்கம்.

## 64 நாகம் கட்டி சிந்தூரம்

இலுப்பை எண்ணெயில் 3 தரம் உருக்கிச் சாய்த்த ஒரு கழஞ்சி நாகத்திற்கு நவ்வல்பட்டை அதன் கொழுந்து சமம் அறைத்து சிப்பிக்குச் சரிஎடை பொதிந்து சிப்பியில் வைத்து சீலைமண் செய்து 5 ஒருவில் புடமிடவும். அதன் பின் இவ்விதமாக 7 எரு 9 எருவில் மொத்தம் 3 புடமிட்டு பார்க்க கட்டும் இவ்விதம் கட்டின நாகம், வெள்ளி, தங் கம், கெந்தகம், சவ்வீரம், ரச கற்பூரம் ஆக ஆறும் வகைக்கு கால் கழஞ்சி வீதம் சேர்த்து ஒரு சேலைத்துணியில் வெண் ணெய் தடவி அதில் மனோசிலைத் தூள் தூவி திரியாக்கி விளக்கிலே பிடிக்க தைலம் விழும். இந்தத் தைலத்தால் அந்த ஆறு மருந்தையும் அறைத்து வில்லை தட்டி உலர் த்தி, உப்பும் சுண்ணும்பும் அறைத்து துணியில் தடவி சீலை செய்து ஒரு சிப்பியில் வைத்து மறு சிப்பி மூடி காடை புடமிட செந்தூரமாம். அந்தச் செந்தூரம் தத்தாரியில் கொடுக்கப் பழுக்கும்.

## 65 சவ்வீர வேதை

சவ்வீரமும் ரசமும் கழஞ்சி எடை முலைப்பாலால் நன் ருய் அரைத்து உருட்டி உலர்த்தி, கெந்தகம் அரை கழஞ்சி பொடித்து குகையுள் பாதியிட்டு மேலே மேற்படி உண்டை வைத்து அது மேல் மீத கெந்தியிட்டு (குகையுள் சுண் ணும்பு தடவி பின் இம்முறை செய்க) குகைக்கு வட்டோடு மூடி சந்து வாய்க்கு சுண்ணும்பு சீலை செய்து 7 எருவில்

புடமிடவும். இப்படி அறைத்து புடமிட கட்டும். இதுசருகுப் பித்தளை 10க்கு ஒன்று கொடுக்கவும். வெள்ளீயம் 80 க்கு ஒன்று கொடுக்கவும் நீர் வாங்கும் பழுக்கும்.

## 66 வெள்ளீயக் கட்டு அய செம்பு வேதை

வெள்ளீய எடைக்கு அரிதாரம் எடுத்து இந்த அரிதாரத்தை ஆமணக்கு முத்து சேர்த்து அறைத்து அந்த ஈயத்தைப் பொதிந்து சீலேமண் செய்து 5 எருவில் புடமிட கட்டும். இதை அயச்செம்பில் கொடுக்க ஐந்தாகப் பழுக்கும்.

## 67 சவ்வீர வித்தை

சவ்வீரம் கழஞ்சி அரை எடுத்து; கற்பூரம் ஒரு பண எடை வெள்ளீயச்சுண்ணும்பு 2பணஎடை. இது2ம்மத்தித்து ஷிசெவ்வீரத்திற்கு கவசம் கட்டி பொரிகாரம் பூசி அனலில் வாட்டிக்கொள்ளவும். 1 கழஞ்சி வெள்ளி உருகுமுகத்திலே கொடுத்துருக்க எட்டாகப்பழுக்கும். ராசி உருதுமுகத்திலே 2க்கு 2 செந்தூரம் கொடுக்க சரியாம்.

## 68 வெள்ளீயச் சுண்ணும்பு

வெள்ளீயம் உருகும்போது வெடியுப்பு சீனிக்காரம் வகைக்கு ஒரு கழஞ்சிவீதம் நுணுக்கியிட்டு குச்சால் கிண்டி கல்வத்தில் கொட்டி ஒரு கழஞ்சி ரசமும் விட்டு சுண்ணும்புத் தெளிவு நீரால் அறைத்து ஒரு நாழிகைப்பின் ஒரு கிழியாஞ்சிட்டியிலிட்டு கட்டின உப்புத் தடவி மூடி சீலே மண் செய்து, கோழிப்புடமிட்டு எடுத்து, தண்ணீர் விட்டு

நீற்ற வெள்ளியச் சுண்ணும்பாம். வெள்ளீயமும் கழஞ்சி வீதமிருப்பது யுக்தி.

## 69 செம்பரத்தம்பூ வேதை

ஷை பூவில் பாசாணம் போட்டு கசக்க சாறு வரும். அந்தச் சாற்றில் ரசம் விட்டு மத்தித்து செம்புத் தகட்டில் தடவி சிறு புடமிட பழுக்கும்

## 70 கல்தாமரை வேதை அய செம்பு

ஒரு ருபாயகலத்தில் பாறை இடுக்களில் முளைத்திருக்கும் கல்தாமரை இலையை பசுவின் பால் விட்டு அறைத்து இரும்புச் சல்லியில் பிசறி குகையிலிட்டு கோழிப்புடமிட செம்பாம். இந்த இலைச் சாறில் சீரகம் பொடித்துப்போட்டு மத்தித்து இந்தச் செம்பில் தடவி புடமிட்டு நூறு கழஞ்சி வெள்ளி உருகும்போது ஒரு கழஞ்சி கொடுக்க பழுக்கும்.

## 71 கெந்தக வேதை மெழுகு

கெந்தகத்தின் சரி எடை (ஷை) பூப்போட்டு அறைத்து வில்லை தட்டிக் காயவைத்து தைலம் இறக்கி துய்யான் உருகும்போது கொடுக்க பழுக்கும். (ஷை பூ செம்பரத்தம் பூ என்பது யுக்தி) கற்பூரமும் கெந்தகமும் ஒத்த எடையாக எடுத்து பொடித்து ரசம் சவ்வீரம் அதில் பாதி எடையாக சேர்த்து ஷை தைலம் விட்டுக் கிண்டிக் காய்ச்சி மெழுகு பண்ணி துய்யான் என்கிற வெள்ளி பத்துக்கு ஒன்று மெழுகும் தங்கம் ஒன்றும் கூட்டி உருக்க பழுக்கும்.

## 72 சேர்மான வேதை

பொரிகாரம், சவ்வீரம், சாதிலிங்கம், நமச்சாரம், ரசம், துருசு, அரிதாரம், தங்கம், நாகம் ஆக9ம் வகைக்கு கழஞ்சி இரண்டுவீதம் எடுத்து அமுதம்விட்டு அறைத்து துய்யான் தகட்டில் தடவி மடக்கி பொரிகாரம் பொரித்துப்போட்டு உருக்க பழுக்கும். அமுதம்: முலைப்பால், வாய்நீர்.

## 73 மிருதார்சிங்கி வேதை

மிருதார்சிங்கி, காரீயம் வகைக்குகழஞ்சிகால், அமுதம் விட்டறைத்து வில்லை செய்து ஓட்டிலிட்டு சீலைமண் செய்து புடமிட பற்பமாம். இந்தப் பற்பம், வீரம், பூரம் வகைக்கு 2 மஞ்சாடி வீதம் அமுதம் விட்டறைத்து தங்க தகட்டில் தடவி புடமிட பற்பமாம். இந்தப் பற்பம் மஞ்சாடி ஒன்றை துய்யான் கழஞ்சி ஒன்று உருகும்போது கொடுக்க பழுக்கும்.

## 74 மடல் துத்த மெழுகு சிந்தூர வேதை

மடையன் என்கிற மடல் துத்தத்தை சிறுநீரில், வெள்ளாட்டு நீரில், வெள்ளைப்பூ வாடாமல்லிகைச்சாறில், புளி நடலைகிழங்குச் சாறில் தனித்தனி அவித்து எடுத்து. நமச்சாரமும் வெடியுப்பும் சேநீர் முறைப்படி எடுத்த சேநீரில் துவைத்து விளக்கில் காட்ட மெழுகாம். அதன்பின் நமச்சாரம் கால் கழஞ்சியை மடையனுக்குக் கொடுத்து ஷை சேநீரில் தோய்த்து வாட்ட அதை உள்ளே வாங்கும். அதன் பின் அந்த மடல் துத்த எடைக்கு தங்கச் சிமிழ் செய்து அதனுள் ஷை மடையனை வைத்து மூடி, அரிதாரம், மனோ

சிலை, கந்தகம், பொரிகாரம், ஆக நாலும் அமுதம் விட்டறைத்து, அந்த சிமிழ் மேல் பொதிந்து அதன்மேல் கரியுப்பும், சிறுநீர் காய்ச்சிஎடுத்த உப்பும் சமமாக அறைத்து கவசம் கட்டி, செங்கல் துளைத்த குகைக்குள் வைத்து செங்கல் மூடி சாந்து வாய்க்கு சீலைமண் செய்து தகுந்த புடமிட சிந்தூரமாம். இந்த செந்தூரம் ஒரு மஞ்சாடி எடுத்து துய்யான் கழஞ்சி ஒன்று உருகும்போது கொடுக்க ஏழரையாகப்பழுக்கும்.

## 75 கெந்தக சுத்தியும் தைலம் 5 விதமும்

1) கெந்தகம் மிளகுபோல நொறுக்கி கெட்டிச் சீலையில் கட்டி பசுவின்பால் பானையிலிட்டு தொளாயந்திரமாக எரித்து எடுத்து இந்தக்கெந்தகம் பலம்2, சோற்றுக்கத்தாழைப்பூ பலம் 2, சேர்த்து அறைத்துத் தட்டி உலர்த்தி, ஒரு கலசத்தின்கீழ் சிறு தமரிட்டு அதிலிட்டு குழித் தைல முறைப்படி தைலம் எடுத்து, துய்யானில் 8க்கு ஒன்றும் நூற்றுக்கு ஒன்றும் கொடுத்துப் பார்க்கவும். 2) அந்தக் கெந்தகம் பலம் 4 பிராய் விதை பலம் 4 சிறுநீர் விட்டு அறைத்து உலர்த்தி முன்போல் தைலம் இறக்கி முன்போல் கொடுத்துப் பார்க்கவும். 3) சுத்தி செய்த கெந்தகம் பலம் 3க்கு குமிழம்பழ விதை பலம் 2ம் சேர்த்து நாயுருவி சுட்ட சாம்பல் தண்ணீரில் கரைத்து 3 நாள் ரவியிட்டு அந்தத் தெளிவு நீரால் அறைத்து இள வெந்நீர் விட்டு குழப்பி கலசத்தின் உள்பாகத்தில் அப்பி முன்போல் குழித் தைலம் எடுத்து, முன்போல் கொடுத்துப் பார்க்கவும். 4) அந்தக் கெந்தகம் பலம் 2. பொற்றலைக் கையாந்த கரைச் சாறுவிட்டு அறைத்து, நாலு நாழி சாறில் கலக்கி உழக்கா

கக்காய்ச்சி முன்போல் குழித்தைலம் இறக்கி துய்யானில் முன்போல் கொடுத்துப் பார்க்கவும். 5) அந்தக் கெந்தகம் ரசம் அரிதாரம் ஏரளிஞ்சிவிதைப் பருப்பு இந்த நாலும் சரி எடையாகச் சேர்த்து, ஊமத்து, பொற்றலைகையாந்தகரை குப்பைமேனி, குட்டித் தக்காளி, சிரு செருப்படி, இந்த 5ம், தனித் தனி நாழிச்சாறு பிழிந்து, ம்ஷ் மருந்தை அறைத்து அதில் கலக்கி குறுக எரித்து வாழைப்பூ போன்ற அடை யாகத் தட்டி கலசத்திலிட்டு குழித்தைலம் இறக்கி முன் போல் பிரயோகம் செய்து பார்க்கவும். இந்த ஐந்து விதங் களாலும் துய்யான் பழுக்கும்.

## 76 நயமான அயச் செம்பு

இரும்புச் சல்லிகளை எலுமிச்சம்பழச் சாறில் 3 நாள் ஊறவைத்து எடுத்து அதில் கெந்தகம் கழஞ்சி 2 ரசம் கழஞ்சி ஒன்றும் முருக்கிலைச் சாருல் அறைத்து ஷ சல்லி களில் விரவி குகையிட்டுருக்க செம்பாம். அந்தச் செம்பும் மருதோணிஇலையும் நெருஞ்சிஇலையும் பழச்சாறு வார்த்து அறைத்து குகையில் வைத்து உருக்கவும். இவ்விதமாக, 3 தரம் உருக்கி எடுக்க நல்ல செம்பாம். இந்த செம்பு கழஞ்சி ஒன்று வெள்ளி கழஞ்சி ஒன்று தங்கம் மஞ்சாடி ஒன்று சேர்த்து உருக்க அஞ்சாகப் பழுக்கும். அக்கராகாரம் இரும்பை உருக்கும். இரும்பு காய்ச்சி வெள்ளாட்டு நீரில் தோய்க்க பொடியாக உதிரும். புளிப்பு மாதுளை சாறில் தோய்க்க வெண்மையாகப் பிரகாசிக்கும்.

## 77 கல்லுப்பு கட்டு மெழுகு சுன்னம் சேநீர் வேதை.

கல்லுப்பு மணியாக வாங்கி புங்கம் வேர்ப்பாலூட்டி உலர்த்தி நமச்சாரமும் சவுக்காரமும் அறைத்துப் பூசி

உலர்த்தி, சீனிக்காரம், சூடன், கோழிமுட்டை வெண்கரு வால் அறைத்து அதற்குமேல் பூசி உலர்த்தி குகையிலிட்டு சில்லிட்டு சீலைமண் செய்து புடமிட கட்டும். இந்த உப்பை சுண்ணும்பு ஆக்கலாம். மெழுகு பண்ணலாம். செயநீரா கச்செய்யலாம். இந்த உப்பு உருகும்போது சரக்குகளை கொடுக்கலாம். (சிப்பிக்குள் வைத்து சீலை செய்து புடமிட வும்.) இப்படிக் கட்டின பூரம் சீனிக்காரத்தைக் கட்டிக் கொல்லும். இந்தச் சீனிக்காரம் வீரத்தைக் கொல்லும். இந்த வீரம் மஞ்சாடி ஒன்று ஒரு மஞ்சாடி தங்கத்தகட்டில் பொதிந்து வெள்ளி கழஞ்சி ஒன்று உருகும்போது கொடுக் கப்பமுக்கும்.

காரம் சேநீர்க் காரமே சுண்ணும்பு
பூரம் சுன்னம் பொன்னுக நாலும்
காரியம் சாரத் தாலே காரமாம்
காரத்திலுலே காரம் சுண்ணும்பே.

## 78 சரக்குகளின் சத்துரு வகை

உப்பினுல் பூரம் சாகும், பூரத்தால் உப்பு சாகும். அரிதாரத்தால் கெந்தகம் சாகும், கெந்தகத்தால் அரிதாரம் சாகும். துருசினுல் ரசம் சாகும்; ரசத்தால் துருசு சாகும். சீனிக்காரத்தால் சூடன் சாகும், சூடனுல் சீனிக்காரம் சாகும் வெங்காரத்தால் பூரம் சாகும், ரசகற்பூரத்தால் வெங்காரம் சாகும். உப்பால் இந்துப்பு சாகும், இந்துப்பால் உப்பு சாகும். வெடியுப்பால் வங்கம் சாகும் வங்கத்தால் வெடியுப்பு சாகும். வங்கத்தால் நிமிளை சாகும் நிமிளையால் வங்கம் சாகும். தங்கம் வெள்ளியைக் கொல்லும். இரும்பு செம்பைக் கொல்லும். அப்ரேகம் ரசத்தைக் கொல்லும்.

கருநாகம் லிங்கத்தைக் கொல்லும். லிங்கம் கருநாகத்தைக் கொல்லும். இவ்விதம் சத்துரு அறிந்து பிரயோகிக்கவும்.

## 79 சகல சரக்கும் கட்ட நமசார சேநீர்

நமச்சாரம், வெடியுப்பு, சீனிக்காரம், சவுக்காரம், பொரிகாரம், துருசு, கெந்தகம் சம எடையாக எடுத்து, சட்டியிலிட்டு உருகும்போது உரோமம் நறுக்கி சிறுகச் சிறுக கிராசமிட்டு எடுத்து பீங்கானில் வைத்து பனியிலிட அல்லது சாணி கரைத்த தாழியில் பதித்து மூலையில் வைக்க செயநீராம். புட்டியில் பத்திரப்படுத்தவும். இந்த செயநீரில் சிறிது எடுத்து வீரம், பூரம். லிங்கம், அரிதாரம்; மனோசிலை தனித் தனி வைத்து வெயிலிட கட்டும். இவைகளை பல வழிக்கும் பிரயோகம் செய்யலாம்.

## 80 சீனப் பித்தளை வேதை.

சீனப் பித்தளையை பசுவின் ஊன் பொதிந்து குகையிலிட்டு மூடி சீலைமண் செய்து உருக்கவும். இவ்விதம் 3 தபா செய்ய பழுக்கும்.

## 81 பாசாண மெழுகு வேதை

கொடிக்கள்ளி பச்சையும் பாதி உலர்ந்ததுமான இணுக்குகளை இடித்துச் சாறு பிழிந்து பாசாணம் கழஞ்சி ஒன்று ஓட்டில் வைத்து சிறு தீ எரித்து சுருக்கிட மெழுகு ஆகும். அந்த மெழுகு ஒரு மஞ்சாடியை ராசி கழஞ்சி ஒன்று உருகும்போது கொடுக்க பழுக்கும்.

## 82 சர்வ சரக்கும் கட்டும் நமச்சாரக் கட்டு

நமச்சாரத்திற்கு குறுந் தொட்டி இலை அறைத்து கவசித்து பிங்கானிட்டு வெயிலிட எண்ணை எல்லாம் கக்கி விடும். நமச்சாரத்தை கொதிக்கும் வெண்ணீரிலிட்டு கலக்கி தெளிவிறுத்து காய்ச்சிக்கொள்வதுபோல் 3 முறை செய்ய ஒரு விதக் கட்டும் ஆகும். நமச்சாரத்தை முட்டைவடிவா கச்சீவி, அதன்மேல் மிளகு, அபின், பூரம் மூன்றும் சமமாக குப்பைமேனிசாருல் அறைத்து பூசி ரவியில் காயவைத்து சேங்கொட்டைத் தைலம் சுருக்கிட்டு ஊட்டி அதன்மேல் பசுவீன் கன்றின் சாணி பொதிந்து சீலை சுற்றி ரவியில் காயவைத்து அதன்மேல் சுண்ணும்பு சேலை சுற்றி உலர்த்தி வங்கம் உருகும்போது அதன் நடுவில் குறட்டால் பிடித்து முக்கி எடுத்து, ஆறவைத்து கவசம் நீக்கி, வெங்காரத்தை பல்லுப்போல் நறுக்கி நாயுருவிச் சாறில் போட்டு வீரம் பூரமும் நிதானமாய்ப் போட்டு கலக்கி அதில் போட்ட வெங்காரத்தையும் அதில் தோய்த்த ஷை சாரத்தையும் 3 நாள் துவைத்து துவைத்து வெயிலிலிட்டு காய்ந்தபின், அந்த வெங்காரம் நமச்சாரம் பரிச்சூதச்சுன்னம் வகைக்கு அரைப் பலம் சேர்த்து மத்தித்துவைத்தால் குருவாகும். இந்தக் குருவால் சகல சரக்கும் கல்லாகக் கட்டலாம். எந்தச் சரக்கைக் கட்டவேண்டும் என்ருலும் ஷை குருவை சவ்வாதில் மத்தித்து பூசிஞல் கட்டிப்போம். நீருகவேண்டும் என்ருல் புனுகில் மத்தித்துத் தடவிப் போட நீருகும்.

## 83. வகார முறைக் கவி

பாரப்பா தெருத்தோறும் கூறும் உப்பு
பரிவாகக் கட்டறியான் பசாசுவாதி

ஆரப்பா எனக்கீடு சூதம்கட்ட
அறிகுவேன் நானென்பான பத்தம்செய்வான்
நேரப்பா ரசமூப்பால் வாதமாச்சு
நீனிலத்தோர் ரசவாதமெனத்தான் சொல்வர்
வேரப்பா வாதத்திற் குப்புக்கல்பார்
வெளியோடு மனம்கலக்க வெளியுமாச்சே 2

வெளியான பூரத்தில் உப்பைக்கூட்டி
வேதித்துப் புடம்போடச் சுன்னமாகும்
களியான சுன்னத்தில் சூதம்தொட்டு
கைமுறையாய்ச் சரக்கெல்லாம் கல்லாய்க்கட்டும்
அளியான சரக்கினுட வரிசைகண்டால்
ஆடலாம் அறியாதான் போச்சுதென்பான்
தெளியானைத் திருத்துவதுஞ் சிரமமாகும்
தேர்ந்தரச வாதிசிவ ஞானிதானே. 2

## 84 கல்லுப்பு லிங்க வேதை

கல்லுப்பு, லிங்கம் வகைக்கு கழஞ்சி 2, எலுமிச்சம்பழச் சாறுல் அறைத்து உருட்டி அதன்மேல் உப்பு அறைத்து கவசித்து, அதன்மேல் கரியுப்பு சுண்ணும்பு செய்தது கவசித்து 7 சீலமண் செய்து பதக்கு உமி நடுவிலிட்டு புட மிட்டு எடுத்து, கொட்டிலாஞ்சல்லி கழஞ்சி ஒன்று லிங்கம் கழஞ்சி ஒன்று பொரிகாரம் கழஞ்சி ஒன் று சேர்த்து விரவி உருக்க ராசி 3 காணும். வெள்ளி கழஞ்சி 7 அந்த செம்பு கழஞ்சி 3 தங்கம் கழஞ்சி ஒன் று கூட்டி உருக்க தெவராங் காணும் பழுக்கும்.

## 85 சிந்தூர வேதை

சாதிலிங்கம், கெந்தகம், நாகம், மடல் துத்தம், வீரம், ரசம் வகைக்குக் கழஞ்சி ஒன்று இராசி கழஞ்சி 2, இந்தாம்

முருக்கிலேச்சாறு விட்டு அறைத்து குகையிட்டு சில்லுமூடி சீலேமண் செய்து உருக்கி எடுக்கச் சிந்தூரமாகும். இந்தச் சிந்தூரம் 3, தங்கம் 1, வெள்ளி 8 சேர்த்து உருக்க ஆறுகப் பழுக்கும்.

### 86 வெடியுப்பு செயநீரில் வேதை

கோது கொட்டைகள் நீக்கிய பழம்புளி பலம் 8, அஞ்சாங்காய்ச்சல் வெடியுப்பு பலம் 8, கல்லுப்பு பலம் ஒன்று, இந்துப்பு பலம் ஒன்று, சூடன், நமச்சாரம் வகைக்கு பலம் அரை எல்லாம் சேர்த்து உரலில் இடித்து எடுத்து சட்டியிலிட்டு முத்தீயும் எரிக்க சுண்ணமாக நீறும். இதை எடுத்து கோப்பையிலிட்டு பனியில் வைத்தாலும், சாணி கரைத்துவிட்ட தாழியில் பதித்து மூலேயில் வைத்து மேல் ஈரச்சீலேவேடு கட்டினலும் சேநீராகும். இந்த செயநீரை புட்டியில் பத்திரப்படுத்தவும், இந்த சேநீரில் சிறிது எடுத்து, வீரம் பூரம் வழலேச் சுண்ணம் மூன்றும் சரி எடையாக எடுத்து அறைத்து வெங்காரக் கட்டிக்கு கவசித்து பூசி வெயிலில் போட அது சுன்னமாம். இந்தச் சுன்ன எடைக்கு நமச்சாரம் கூட்டி அறைத்து சேநீர் முறைப்படி செய்ய இது செயநீராம். இந்த நீரில் ரசகற்பூரம் துவைத்து வாட்ட அது சுன்னமாம். இந்தச் சுன்னம் ஷை சேநீரால றைத்து சவ்வீரக் கட்டிக்குப் பொதிந்து விளக்குச் சுடரில் வாட்ட அந்த வீரம் சுன்னமாம். இந்தச் சுன்னத்தோடு சவ்வாது புனுகும் சேர்த்துபூசி வாட்ட ரச முதல் சகல சரக்கும் கட்டும். நீறும். ஒவ்வொன்றிலும் வேதை முறைப்படி பிரயோகிக்க பழுக்கும்.

### 87 வேறுவித வெடியுப்பு சேநீர் வேதை

5ம்காய்ச்சல் வெடியுப்பு பலம் 4, கல்லுப்பு பலம் ஒன்று இந்நூலில் கூறப்பட்ட வழலேச் சுன்னம், ஷை வகை இருப

துக்கு ஒன்று சேர்த்து எலுமிச்சம்பழச் சாறு விட்டு அறைத்து சட்டியிட்டு ஒடு மூடி சீலமண் செய்து தகுந்த புடமிட சுன்னமாம். அதை முன்மூறைபோல் செயநீர் எடுத்து புட்டியில் பதனம் பண்ணவும். இந்த சேநீரால் வீரம் பூரம் சமமாக அறைத்து வெண்காரத்திற்கு கவசம் கட்டி வெயிலிலிட அந்த வெண்காரம் சுன்னமாகக் கட்டும், அதை சூடன் புகையில் காட்டி சூட செயநீரால் அறைத்து வெண்காரத்திற்குப் பூசி சிப்பியில் வைத்து சீலமண் செய்து சிறு புடமிட அது முழுக் கட்டாம். அந்தக் காரத்தில் காரம் ஏற்றி கிழியாஞ்சிட்டியில் வைத்து சீலமண் செய்து சிறு புடமிட்டு சுன்னம் செய்து அதற்கு இரட்டிப்பாக நமச்சாரம் சேர்த்து அறைக்க சே நீராம். அதில் சவ்வீரம் சிறிது போட்டுக் கலந்து பதனம் பண்ணவும். இந்த செயநீரில் வெண்காரம் துவைத்து விளக்குச் சுடரில் வாட்ட அது கட்டும். இந்த செய நீரில் துவைத்து வாட்டின எந்தச் சரக்கும் கல்லாகக் கட்டும். பின்னை ஒருதரம் செய்தால் அது சுண்ணும்பாம். வேதை கண்டு போக பழுக்கும்.

## 88 வழலை எண்ணை கக்கி சுன்னமாகு சேநீர் வேதை

வெங்காரமும் வீரமும் சரி எடையாக ஷ சேநீரால் அறைத்து வழலைக் கட்டிக்கு அப்பி பீங்கானிட்டு வெயிலில் போட அது குடித்த எண்ணை எல்லாம் கக்கிவிடும். சுண்ணும்புமாகும். இதைக்கொண்டு தொட்டதெல்லாம் கட்டலாம், சுன்னமாக்கலாம். இந்த வழலைச் சுன்னத்துடன் நமச்சாரம் சேர்த்து அறைக்க செய நீராம். இதில் பூரம் துவைத்து வாட்ட அது சுன்னமாம். இந்தப் பூரத்துடன் சமம் வீரம் கூட்டி அறைத்து கல்லுப்புக்கு கவசம் கட்டி விளக்கில் வாட்ட அந்த கல்லுப்பு கட்டும். இந்த உப்பை

சுண்ணும்பு பண்ணவும். இந்த சுண்ணும்புடன் சமம் வீரம் கூட்டி அறைத்து தாளகக் கட்டிக்குப் பூசி வாட்ட அது சுன்னமாம். இந்தத் தாளக சுன்னத்தை ஷெ சேநீரால் அறைத்து வங்கத்திற்குப் பூசி வாட்ட அந்த வங்கம் சுன்னமாம். இந்த வங்கச் சுன்னத்தை அறைத்து நமச் சாரத்திற்கு பூசி கிழிஞ்சிலில் வைத்து புடமிட அந்த நமச் சாரம் சுன்னமாம். இந்த சுன்னத்துடன் வீரம் கூட்டி அறைத்து துருசுச்கட்டிக்கு பூசி, இந்நூலில் கூறியுள்ளபடி அஞ்சு சுன்னக் குகை செய்து அதில் வைத்து மூடி சீலே மண் செய்து ஊதி எடுக்க அந்தத் துருசு சுன்னமாம். இந்த சுன்னம் வளைந்து நடுவே ரசம் விட்டு வாட்டினலும் பூசிப்போட்டாலும், மத்தித்தாலும் அந்த ரசம் கட்டி மணியாம். பாதை அறிந்து சென்று வேதையிட எல்லாம் பழுக்கும்.

## 89 வழலைச் சுன்ன வகை வேதை

கல்லுப்புச் சுன்னம் எலுமிச்சம்பழச் சாருல் அறைத்து வழலை என்னும் சவுக்காரக் கட்டிக்கு கவசமிட்டு வெயிலிலிட குடித்த எண்ணெ எல்லாம் கக்கும் அதன்பின் அந்தக் கவசம் நீக்கி, சீனிக்காரச் சுன்னம் துருசுச் சுன்னம் சமம் டேடி பழச்சாருல் அறைத்து அதற்கு பூசி ரவியிலிட பூரு எண்ணெயும் கக்கிவிடும். இந்தச் சுன்னத்திற்கு காரம் ஏற்றிச் சேகரித்து வைக்கவும். இதைக்கொண்டு உப்புக் கல்லைக் கட்டிக்கொண்டால் இந்த உப்பால் சகல சரக்கையும் கட்டலாம். சுண்ணும்பில் நீற்றி அதில் 20 நாள் புதைத்து எடுக்க பூரு எண்ணெயும் கக்கிவிடும். சவுக்காரம் குடித்த எண்ணெ கக்கிவிட்டால் அவனே வாதி என்பதும், உப்புக்கல்லுக்குப் பிரயோசனமில்லாததை எப்போதும்

பேசாதே என்பதுமான பழமொழியையும், துப்புகெட்டவன் வாயில் உப்பள்ளிப்போடு என்று வள்ளுவர் கூறியதாகச் சொல்வதும் சிந்தித்தால், சோற்று உப்புக்கல்லில்தான் சூட்சுமம் இருக்கிறது என்பது புலனுகும். வண்ணுன் துறையறியமாட்டாத வாதிகட்குச் சுண்ணும்பிருக்கு மிடம் தோணுது என்பதும் சிந்திக்கத்தக்கது.

## 90 சவுக்காரச் சுண்ணும்பு வேதை தொடர்

முன்முறைபோல் எண்ணெ கக்கின வழலை என்ற சவுக்காரத்திற்கு, வெங்காரம் சவ்வீரம் சமமாக பழச்சாறு விட்டு அறைத்து அப்பி வெயிலில் போடவும். அதன்பின் முந்தின வழலைச் சுன்னத்துடன் சாரம் கூட்டி அறைத்து பீங்கானிட்டு சேநீர் முறைப்படி தயாரித்த சேநீரில் பூரம் துவைத்தூத பூரம் சுன்னமாம். இதனுடன் வீரம் சமம் கூட்டிஷி சேநீரால் அறைத்து கல்லுப்புக்கு கவசம் கட்டி வாட்ட அது சுன்னமாம். அந்த சுன்னத்துடன் வீரம் கூட்டி அறைத்து அரிதாரக்கட்டிக்கு அப்பி ஷிசேநீரில் துவைத்து வாட்ட அந்த அரிதாரம் சுன்னமாம். இந்த சுன்னம் வங்கத்திற்கு பூசி அப்பி புடமிட இந்த வங்கம் சுன்னமாம். இந்த சுன்னம் அறைத்து நமச்சாரகட்டிக்கு அப்பி வாட்ட அந்த நமச்சாரம் வெள்ளெலும்புபோல் கட்டி வலுக்கும். இதை ஷி செய நீரில் தோய்த்து வாட்ட அந்த சாரம் சுன்னமாம். இந்த சுன்னம் அறைத்து சவ்வீரத்திற்கு அப்பி வாட்ட அது சுன்னமாம். இந்த சுன்னத்துடன் விரம் கூட்டி அறைத்து துருசு கட்டிக்கு அப்பி, அஞ்சு சுன்னக் குகையில் வைத்து மூடி சீலை மண் செய்து கரியில் வைத்து ஊதி ஆறி எடுக்க அந்தத்துருசு சுன்னமாம். இந்த சுன்னத்

தால் சகல சரக்கும் கட்டலாம். வேதையறிந்து செய்ய நவலோகமும் பழுக்கும்.

## 91 அஞ்சு சுன்ன குகைக்கு வகை

கல்லுப்பு, வங்கம், நமச்சாரம், அரிதாரம், பொரிகாரம் இந்த ஐந்தும் இந்த நூலில் கூறியபடி தனித் தனியாகச் சுன்னம் செய்து சம எடையாகச் சேர்த்து சேநீர் விட்டு அறைத்து குகையும் மூடியுமாகச் செய்து உலர்த்தி வைக்கவும். இந்தக்குகையுள் வைத்து புடமிட்ட துருசு வீரம் பூர முதலிய சரக்குகள் கடுங்காரமாகும்.

## 92 துருசு சுன்ன வேதை ரசகட்டு

முன்னே சொன்ன துருசுச் சுன்னத்தில் சிறிது ரசத்தில் ஊட்ட ரசம் கட்டும். துருசு சுன்னம் வளைந்து நடுவே ரசம் விட்டு கரி நெருப்பில் வைத்து சிறு ஊத்தாக ஊத அந்த ரசம் கட்டும். அதற்குமேல் மணிசாரணை விதிகளைக் கண்டு செய்துகொள்ளவும். ரசமணி தாழ்வடத்திலிட்டு அணிந்து தியானிக்க சித்தியும் மனோநிலையும் சீக்கிரம் எய்தும். வசீகரம் உண்டாம். இம்மணியை பாலில்போட்டு எடுத்து அந்த பாலைப்பருக பலவித நோய்களும் தீரும். இது கைவசம் இருக்க எடுத்த காரியமெல்லாம் அனுகூலமாம். முன்கூறிய துருசுடன் நமச்சாரம் கூட்டி அறைக்க சேநீராம். இரும்புக் கரண்டியில் ரசம் விட்டு ஷ சேநீர் சுருக்கிட ரசம் மணியாம். அதன்மேல் கஞ்சா கசாயமும் சுருக்கிடலாம். துருசு சேநீரில் தோய்த்து வீரம் பொதிந்து வாட்ட ரச வெண்ணை மணியாம். தாய் என்னும் தங்கம் 4 பங்கு உருகுமுகத்தில் இது ஒரு பங்கு

கொடுக்க மணியாம். துருசு வீரம் வழலைச் சுன்னம் சமம் புனுகால் மத்தித்து மணிக்கு பூசி உலர்த்தி அஞ்சு சுன்ன குகையுள் வைத்து புடமிட அந்த மணித் தங்கம் நீறும் அதை ஷி சேநீரில் அறைத்து வில்லை தட்டி, வெங்காரம் பொரிகாரம் சமம் அறைத்து அந்த வில்லைக்கு கவசித்து குகையிட்டு ஒரு புடமிட குருவாம். அந்த குருவை எந்த சரக்கில் தடவி புடமிட்டாலும் கட்டும். வேதை முகத்தில் கொடுக்க அவை பழுக்கும். வேதை முகத்தில் சூதச் சுன்னம் கூட்டிக் கொடுக்க நன்ருய்ப் பழுக்கும். வெந்தழலில் இரதம் வைத்து ஐந்து லோகத்தையும் வேதித்து விற்றுண்ணலாம் என்று தாயுமானவர் கூறியிருத்தலான், ரசவாதம் பொய்யல்ல வழி தெரியாமல் போனால் பொய்தான்.

## 93 நவலோக ரசம் கல்லுப்பு சுன்ன மகிமை

சீனிக்காரச் சுன்னத்தால் தாளகம் சுன்னமாம். இந்த தாளகச் சுன்னத்தால் வங்கம் சுன்னமாம். இந்த வங்கச் சுன்னத்துடன் வீரம் கூட்டி அறைத்து வெடியுப்பிற்கு கவசித்து அதை வறுத்து தீயில் வாட்ட எலும்புபோல் கட்டும். அதன்பின் சவுக்காரம் வீரம் புனுகு கூட்டி அறைத்து ஷி வெடியுப்பிற்கு அப்பி கரிநெருப்பில் ஊதி எடுக்க அந்த வெடியுப்பு சுன்னமாம். ஷி சுன்ன எடை நம்ச்சாரம் கூட்டி அறைத்து சேநீர் முறைப்படி வைக்க சேநீராம். இதில் கற்பூரம் துவைத்து ஊத அது சுன்னமாம். இதனுடன் வீரம் கூட்டி கோழிமுட்டை வெண்கருவால் அறைத்து கல்லுப்புமணிக்கு பூசி புடமிட அது கட்டும். இந்த புடம் நாயுருவி விறகு குவித்து அதில் வைத்து தீயிட்டு புடமிடவும். இந்த உப்பு மணிபோல்

நின்று உருகியாடும். இந்த உப்பினுல் ரசம் கட்டும். மூன் கட்டின உப்பை ஷெ சேசீரில் துவைத்து தீயில் ஊதி எடுக்க சுன்னமாம். இந்த சுன்னத்தால் சகல சரக்கும் மெழுகு ஆக்கலாம். சேசீர் செய்யலாம். ஷெஉப்பு சிந்தூரமாகுல் நவலோகமும் உபரசமும் செந்தூரமாக்கலாம். அந்த கல்லுப்பு சுன்னம் அறைத்து கெந்தகத்தில் பொதிந்து ஊதி எடுக்க அது சுன்னமாம். இந்த கெந்தக சுன்னம் அறைத்து தாளகத்திற்கு பொதிந்து வாட்ட தாளகம் சுன்னமாம். இதை சூதத்தில் பூசி வாட்ட சூதம் கட்டும். அதை சேசீரில் துவைத்து வாட்ட அந்த சூதம் சுன்னமாம். இதை நிமிளைக்கு அப்பி புடமிட நிமிளை சுன்னமாம். இதை தங்கத்திற்கு அப்பி புடமிட தங்கம் சுன்னமாம், இதை நமச்சாரத்திற்கு அப்பி புடமிட்டு எடுத்து ஷெ சேசீரில் தோய்த்து ஊத அந்த சாரம் சுன்னமாம். இதை துருசு கட்டிக்கு அப்பி ஊத துருசு சுன்னமாம். இதை அறைத்து வீரத்திற்கு அப்பி ஊத வீரம் சுன்னமாம். இதை அறைத்து கெவுரி பாசாணத்திற்கு அப்பி ஊத அது சுன்னமாம். இந்தச் சுன்னத்திஞல் ரசம் கட்டி மணியாகும். இந்த மணியை அஞ்சு சுன்னக்குகை முன் கூறியபடி செய்து அதில் வைத்து ஊத ரசமணி சுன்னமாம். இந்த சுன்னம் ஒரு வராகன் தங்கத்தில் கொடுத்து மேற்படி அஞ்சு சுன்னக் குகையில் வைத்து ஊத அது சுன்னமாம். இந்தச் சுன்னம் பண எடை காரம், வீரம், கெவுரி, துருசு பூரம், சூதம் வகைக்கு பண எடை சேர்த்து பொடித்து துணியிட்டு திரியாக திரித்து நெய்யிலிட்டு நெய் விளக்கு ஏற்ற இப்புகைபட்ட நவலோகமும் பழுத்துவிடும். முன் சொன்ன தங்கச்சுன்னத்தில் வீரம் ஒன்று கூட்டி அறைக்க சிவப்பாகும். அதிலே லிங்கம் காரம் கூட்டி

அறைத்து நவலோகத்திலும் தடவிப்போட அது ரசமாகும். முன்னே சொன்ன தங்கக் குருவாலே வெள்ளியை சுண்ணும்பு பண்ணி இதைக்கொண்டு வெள்ளியச் சுண்ணும்பு பண்ணி இந்தச் சுன்னமும் காரமும் வீரமும் கூட்டி நவலோக ரசமும் தொட்டால் வெள்ளியாகப் பழுக்கும்.

## 94 வாதாங்க விதி

எடைபாகம், புடபாகம், கைபாகம், செய்பாகம், சத்துரு, மித்துரு, ஊத்து, உலே, அறைப்புத் திட்டம், கவசத் திட்டம், ஆறி எடுத்தல், உருகும்போது கொடுத்தல் கண்ணில் புகைபடாது இருத்தல், சிரத்தையோடு செய்தல், கைகள் கல்வங்களை சுத்தி செய்தல். முதலிய திட்டங்களை அனுபவமாகக் கொண்டு முயலவேண்டும். வாதத்திற்கு ஆதிசூதம். அதனுல்தான் ரசவாதம் என்ற பெயர் வந்தது. புடத்திற்கு ஆதி கல்லுப்பு. நீற்றுமானத்திற்கு ஆதி பூரம். உருக்குமானத்திற்கு ஆதி வெங்காரம். மருந்துச் சரக்குகளின் சுண்ணும்பு நீற்றும் குரு. அமுரி என்னும் சிறுநீர் என்று தெரிந்திருக்க வேண்டும்.

## 95 நமசார சுத்தி சுன்ன வேதை தொடர்

நமச்சாரத்தை கோழிமுட்டைபோல் சீவி அதன்மேல் மிளகும் அபீனும் மேனிச் சாருலறைத்துப் பூசி அதன்மேல் அரக்கு மெழுகு கவசம் கட்டி அதன்மேல் சாணிச் சீலே செய்து உலர்த்தி நல்ல வங்கம் உருகும்போது அதில் குரட்டால் பிடித்து அமுக்கி எடுத்து கவசம் நீக்கிப் பார்க்க சுத்தியாம். இதற்கு வங்கச் சுன்னத்துடன் வீரம் கூட்டி அறைத்து அதன்மேல் பூசி மணலில் வைத்துப் புடமிட

சுன்னமாம். அதன்மேல் அது 8க்கு ஒன்று பூர சுன்னமும் வழலை சுன்னமும் கூட்டி அறைத்து வில்லை தட்டி காடை புடமிட சுன்னமாம். நாகம் உருகும்போது கொடுக்க அது கட்டும். துருசு குரு சேர்த்து அறைக்க சேநீராம். இந்த சேநீரில் ரசம் விட்டு கொதியிட இட்டலி போல் கட்டிப்போம். உருட்டி நீரிலிட மணியாம். ஷிசார சுன்னத்தின் எடைக்கு வெண்காரம் கூட்டி அறைத்து வாட்டி சேநீர் வைக்கவும். அதில் பூரம் தோய்த்து குகையிட்டு ஊத பூரம் சுன்னமாம். இதைக் கெந்தகத்தற்கு அப்பி குகையிட்டு ஊத கெந்தகம் சுன்னமாம். இதை வீரத்துடன் கூட்டி வாட்டி வழலைக் கட்டிக்கு அப்பிப்போட எண்ணெ கக்கும். அதன்பின் காரம் அரைத்து பூசி வாட்ட கட்டும். இந்த சுன்னத்தில் வீரம் கூட்டி அறைத்து தாளகத்திற்கு பூசி ஊத தாளகம் சுன்னமாம். இதை அறைத்து வீரத்திற்குப் பூசி ஊத வீரம் சுன்னமாம். இதை ரசத்திற்கு அப்பி உருக்க ரசம் குளிகையாம். இந்த மணியைக் கல்வத்திலிட்டு நொறுக்கி சரிஎடை தாளகம், கல்லுப்பு, வழலையும் சேர்த்து அறைத்து கிழியாஞ்சிட்டியில் வைத்து சீலை செய்து ஊத சுன்னமாம். இதை வங்கத்தில் அப்பி புடமிட வங்கம் சுன்னமாம். இதை சாரத்திற்கு அப்பிப் புடமிட்டு எடுத்து ஊத நமசாரம் சுன்னமாம். இதை அரைத்துத் துருசுக் கட்டிக்கு அப்பி புடமிட துருசு சுன்னமாம். இதை அறைத்துத் தங்கத் தகட்டிற்கு அப்பி புடமிட தங்கம் சுன்னமாம். இதை ரசத்திற்கு அப்பி புடமிட ரசம் மணியாம். இதை ஐந்து சுன்னக் குகையுள் வைத்து வாட்ட சுன்னமாம். இந்த மணிச் சுன்னத்தோடு வீரம் சேர்த்து அறைத்து துருசுக் கட்டிக்கு அப்பி குகையிட்டு ஊத துருசு சுன்னமாம். இதோடு வீரம் கூட்டி அரைத்து

கோழி முட்டைத் தோட்டிலிட்டு மூடி சீலேமண் செய்து புட மிட சிந்தூரமாம். இவ்விதம் மற்றொரு புடமிட சுன்ன மாம். அதன்மேல் வேதையறிந்து நடத்தப் பழுக்கும்.

## 96 நமச்சாரக் கட்டு

ஐந்தாம் காய்ச்சல் வெடியுப்பை இரும்புச் சட்டியி லிட்டு உருக்கி எருமைக் கொம்பு சீவின தூள் அது வாங்கு மட்டும் கிராசம் கொடுத்து, எடுத்து சேகீர் முறைப்படி சேகீர் எடுத்து வைக்கவும். இதில் நமச்சாரக் கட்டியை துவைத்து விளக்குச் சுடரில் வாட்டவும். இவ்விதம் 10 தரம் செய்ய அந்த நமச்சாரம் கட்டும்.

## 97 ராசிவேதை

நீர்மேல் நெருப்பு மூலிகையை அறைத்து குகைக்குள் வைத்து ராசி என்னும் தாமிரம் இட்டு மேலும் சாந்து மூடி சீலேமண் செய்து உலேயில் வைத்து உருக்கவும், இவ்விதம் 10 தரம் செய்ய பேதிக்கும்.

## 98 நாகம் புகையாது கட்ட கரியுப்பு மணி

பூநீறு கழஞ்சி 3 பருத்தி இலேச் சாறுல் அறைத்து அந்தச் சாறில் கலக்கி இதில் கரியுப்பு மணிகளாகப் பொறுக்கி எடுத்ததைத் தோய்த்து வெயிலிடவும். இப் படிக் காயக்காய அடிக்கடி தோய்த்து வெயிலிடவும். இவ் விதம் 3 நாள் செய்து காய்ந்தபிறகு ஒரு எலுமிச்சங்காய் அளவு பூநீறு எடுத்து அதோடு அந்த அளவு பருத்திஇலே யும் சேர்த்து அறைத்து அடை தட்டி அதில் குழிகள் செய்து அந்த உப்பைக் குழிக்குக் குழி வைத்து பதித்து

சாந்து மூடி ஒடு மூடி சீலைமண் செய்து 4 படி உமியில் புடமிட்டு ஆறி எடுக்க உப்பு மணிகள் உருகிக் கட்டி இருக்கும். இந்த உப்பு கழஞ்சி ஒன்று பொரிகாரம் கழஞ்சி ஒன்று நாயுருவி அரிசி கழஞ்சி ஒன்று இந்த 3ம் அறைத்து நாகம் கழஞ்சி 3 உருகும்போது கொடுக்கவும். தங்கம் வெள்ளிபோல் உருகி ஆடும். எத்தனை தடவை உருக்கினாலும் புகையாது. எடை போகாது. இது நல்ல முறை. சுலபமானது. முன்பு கூறப்பட்ட கரியுப்பு கட்டில் சீனி வெள்ளைக்கல்லுப் பொடி என்பது பூநீறுதான் என்று தெளியக் கிடக்கின்றது. இந்தக் கரியுப்புக் கட்டு கழஞ்சி ஒன்று ரசம் கழஞ்சி 4 கல்வத்திலிட்டு முலைப்பால் விட்டு அரைத்து உருட்டி, ஷெ உப்பால் கட்டின பொரிகாரம் ஷெ பாலால் அறைத்து இந்த மணி உருண்டைக்குக் கவசம் கட்டி, உலரவிட்டு குகையுள் வைத்து சீலை செய்து 4 எரு புடமிட்டு எடுத்து குகையிட்டுக் கரிப்போட்டு ஊத மணியாம். ஒட்டிஒட்டி தொந்திக்க நூறு தொந்தம் ஏறும். பரியிட்டால் பரியாம். மதியிட்டால் மதியாம். இதை முன்னே பார்த்து மற்றதைப் பின்னே பார்க்கவும் என்ற முறையைக் கவனிக்கத் தக்கது. கரியுப்பு என்பது சோற்று உப்புக் கல்லில் விளைந்த மணி.

## 99 துருசு வேதை

துருசுக் கட்டிக்கு 7 நாள் 14 போது கள்ளிப்பால் துவரத்துவரக் குத்திக் கொண்டுவர பொங்கும். அதைத் தாமிர சுண்ணும்பு நீரில் 3 தபா உருக்கிச் சாய்த்து செம்பு உருகும் போது எடைக்கு எடை கொடுத்து அந்தச் செம்பு கழஞ்சி ஒன்று வெள்ளி கழஞ்சி 4 சேர்த்து ஊதிப்போடவும் பேதிக்கும்.

## 100 சாதிலிங்கக் கட்டு

இரும்பு அரபொடி, ராசி அரபொடி வகை கழஞ்சி ஒன்றேகால், சிவப்பு குன்றிமணி காரத்தில் ராசி அர பொடியை விரவி சாதிலிங்கம் கழஞ்சி 5க்கு கவசித்து அது மேல் இரும்பு அரபொடி காரம் ஒரு கவசமிட்டு அதுமேல் வளையலோடு ஷெ காரத்தாலறைத்து கவசம்கட்டி சீலைமண் செய்து 3 படி உமியில் புடமிட கட்டும்.

## 101 கெந்தக தங்கச் செம்பு வேதை

கெந்தகம் கழஞ்சி 40 சிறு செறுப்படி சாறு விட்டு 3 நாள் அறைத்து 80 உருண்டையாக உருட்டி, வச்சிரக் குகைமுன் ஒவ்வொரு உருண்டையாக உருக்க மறு குகை யில் 5 பண எடை செம்பு இருக்கும். இந்தச் செம்புடன் 10 பண எடை தங்கம் கூட்டி உருக்க செம்பாம். இந்தச் செம்பு ஒரு பணஎடை எடுத்து நூறு வராகனெடை வெள்ளி உருகும்போது கொடுக்கப் பழுக்கும்.

## 102 கல்லுப்பு கட்டு துருசு நீறு

சோற்று உப்புக்கல் விளைந்த மணிகளாகப் பொறுக்கி ஓட்டிலிட்டு புங்கவேர் சீவி துவைத்து எடுத்த சாறு என் னும் பால் ஊட்டி 3 நாள் காயவைத்து, அந்த உப்பிற்குக் கீழும் மேலும் சூடன் வைத்து திரிக்கொளுத்த அந்த உப்பு மணிகள் கட்டும். துருசுக் கட்டிக்கு சூடன் அரைத்து கவ சம் கட்டி அதன்மேல் வெடியுப்பு அரைத்து கவசமிட்டுக் குழிக்குள் மணல் மறைவில் காடைப் புடமிடக் குருவாம்.

## 103 தாமிர வெள்ளைப் பாசாண வேதை

சங்கை கத்தாளம் சாறுவிட்டு அறைத்து தாமிரத் தகட்டிற்கு பொதிந்து புடமிட வெளுக்கும். அதன்பின் நாழியளவு கள்ளிப்பாலில் வெள்ளைப் பாசாணக் கட்டியை வைத்து பால் வற்றக் காய்ச்சி எடுத்து ஷை செம்பு உருகு முகத்தில் அளவாகக் கொடுக்க நல்ல வெள்ளியாம். கொடிக்கள்ளிப் பாலில் பாசாணம் மெழுகு ஆகும். ஷை 10க்கு ஒன்று கொடுப்பது யுத்தி.

## 104 பாசாண மெழுகு செம்பு வேதை

ஒரு சட்டியில் கழுதை மூத்திரம் ஒரு படிக்குமேல் விட்டு அதில் எலுமிச்சங்காயளவு வெள்ளைப் பாசாணக் கட்டியிட்டு மூத்திரம் வற்ருமல் விட்டு எரித்து வந்தால் அந்தப் பாசாணம் மெழுகு ஆகும். இந்த மெழுகு செம்பு கழஞ்சி 10 உருகு முகத்திலே ஒன்று கொடுக்க எட்டாய்ப் பழுக்கும்.

## 105 பாசாண மெழுகு பலதுறை வேதை

வெள்ளைப் பாசாணம் கழஞ்சி 8 சவுக்காரம் கழஞ்சி 3 ரசம் கழஞ்சி ஒன்று ஆக 12 கழஞ்சியும் சேர்த்து கத்தாளை சாறுவிட்டு அறைத்து அடைதட்டி வெயிலில் காயவைத்து 10 நாழிகை சென்றபின் எடுத்து எலுமிச்சம்பழச் சாருல் அறைத்து வில்லைதட்டி ஒரு சாமம் வெயிலில் காயவைத்து வட்டமான செம்புக் கிண்ணியுள் வைத்து, மேலே ஓடுமூடி சீலைமண் செய்து சிறு அடுப்பின்மேல் வைத்து 40 ஓலை இணுக்குகளால் ஒழுகு தீயாக எரித்து கீழே இறக்கி 15

நாழிகை ஆறவிட்டு அந்தப் பாசாணத்தை எடுத்து வைத்துக்கொண்டு, செம்புக்காசு காச்சி தட்டிப் போட்டு, இந்தச் செம்பு கழஞ்சி 7க்கு அந்த பாசாணம் 3 கூட்டி குகையில் வைத்து உருக்க தத்தாலி வெள்ளியாம். இந்த வெள்ளி 7ம் அரவைத்த செம்பு 4ம் துத்தநாகம் 2ம், மருளுமத்து பொன்னூமத்து முள்ளிலவம்பட்டை சாறும் ஒரு குகையில் விட்டு இந்தப் பாசாண வகை, வெள்ளைப் பாசாணம், வீரம், கவுரி பாசாணம், மனோசிலை ஆக 4ம் இந்த சாறிலிட்டு 7 சீலைமண் செய்து 60 நாழிகை எரிக்க ஏழாகப் பழுக்கும்.

## 106 குப்பி வைப்பு மெழுகு வேதை

ரசம், கெந்தகம், அரிதாரம், சாதிலிங்கம், மனோசிலை இவை வகைக்குப் பலம் அரை, தங்கத்தூள் பலம் கால், இவைகளை சித்தாமணக்கு எண்ணை விட்டு ஒரு சாமம் அறைக்கவும். இப்படி 3 நாள் அறைத்து வழித்து, காசிக் குப்பிக்குள் விட்டு குப்பி எங்கும்படத் துளாவி குப்பி வாய்க்கு மாக்கல் சீவிப் பொருத்தமாக அடைத்து அந்த வாய்க்கும் குப்பி எங்கும் வலுவாக அறைத்த மண் சீலை 3 செய்து, ஒரு பானையில் கால்பானை வெந்தய அளவு மணலிட்டு அதன்மேல் குப்பியை வைத்து அதன்மேல் மணல் கொட்டி மூடி, பானை வாய்க்கு கவிழ்சட்டி மூடி கமலாக்கினி ஒரு நாள் காடாக்கினி 2 நாள் எரித்து ஆறவிட்டு விநாயக பூஜை செய்து எடுத்து, வெள்ளி கழஞ்சி 2 பொன் பண எடை 2 சேர்த்து உருகுகிற முகத்திலே இந்த குப்பி மெழுகு பண எடை கொடுக்க எட்டயகாலரைக்காலாய்ப் பழுக்கும்.

## 107 பெரும்பூசணிக்காய் ரசமணி

கல்யாணிப் பூசணிக்காய் ஒன்றில் ஒருவிரல் நுழையும்படி துவாரமிட்டு அதனுள் 14 கழஞ்சி ரசம் விட்டு துளைத்த பாகத்தை அந்தக் காயின் துண்டால் அடைத்து குருகு மண் சேலை 4 செய்து ஒரு முழக் குழிக்குள் எருவடுக்கி அதன்மேல் காயை வைத்து அதன் மேலும் புறமும் எரு அடுக்கி பூசணிக்காய் தெரியாமல் எரு அடுக்கி உச்சியில் நெருப்பிடவும். புடம் ஆறி ஜாக்கிரதையாய் எடுக்க ரசம் குளிகையாயிருக்கும். அதன்மேல் சாரணை விதிகளை அனுசரித்து உருகி ஆடும்படி செய்து சிந்தூரம் செய்தால் நவலோகமும் பழுக்கும்.

## 108 முட்டை தோட்டால் மெழுகு வகை துருசு குரு

குஞ்சு பொறித்த கோழிமுட்டை தோட்டை ஒரு சட்டியிலிட்டு உவர் மண்ணும் தண்ணீரும் விட்டு அவித்து எடுத்து சவ்வு நீக்கி கழுவி உலர்த்த சுத்தியாம். இந்தத் தோடுகளுக்கு அரிதாரம், எலுமிச்சம்பழச் சாறு விட்டு அறைத்து விரவி குக்கிட புடமிட நீரும். இந்த நீறுடன் பூநீறு சவ்வீரம் பச்சைக் கற்பூரம் நாலும் சமஎடையாக எடுத்து எலுமிச்சம்பழச் சாருலறைத்து துருசுக் கட்டிக்குக் கவசித்து 3 நாள் வெயிலில் வைக்க துருசு வெள்ளையாகும். இந்த துருசு பொடித்து செம்பரத்தை பூவில் சிறிது இட்டு இடித்து பிளிந்து சிரட்டையில் விட்டு சவ்விரம் கழஞ்சி ஒன்று ஒரு கட்டியாக வாங்கி இதில் போட்டு வெயிலில் வைக்க அது மெழுகாகும். இந்த மெழுகு சாதிலிங்கத்திற்குப் பூசி தீபத்தில் வாட்ட அந்த லிங்கம் மெழுகாம். இந்த மெழுகை கெந்திக்கு கவசித்து வாட்ட கெந்தகம்

மெழுகாம். இந்த மெழுகை புனுகிட்டு மத்தித்து கொம்புச் சிமிழில் வைத்துக்கொண்டு தங்கம் மஞ்சாடி தகடு தட்டி மெழுகு மஞ்சாடி பொதிந்து நல்ல வெள்ளி உருகுமுகத்தில் கொடுக்க எழயமுக்காலாய்ப் பழுக்கும்.

## 109 துருசு சுன்னம்

சூடன் ஊமத்திரம் சவ்வீரம் வகைக்கு பண எடை 2, கட்டின நமச்சாரம் கோழி வெள்ளைக்காரம் வகைக்கு பண எடை 3. இவைகளை உமிழ்நீர் விட்டு மத்தித்து 4 கழஞ்சி துருசுக் கட்டிக்கு தடவி 15 நாழிகை வெயிலில் வைத்து அந்தக் கவசத்தை நீக்கிவிட்டு, நமச்சாரம், சூடன், சுண்ணும்பு வகை கழஞ்சி 2 பூநீறு கழஞ்சி4, சவுக்கார வெள்ளை கழஞ்சி ஒன்று கோழி வெள்ளை மலம் உலர்ந்தது கோழி முட்டைத்தோடு வகைக்கு கழஞ்சி ஒன்று இவைகளை சுண்ணும்பு தெளிவு நீரால் அறைத்து ஷி துருசுக்கு பொதிந்து குகையிலிட்டு சீலைமண் செய்து ஐந்து எருவில் புடமிட நீரும். (மேல் கவசம் உவருப்பு அறைத்து பொதிந்து குருகு மண்ணுலே 3 சீலைமண் செய்து புடமிடவும்) வேதை கண்டு நடத்தவும்.

## 110 முட்டைக்கூட்டு ரசபற்ப வேதை

ரசம் சவ்வீரம் வகைக்கு கழஞ்சி ஒன்று கவிழ்தும்பை சாறுல் அறைத்து ஒரு கோழிமுட்டைக்கூட்டில் அடைத்து ஷி சாறு கொஞ்சம் அதில் விட்டு கோழி முட்டைத்தோடு மூடி சதுரச் சீலைமண் 3 செய்து 4 எருவில் புடமிட்டு ஆறி எடுக்க பற்பம் இதனுடன் பொரிகாரம் கூட்டி பொடித்து உமிழ்நீர் விட்டு திரட்டி வெள்ளி7 செம்பு3உருகுமுகத்திலே

மஞ்சாடி கொடுக்க ஆருகப் பழுக்கும். ரசம் கெந்தகம் தாளகம் லிங்கம் வீரம் வகைக்கு கழஞ்சி 2 நுணுக்கி முட்டைக் கூட்டுள் அடைத்து முன்போல் கவசம் செய்து சட்டியில் ஒரு பிடி மணலுள் வைத்து ஒரு சாமம் எரித்து எடுக்க சிந்தூரமாம். இது பஞ்சபூபதி அரிசி எடை நோய்களுக்கு ஆம் வேதை கன்டும் செல்லலாம். புகைச் சரக்குகள் முட்டைக் கூட்டுக்குள்ளும் சிப்பிக்குள்ளும் கட்டும் நீறும்.

## 111 சோற்றுப்புக் கட்டு

நாயுருவி சமூலம் பிரண்டை ஒரளவாக சுட்டு இடித்து பொடியாக்கி 3 சிரங்கை சிறுநீர் விட்டு அறைத்து இரண்டு பாகமாக்சி ஒரு பாகத்தை ஓட்டில் பரத்தி தட்டி அதில் சோற்றுப்பு விளைந்த மணிகளை தனித் தனியாகப் பதித்து அதன்மேல் ஒரு பாகம் அறைத்த மருந்தை தட்டி மூடிஒடு மூடி சீலமண் செய்து குக்கிட புடமிட்டு எடுக்க உப்பு கட்டும்.

## 112 ரசக் கட்டு

காட்டு உள்ளிக் கிழங்கின் மேல் தோடு நீக்கி தட்டிப் பிழிந்து ஒரு சிரட்டையில் ரசம் விட்டு அதில் ஷ சாறு விட்டு 3 நாழிகை வரை மத்தித்து வெயிலில் வைத்து மறு நாள் ஜலம் விட்டு கழுவவும். இப்படி 10 நாள் செய்து பின்பு அந்தக் கிழங்கைக் குடைந்து அதனுள் இந்த ரசம் விட்டு சீலமண் செய்து கேரழிப்புடமிடவும். இப்படி 3 புடமிட அந்த ரசம் கட்டும். சாரணை விதிப்படி செய்துகொள்ளவும் மணியாம்.

## 113 வெடியுப்புக் கட்டு பாசாண வேதை

5ம் காய்ச்சல் வெடியுப்பை திநகு கள்ளிப்பாலில் போட்டு 3 நாள் வெயிலிலிட வற்றிப்போம் பின்பு எலு மிச்சம்பழ சாறு விட்டு அறைத்து கிழியாஞ்சிட்டியில் வைத்து சிட்டிமூடி 3 சீலைம்ண் செய்து சிறுபுடமிட மிளகுப் பொறிபோல் இருக்கும். அதைக் குப்பைமேளிச் சாருல் அறைத்து ஒரு புடமிடவும். இதை அறைத்து வெள்ளைப் பாசாணத்துக்கு கவசித்து புடமிடவும். இது செம்புக்கு சரி எடை கொடுக்க கட்டி உருகும். இது செம்பு 10க்கு ஒன்று கொடுக்க பழுக்கும்.

## 114 வங்க சிந்நூர வேதை

கட்டின வங்கம் கழஞ்சி ஒனறு உருகும்போது அடுப் புக்கரியின் தூள் கொஞ்சம் கொஞ்சமாய் கிராசம் கொடுத்து பின்பு சாதிலிங்கப்பொடி கிராசம் கொடுத்து வர சிந்தூர மாம். வெள்ளி கழஞ்சி ஒன்று உருகும்போது இது ஒரு மஞ்சாடி கொடுக்க பழுக்கும்.

## 115 சவ்வீர வேதை

சவ்வீரம் ரசம் வகை கழஞ்சி ஒன்று, குப்பைமேனிச்சா ருல் அறைத்து பின்பு கோழிமுட்டை மஞ்சள்கருவும் பொரி காரமும் கலந்து விட்டு அறைத்து செம்புக் கிண்ணத்தி லிட்டு வறுத்து எடுத்துவைத்துக்கொண்டு வெள்ளி கழஞ்சி ஒன்று உருகுமுகத்தில் இது ஒரு மஞ்சாடி கொடுக்க பழுக் கும்.

## 116 பாசாணக் கட்டு

வெள்ளைப்பாசாணம் சவுக்காரம் சமஎடையாக எலுமிச்

சம்பழச்சாருலறைத்து சட்டியிலிட்டு செம்பு கிண்ணியால் அதைக் கவிழ்த்தி மூடி சந்துவாய் சீலேசெய்து அதன் மேல் மணல் கொட்டி 30 நாழிகை எரித்து எடுக்க கட்டும்.

## 117 சாதிலிங்கக் கட்டும் மெழுகும்

வெள்ளைக் குங்கிலியத்தைப் பலாப்பால் விட்டு அறைத்து 4 கழஞ்சி சாதிலிங்கத்திற்குப் பொதிந்து சீலே மண்செய்து ஒரு சட்டியில் ஒரு படி மணலுள் புதைத்து மூடி மேல் சட்டி மூடி ஒரு சாமம் சிறு தீ எரிக்கக் கட்டும். இந்தக் கட்டியை ஓட்டிலிட்டு ஆதாளம்பால் சுருக்குக் கொடுக்க மெழுகு ஆகும். வெள்ளி உருகும்போது நாலுக்கு ஒன்று கொடுக்க ஏழரையாய்ப் பழுக்கும்.

## 118 சாதிலிங்க மெழுகு வேதை

பசுவின் குழம்பு சீவிய தூள் ஒரு கழஞ்சி சாதிலிங்கத் திற்கு கிராசமாய்ச் சுருக்கிட மெழுகாம். வெள்ளி 7க்கு 3 கொடுக்க நாலரையாய் பழுக்கும்.

## 119 மடல் துத்த மெழுகு வேதை

வெள்ளைப்பூ வாடாமல்லிகை சாற்றில் மடல்துத்தம் கழஞ்சி 6 ஊறப் போட்டு நாலாம் நாள் எடுத்து ஓரிதழ் தாமரை சாகம் விட்டு வறுத்து சிவந்த பருவமாய் வரும் வரை வறுத்து அதன்பின்பு புத்துத்தேறல் சுருக்குக் கொடுக்க, மெழுகாகும். இந்த மெழுகு வெள்ளி 4 உருகும் போது ஒன்று கொடுக்க ஏழரையாய்ப் பழுக்கும்.

## 120 வெள்ளீய வேதை

வெள்ளியம் கழஞ்சி 4 உருக்கி செருப்படிச்சாறு முருக்கிலைச் சாறுகளில் வகைக்கு 4தரம் சாய்த்து பின்பு உருக்கி ரசம் ஒரு கழஞ்சி தொந்தித்து எருமைக் கொம்புக்குள் நத்தைப் பால்விட்டு இந்தவங்கம் அதில் வைத்து நேர்வாளப் பருப்பு ஒரு கழஞ்சிதூள் அதன்மேலிட்டு கொம்புகொண்டு அடைத்து 2 சீலைமண் செய்து இடுப்பளவு புடமிடவும். பிரயோகம் கண்டு நடத்திக்கொள்ளவும்.

## 121 சாதிலிங்க சிந்தூர வேதை

அரசிலையை சிறுநீர் விட்டு அறைத்து 5 கழஞ்சி சாதிலிங்கத்திற்கு கவசித்து ஒரு சீலை மண் செய்து காடைப் புடமிட்டு எடுத்து, பின்பு முதியார் கூந்தல் அறைத்து கவசித்து புடமிடவும் இப்படி 11 புடமிட்டு எடுத்து கோழி முட்டை மஞ்சள் கருவுடன் போட்டு தோடு மூடி 3நாழிகை எரித்து எடுக்க சிந்தூரமாம். வெள்ளி 7 உருகும்போது இந்த சிந்தூரம் 3 கொடுக்க ஏழரையாய்ப் பழுக்கும்.

## 122 சாதிலிங்க மெழுகு வேதை

துருசு வெடியுப்பு சீனிச்காரம் வகைக்கு கழஞ்சி 4 பொடித்துக்கொண்டு ஒரு ஓடு அடுப்பில் வைத்து சிறு தீயாக எரித்து அதில் சாதலிங்கம் ஒரு கழஞ்சி கட்டியை வைத்து ஷ்ஷி பொடி கீழும் மேலும் வைத்துப் புரட்டிக் கொடுத்து எரிக்கவும் ஷ்ஷி பொடி எல்லாம் தீர்ந்தபின் லிங்கம் கட்டும். அந்த லிங்கத்தை வேறு ஓட்டில் வைத்து உழக்கு எருக்கலம்பால் சுருக்கிட மெழுகாம். ஊசி குத்தினல் இறங்கும் அதுதான் மெழுகு ஆனதின் பருவம். அப்டி மெழுகு ஆகாதிருந்தால் கருவேலம் விதை குழித்தை

லம் இறக்கி இந்த தைலம் சுருக்கிட மெழுகு ஆகும். இது வெள்ளி கழஞ்சி ஒன்று உருகும்போது ஒரு மஞ்சாடி கொடுக்க எட்டாகப் பழுக்கும்.

## 123 அரிதாரக்கட்டு வேதை

பூவரசின் காயும் பூவுமாகப் பறித்துக்கொண்டுவந்து இடித்துப் பதக்கு தண்ணீர் பானையில் விட்டு கலக்கி, அரிதாரம் வேண்டியதை துணியிலிட்டு கிழியாகக் கட்டி அதனுள் தொங்கவிட்டு அந்தத் தண்ணீர் வற்ற எரித்து எடுத்து 20 குமட்டிக்காய்களுக்குள் வைத்து எடுத்துக் காடைப் புடமிட கட்டும், இதற்கு செம்பு இரும்பு சரியாகக் கூட்டி (சுத்தித்து) இது கழஞ்சி 6 உருக்கி ஷிதாரம் மஞ்சாடி அரை கொடுத்து துய்யான் ஏழரைக்கு இது3கொடுத்துத் தாமிரம் பட ஊதிப்போடவும் பழுக்கும்,

## 124 குரு முறைக் கவி

துத்தநாகம் சூதமொடு துலங்குவங்கம் வெண்காரம்
அத்தனிறங் கூரரிதாரம் ஆனவெள்ளைப் பாசாணம்
ஒத்தமுதலொன் றென்றேற்ற வுற்றதொகையா மெழு
[மூன்றும்
இத்தளருக்கன் பாலிலறைத் திரும்புச் சிமிழிலடைத்து
[வையே. 1

வைத்த சிமிழின்மேலேதான் மூன்றுசீலை மண்செய்து
ஒத்தஉலையில் கரிப்போட்டு வூதிப்பதத்திலே யெடுத்து
நித்தமிது வென்றேயறிந்து நீதான் சிமிழைத்
[திறப்பாயேல்
சித்தசனை யெரித்தருளும் சிவனார் கயிலை நிறமாமே. 2

இதன் உரை; துத்தநாகம் 1, ரசம் 2, வங்கம் 3, வெங்காரம் 4, அரிதாரம் 5, வெள்ளைப் பாசாணம் 6 இந்த இலக்கப்படி அவைகளைக் கழஞ்சிக்கணக்காக ஏற்றி எடுத்து கல்வத்திலிட்டு எருக்கலம்பாலால் 4 சாமம் அறைத்து, இரும்புக் குகையில் வைத்து இரும்பு மூடியிட்டு 4 சீலைமண் செய்து உலர்த்தி உலையில் வைத்து கரிப்போட்டு குகை பழுக்க ஊதி ஆறினபின் எடுக்க கைலாசகிரிபோல் வெள்ளிமயமாய் இருக்கும் என்பதாம். இதன் வேதை கண்டு நடத்திக் கொள்ளவும்.

## 125 கையில் தேய்க்க ரசமணி

முன்கூறிய பாலாட்டின் குழைச்சாறு உள்ளங்கையில் கசக்கி பிளிந்து ரசம் விட்டு மத்திக்க உடன் ரசம் வெண்ணையாம். இதை உருட்டி எடுத்து உளுந்தம்பயறு அறைத்து குகைசெய்து அதில் வைத்து மூடி 3 சீலைமண் செய்து இரவு 30 நாழிகை கனலும்படி 2படிவரகுஉமிக்குள்காற்றுடா மூலைக்குள் புடமிட்டு காலையில் ஆறி எடுக்கவும். இப்படி 40 நாள் புடமிட வெள்ளிபோல் உருகி ஆடும். இதை மண் குகையிலிட்டு பொரிகாரம் போட்டு உருக்கும்போது உருகும்சமயம் களிப்பாக்கும் வெற்றிலையும் மென்று அந்தநீர் உமிழ மணி வெள்ளிபோல் பிரகாசிக்கும், கம்பி தகட்டிற்கும் வரும். இதுதான் பதம். இக்குளிகை எடைக்கு தங்கம் சேர்த்து உருக்கிஎடுத்து நூறு வராகன் செம்பு உருகுமுகத்தில் இது ஒரு வராகன் கொடுக்க பத்தாகப் பழுக்கும். இது 1வது முறையின் தொடர்ச்சியாம்.

## 126 மூலிகையில் ரசமணி

ஒரு சட்டியில் 4 படி ஆடுதின்னுப்பாலைச்சாறு விட்டு அதில் 10வராகனெடை ரசம் விட்டு காய்ச்சி உழக்காக வற்றினபின் இறக்கி கழுவி எடுக்கவும். இப்படி தினசரி தவறுமல் 8 நாள் காய்ச்சினுல் ரசம் குளிகையாம். 2 படி சாறு விட்டு காய்ச்சினுல் 16 நாளில் குளிகையாம். இந்த குளிகைக்கு சரி எடை தங்கம் சேர்த்து உருக்கி நூறு வராகன் தரவச் செம்புக்கு ஒரு வராகன் எடை உருகும்போது கொடுக்க பத்தாகப் பழுக்கும். இவ்விதமே கல்தாமரை சாறு, கோவையிலைச்சாறு, கஞ்சாச்சாறு, கருவூமத்தஞ் சாறுகளிலும் செய்யலாம்.

"காணுஞ் சுத்திசெய்த சூதம்கட்டவே நீகேளடா
பூணு மஞ்சணுதிலை பிழிந்தசாறு சுருக்கிட
வேணுமிரண்டு நாழிகையில் மெழுகுபோலுருண்டிடும்
தோணும் வாசித்தம்மனம் சுக்கிலமும் கட்டும்."

மஞ்சணுதி என்பது கருவூமத்து. இம்முறையன்றி, கலசத்துள் சுண்ணும்பு தடவி சூத எடைக்கு கெந்தக தூளிட்டு அதன் நடுவில் ரசம்விட்டு மேலோடுமூடி சீலைமண் செய்து குழிக்குள் ஜலபாத்திரமேல் ஷெ கலசம் வைத்துமூடி மேலே எருவடுக்கி கந்தகம் புகையும் அளவுக்கு புடமிடவும். இப்படி சில புடமிட அந்த ரசம் மணியாம், அல்லது நமச்சாரமும் துருசு பற்பமும் அறைத்து செய நீரெடுத்து இரும்புக் கரண்டியில் ரசம் விட்டு சுருக்கிடினும் மணியாம். அல்லது அரைப் பலம் ரசமும் ஒரு பலம் காடிக்காரவில்லையும் கால்பலம் சோற்றுப்பும் எலுமிச்சம்பழச்சாருல் அறைத்து சிறு சிட்டியிலிட்டு சீலைமண் செய்து அவிபுடமிட்டு எடுத்து

கழுவி மறுபடி ஒரு புடமிட்டு உருக்கினும் மணியாம். ரசத்திற்கு மனேசிலை தூள் கொடுத்து கோவை முதலிய சாறுகள் விட்டு காய்ச்சினும் மணியாம். காடிக்காரம் கொண்டு பல விதங்களில் ரசம் கட்டுவார்கள். இவைகள் சப்பைக் கட்டாம். மூலிகையில் கட்டுவதே சாலச்சிறந்ததாம். சிவன் விந்து என்னும் ரசத்தைக்கட்டினவரே சித்தர் எனப்படுவர்.

## 127 கெந்தக மெழுகு வேதை நோய் நீக்கம்

வெள்ளைச் சீலையில் எருக்கலம்பாலூட்டி அதன்மேலும் ஷை பாலூட்டி உலர்த்தி இப்படி 15 தபா செய்து உலர்த்தி அதில் 2 பலம் நெல்லிக்காய் கந்தகம் வைத்து துளாயந்திரமாக முடிந்து ஒரு பானையில் கத்தாளம் சோறு நிறைய விட்டு ஷை பொட்டணத்தை பானைத்தூரில் படாமல் தொங்கவிட்டு காய்ச்சவும் சாறுவற்றிவிட்டால் மேலும் சாறுவிட்டு காய்ச்சவும். இப்படி 40 நாள் காய்ச்ச ஷைகெந்தகம் மெழுகாம். தாமிரத்தில் வேதையிடப் பழுக்கும். வெள்ளி பழுக்கும். ஒரு சிரங்கை இந்துப்பு 10 கழஞ்சி ரசமும் ஒட்டிலிட்டு உப்புப் பொறிய எரித்து இறக்கி ஜலம் விட்டுக்கழுவியரசத்தை எலுமிச்சம்பழச்சாறு விட்டறைத்து 8பண எடை எடுத்து ஷைமெழுகு கால்பண எடை எடுத்து மத்தித்து ஒரு செம்புக்காசில் தடவி விளக்குச்சுடரில் சற்று வாட்டி எருவின் தீயில் 30 நாழிகை போட்டுவைத்து காலையில் எடுக்கப் பழுத்திருக்கும். இந்தக் கெந்தக மெழுகை மிளகளவாக அனுபானங்களில் கொடுத்துவர, வெற்றிலையிலாவது திப்பிலியிலாவது தடவிக்கொடுக்க குட்டம் 18ம் தீரும். பத்தியம் பாலும் நெய்யும் சேர்க்கவும். திப்பிலி மூலத்தில் முன்போல் கொடுத்துவர குன்மம் 8ம் தீரும். பால் நெய் உப்பு கோழிச்சாறு கூட்டவும். காணம் அவித்த

தண்ணீரில், சுக்கு மிளகு திப்பிலி வெள்ளைப்பூண்டுத் தைலத்தில் கொடுக்க 3 நாளில் குளிர் சுர முதலியது தீரும். தேனில் இஞ்சிச் சாற்றில் கொடுக்க சன்னி 13ம் தீரும். தேனிலிட வாதசுரம் குளிர் தீரும். 7ம் நாள் தலைக்கு நீர் விடவும். பசு வெண்ணையில் கொடுக்க பெருவயிறு, மகோதரம், உதர நோய்களெல்லாம் தீரும். தேனில் கொடுக்க பவுந்திரம் தீரும். அந்த புண்ணில் பூச புண் ஆறும். இதற்கெல்லாம முன் சொன்ன பத்தியத்தைக் கடைப்பிடிக்கவும்.

## 128 மூலிகையில் ரசமணிகள்

சேவகனார் கிழங்கைத் துளைத்து அதனுள் முசுட்டை இலையறைத்து வைத்து அதன்மேல் ரசம்விட்டுமேல் முசுட்டைசாந்து மூடி அதன்மேல் ஷை கிழங்கு மூடி சீலைமண் செய்து சிறு புடமிடவும். இவ்விதம் 24 புடமிட்டு நெல்லுப் புடமிட குளிகையாம். கீழ்க்காய் நெல்லி அறைத்து அதனுள் ரசம் விட்டு மூடி நெல்லுப்புடமிட குளிகையாம். பிராய்ப்பூடு அறைத்து கரண்டியிலிட்டு நடுவே ரசம் விட்டு மூடி புடமிட குளிகையாம். வலியும். வெருகண் கிழங்கு துளைத்து அதனுள் ரசம் விட்டு மூடி சீலைமண் செய்து பெரும் புடமிட குளிகையாம். வெண்கல வட்டிலில் செவ்வகத்திச்சாறு அல்லது அதன் பூச்சாறு விட்டு ரசமும்விட்டு மத்தித்து 3 நாள் வெயிலிலிட குளிகையாம். அந்தரத் தாமரைச்சாறு நாழி பானையிலிட்டு ரசம் கழஞ்சி தொளா யந்திரமாய்த் தூக்கி எரிக்க அது பிசினும். இதனொடை கெந்தகம் சேர்த்து மத்தித்து தட்டிவைக்கத் தகடாம். அதை, அத்தி இலையும் பொற்றலைக்கரிப்பானும் கையாந்தகரையும் அறைத்து குகை செய்து மேல் மூடியும் செய்து உலர்த்தி கிருஷ்ண அப்ரேகம் தண்ணீரால் அறைத்து

குகையுள்ளும் முடியிலும் பூசி ஷ ரசக்கிளியை வைத்து மூடி சீலமண் செய்து தண்ணீரில் கிளி கட்டி எரிக்கவும். குளிகை இறுகும்வரை எரிக்கவும். இந்த குளிகை அரை பண எடை எடுத்து வெள்ளி 6 செம்பு 4 சேர்த்து உருகும் போது கொடுக்க ஒன்பதாகப் பழுக்கும்.

## 129 மடல் துத்த மெழுகு வேதை (கவி)

'மடையன் சங்கிலியதாக வங்கமோர் தூணதாக
கொடியவப் ரேகசுன்னங் குகப்படு சூடன்கூட்டி
மடையனைக் கவசம்கட்டி வங்கத்தில் ரசத்தையூட்டி
திடமுடன் முலைப்பால்விட்டு சேர்த்தறை மெழுகதாமே 1

மெழுகொரு மாவெடுத்து வெள்ளியீர் நூறுகாசு
கொழுவியே உருகும்போது கொடுத்திடத் துத்திப்பூப்
[போல்
பழுத்ருடும் பதினேழ்மாற்றும் பாலிக்கும் மடையன்வேலை
வழுத்திடத் தகுமோ சூத வாதி கைப் பாணமீதே. 2

## 130 அஞ்சு சுன்னக் குகை விதி

கடல்நுரை பலம் ஒன்று கோழிமுட்டை வெண்கருவால் அறைத்து குகையிட்டு மூடி சீலமண் செய்து உலையில் வைத்து ஊதி எடுத்து, இது கண்ட எடைக்கு சோற்றுப் புக்கல் கூட்டி அறைத்து முன்போல் ஊதி எடுத்து, இது கண்ட எடைக்கு வெடியுப்புசேர்த்து அறைத்து முன்போல் ஊதி எடுத்து, இது கண்ட எடை சூடன் கூட்டி அறைத்து ஊதிஎடுக்கவும். இவைஅறைக்கும்விதி: முதலாவது அறைப்பு வெண்கரு2வது சுண்ணும்புத்தெளிவுநீர் 3வது வெடியுப்

புச் சேநீர், 4வது மூலைப்பால், 5வது வாய்நீர் என்று தெரியவும். அதன்பின் குகையும் மூடியும் செய்து அதை சுண்ணும்பு நீருள் வைத்து மூடி எரித்து எடுத்துவைத்துக் கொள்ளவும். இதில் வைத்துப் புடமிட்ட வேதைச் சரக்குகள் கடுங்காரம் ஏறும்.

## 131 துருசுநீறு சேநீர்

பவளப்புத்தை அறைத்து துருசுக்கு பொதிந்து சீலை மண் செய்து சிறுபுடமிட நீரும். இதற்கு இரட்டிசாரம் கூட்டி அறைத்து வைக்க சேநீராம். இது கரண்டியில் விட்டு ரசம் விட்டு கொதிக்கவைக்க ரசம் கட்டும்.

## 132 உப்புக்கல் சிந்தூர வேதை

சோற்று உப்புக்கல்லை சனிநாயிறுச்சாறு விட்டு அறைத்து உலர்த்த பற்பமாம். இந்த பற்பம் தீமுருகல் பாசாணம் வகைக்கு ஒரு மஞ்சாடி சேர்த்து உமிழ்நீர் விட்டறைத்து வில்லை உலர்த்தி சீலைமண் செய்து சிறுபுடமிட சிந்தூரமாம். வெள்ளி மஞ்சாடி 7 செம்பு மஞ்சாடி 3 தங்கம் மஞ்சாடி ஒன்று இந்த சிந்தூரம் மஞ்சாடி ஒன்று கொடுத்து உருக்கி புடமிட ஐந்தாகப் பழுக்கும்.

## 133 ரசம், தாளகம், மனோசிலை கட்ட

வெள்ளைக்காக்கணம்சாறு, கருவூமத்துசாறு. வகைக்கு 10 தபா ரசம் மத்தித்து கழுவிஎடுத்து, நன்னாரிஇலைசாறில் 3 தபா மத்தித்து, ஓட்டிலிட்டு முத்தெருக்கன் செவிச்சாறு ஒரு படி சுருக்கிடவும். பின்பு அந்த சாறில் 3 தபா மத்திக்கவும். பின்பு அந்த இலை அறைத்து குகை செய்து அதில்

அந்த ரசம் விட்டு சீலே மண் செய்து சிறுபுடமிடவும். இப்படி 5 புடமிட அந்த ரசம் கட்டும். மணியாகும். தங்கம் சேர்த்து வேதைகளிலிட பழுக்கும். இவ்விதமாக, தாளகம் மனேசிலேயும் கட்டலாம்.

## 134 இரும்பில் ஈயம் எடுக்க

அஞ்சனக்கல் அரிதாரம் இரும்பு அரபொடி வகை கழஞ்சிஒன்று பொரிகாரம் கழஞ்சி கால் சேர்த்து குகையில் வைத்து உருக்க நல்ல ஈயமாம். கொட்டிலான்சல்லி சங்கு மணி அரிதாரம் வகை கழஞ்சி 2 பொரிகாரம் கால் ஆவரை சமூலதூள் அரை குகையிட்டு சீலேமண் செய்து உருக்க ஈயமாம்.

## 135 இரும்பை உருக்க

இரும்பு அரபொடி பலம் ஒன்று ஆண் கீழ்க்காய் நெல்லி பலம் ஒன்று பற்படாகம் பலம் ஒன்று பொரிகாரம் பலம் கால் சேர்த்து அறைத்து குகையில் வைத்து உருக்க நன்ருய் உருகி ஆடும். அக்கராக்காரத்திற்கும் உருகும். கெந்தகம் தூவிஞலும் உருகும்.

## 136 பால்களே நீராக்கும் குரு

கொடிக்கள்ளிப் பட்டையை உலர்த்தி சுட்டு சாம்பலாக்கி எலுமிச்சம்பழச் சாறில் கலக்கி தெளிவு இறுத்து அதில் சிறிது வீரம் பூரம் தூள்செய்து போட்டு காய்ச்சி உப்பு எடுத்து அதோடு இந்நூலில் கூறிய வழலே என்ற சவுக்கார சுண்ணம் சிறிது சேர்த்து வைக்கவும். இந்தக் குருவை சிறிது எடுத்து கொடிக்கள்ளிப்பாலில் போட்டால்

அது ஜலமாக மாறும். வேதைச் சரக்குகளுக்கு முறைப்படி சுருக்கிடலாம். பாசாணம் மெழுகாம். இப்படியே திருகு கள்ளி தில்லை எருக்கலை முதலியவைகளிலும் அதனதன் பட்டை சுட்டு முன்போல் குருமுடித்து அதனதன்பாலிலிட அது ஜலமாகும். கொடிக்கள்ளிப்பாலில் எடுத்த ஜலத்தால் லிங்கக்கட்டி துவைத்து விளக்கில் வாட்ட அது மெழுகு ஆகும். இப்படியே ஒவ்வொரு ஜலத்திலுைம் முறைப்படி செய்ய கட்டுகளும் மெழுகுகளும் ஆகும். அதனதன் உப்பை வீரம் கூட்டி சட்டியிலிட்டு பாலை ஏந்திலுைம் ஜலமாகும் என்பதும் ஒரு முறையில் இருக்கின்றது.

## 137 முக்கூட்டு வேதை

செங்கொடிவேலி வேர் அறைத்து குகைக்குள் வைத்து சுத்தித்த அயச்செம்பு 2 இரும்பு சல்லி ஒன்று வெள்ளீயம் கால் இவை கழஞ்சிவீதமாகஎடுத்து குகையிட்டு சாந்திட்டு மூடி உருக்க ஐந்தாம்தங்கம் சேர்க்க அதிகமாகப்பழுக்கும்.

## 138 தங்கபற்பம் வேதை

லிங்கம் சவ்வீரம் சமம் சேவுகன் ரத்தம் விட்டறைத்து தங்கக்கிண்ணத்தில் வைத்து புடமிட பற்பமாம். வெள்ளி கழஞ்சி ஒன்று உருகும்போது இந்த பற்பம் ஒரு மஞ்சாடி கொடுக்க பழுக்கும்.

## 139 இரும்பின் ஈய வேதை

134ல் கூறிய கீழ்ப்பாகப்படி இரும்பில் ஈயம் எடுத்து அந்த எடை ரசம் தொந்தித்து அறைத்து குகையில் வைத்து உருக்கவும். எடை போகாது. ஒரு கழஞ்சி தங்

கக் கிண்ணத்துள் அதை வைத்து சீலமண்செய்து புடமிட பற்பமாம். பாட்டலில் பத்திரப்படுத்தவும், வெள்ளி கழஞ்சி ஒன்று உருகும்போது ஷி பற்பம் ஒரு மஞ்சாடி கொடுக்க பத்தாகப் பழுக்கும் உறுதி. அரபொடி பலம் ஒன்று ஊசி காந்தம் பலம் ஒன்று வீரம் கழஞ்சி அரை முலைப்பால றைத்து குகையிட்டு ஊத இரும்பு ஈயமாம்.

## 140 அயச்செம்பு எடுக்க தைல வகை

காஞ்சூரையின் இலை பட்டையும் நிழலுலர்த்தி காயப் போட்டு தரித்து ஒரு பானைக்குள் செம்மி சட்டி மூடி சீலை மண் செய்து குழித்தைல முறைப்படி தைலம் எடுத்து, இந்த தைலத்தில் இரும்புச் சல்லிகளை விரவி குகையிலிட்டு சீலை மண் செய்து உலையில் வைத்து உருக்கவும். பின்பு பொரிகாரமிட்டு உருக்க தாமிரமாம். அயச் செம்பு உருகா விடில் நாலைந்து நாங்கிள் புழுக்களிட நீராக உருகும். இந் தத்தாமிரம் சுத்தத்தாமிரமாக செருப்படிஇலையை இடித்து காடித் தெளிவில் கலக்கி ஷி செம்பு உருக்கி சாய்க்கவும். இப்படி 3 தபா செய்ய சுத்தமான தாமிரமாம். வேறுமுறை முற்றின அரசமரப் பட்டை நாவல் மரப்பட்டை சமனுக எடுத்து முன்போல் குழித்தைலம் இறக்கி முன்போல் இரும்பு சல்லிகளை விரவி முன்போல் குகையிட்டு உருக்க உருகி கட்டியாம். மீண்டும் தைலம் தோய்த்து காரமிட்டு உருக்க சுத்தமான தாமிரமாம். வகாரமுறைக்கு இது ஏற்றதாகும்.

## 141 கெந்தக செம்பு வேதையும் குகையும்

கெந்தகம் கழஞ்சி 15 சிறுமணிகளாக தகர்த்து ஒரு

புதுச் சட்டியிலிட்டு அது முங்க அவுரிச்சாறு விட்டு 3 நாள் வெயிலில் காயவைத்து பிறகு குப்பைமேனிச்சாறு முங்க விட்டு 3 நாள் வெயிலில் காயவைத்து பின்பு கையாந்த கரைச்சாறு (பொற்றலை) படி இரண்டரை சுவரும்படி கல்வத்தில் அறைத்து உருட்டிவைத்துக்கொண்டு, குயவன் கைவளித்தமண், கிட்டம், வெள்ளைக்கல்லு. உமிக்கரி சமமாக சேர்த்து மெழுகுபோல்அறைத்து குகையும் மூடியும்செய்து உலர்த்தி அதில் ஷி கெந்தகம் வைத்து மூடி சீலமண் செய்து கரி உமியில் மெதுவாக ஊதி உருக்க அந்த கெந்தகம் செம்பாம். இது ஒரு கழஞ்சி கெந்திக்கு அரைக்கால் கழஞ்சி செம்புதான் வரும். இரும்புச் சல்லி கழஞ்சி 4 கழுவி இந்த குகையில் வைத்து பழுத்து உருக ஊதி இந்த கெந்தக செம்பு கழஞ்சி ஒன்று கொடுக்க 5 காணும். இந்த தங்கம் கழஞ்சி 4க்கு கொடுக்க செம்பாம். இத்தாய் சேர்ந்த செம்பு வெள்ளி கழஞ்சி 24 உருகும்போது ஒரு மஞ்சாடி கொடுக்க உள்ளபடி பழுக்கும்.

## 142 ரசத்தில் தாமிரம் எடுக்க

பிராய் மரத்தின் பாலில் ஒரு கழஞ்சி ரசம் விட்டு மத்திக்க திரளும். அதை செங்கீரை, செவ்வூமத்து, பெருந்தும்பை 3ம் சமமாக அறைத்து குகை செய்து அதனுள் வைத்து மேலும் ஷி சாந்தால் மூடி சீலமண் செய்து 2 எரு புடம் இப்படியே 10 புடமிட ரசம் தாமிரமாம்.

## 143 ரசக் கட்டு முறைகள்

பால் சட்டி இலை பிரண்டையுடன் பொரிகாரம் கழஞ்சி சேர்த்து அறைத்து குகைசெய்து மூடியும் செய்து உலர்த்தி

அதில் 1 கழஞ்சி ரசம் விட்டு மூடி சீலைமண் செய்து 8 நாள் வெயிலில் காயவைத்து உமிக்காந்தலில் புடமிட்டு எடுக்க ரசம் கட்டியிருக்கும். வேறு ரசமும் கற்பூரமும் புனுகும் மத்தித்து சவுக்காரம் தகடாய் தட்டி அதற்குள் வைத்து பொன்னூமத்தங்காய் அறுத்து விதையை எடுத்து அறைத்து அதற்குப் பூசி அந்தக்காய்க்குள் வைத்து சீலைமண் செய்து புடமிடக் கட்டும். சிரியாநங்கைச் சாறு, கருவூமத்துச்சாறு அல்லது கல்தாமரைச்சாறு உழக்கு சுருக்கிட்டாலும் ரசம் கட்டும்.

## 144 உப்புக்குரு

துருசை கெந்தகத்தோடு அறைத்து 3 நாள் வெயிலிட்டு காரச்சுண்ணும்பு சமம் கூட்டி அறைத்து இத்துடன் 4 படி மோர் ஒரு சட்டியில் விட்டு அந்தத் தெளிவு நீரை இறுத்து அதில் சுண்ணும்புக்கல் நீற்றி அதில் தெளித்த நீரை இறுத்து அதிலே உப்புக்கல் போட்டு பொக்கணந் தூக்கி இலை கசக்கி சற்று சாறுபிளிந்து எரிக்கலங்கம்பு கொண்டு வைத்து சட்டிக்குள் தீ எரிக்கவும் வெடிக்கும். இப்படி 4 சட்டி வைத்துக்கொண்டு தீ எரிக்கவும் உப்பு பட்டு நீருகும். இந்த உப்பைப் பத்திரப்படுத்தவும். இது ஒரு குருவாகும்.

## 145 வகார முறைக் கவி

1 வலிந்த நாகமும் ரசத்த செம்பும்
கலிங்க மாகா கைவளை பச்சையும்
துலங்கு மாவெடைபோல உருச்கிட
இலங்கு மாடைதா னெட்டரை காணுமே.

2 நல்லவெள்ளி யெட்டுமா நலங்கொள்செம்பு நாலுமா
கொல்லுநாகம் ரெண்டுமா குலாவுசெம்பொ னவ்விடை
வில்லினைசை யொன்றுகூட்டி மேவியூத வல்லீரேல்
எல்லையில்லா விசனுணை யெட்டுமாற்றுக் காணுமே.

வெள்ளி 8 செம்பு 4 நாகம் 2 தங்கம் 2 வெங்காரம் ஒன்று சேர்த்து உருக்குவதாம்.

## 146 சேர்மான வேதை

கட்டின நாகம் 2 தங்கம் ஒன்று உருக்கிச் சேர்த்து வெள்ளி 7 அயச்செம்பு 3 உருகுமுகத்தில் கொடுக்க எட்டாகப் பழுக்கும்.

## 147 நாகக்கட்டு சேர்மான வேதை

இலுப்பை எண்ணையில் 7 தபா உருக்கிச் சாய்த்த நாகத்தை நாறுங்கள்ளிச்சாறு வேலிப்பருத்திச் சாறுகளில் தனித்தனி 5 தரம் உருக்கிச் சாய்த்து கட்டிக்கொண்டு இது 3, தங்கத் தாமிரம் 4 உருக்கி பொன் 3 சேர்த்து உருக்கிக் கொள்ளவும்.

## 148 ரசம் ரசவெண்ணை இறுக நீற

குழப்பாலைசாறில் ரசம்இறுகும். சீந்திகொடி அறைத்த குகையிட்டுபுடமிட இறுகும், ஆரைக்கீரைச்குகையுள்புடமிட இறுகும். ஜலத்திட இறுகும். விடத்தலை வேர்த்தூள் உள்ளங்கையிட்டு ரசம் மத்திக்க நீறும். அலுமோனியக் குவளையுள் ரசம் விட்டு மேனிசார் விட்டு தடவி கடிதம் மூடி வெயிலிட தூளாக நீறும். விடத்தலை பொன்னுங்காணிக்கும்

முன்போல் நீறும். குழப்பாலை என்பது பாலாட்டின் குழை முள்ளிப்பழ சாறுக்கும் மணியாகத் திரளும்.

## 149 நாகம் சிந்தூரமாக

கட்டின நாகம் சோற்றுகத்தாளை பூவிஞல் சிந்தூர மாக்கி அரவச்செம்பும் வெள்ளியும் சரி எடை உருகும்போது 4க்கு ஒன்று கொடுக்க பழுக்கும்.

## 150 நாகக் கட்டு வேதை

கரியுப்பு. வெடியுப்பு. பொரிகாரம் இது 3ம் சம எடை யாக எடுத்து உமிழ்நீர் விட்டு அறைத்து சுத்தித்த நாகத் திற்கு கவசித்து பொதிந்து சீலைமண் செய்து சிறுபுடமிட வும். இப்படி 9 புடமிட்டு பின் கதுவாலி புடம்9 போடவும். கட்டும். இந்த நாகமும் ரசமும் மஞ்சாடி வீதம் தொந் தித்து கல்வத்திலிட்டு சவ்வீரம் மஞ்சாடியிட்டு பொரித்த பொரிகாரம் மஞ்சாடி சேர்த்து உமிழ் நீராலறைத்து வழித்து உருட்டி வெயிலில் காயவைத்து மேலே சொன்ன கரியுப்பு கெந்தகம் கோழிமுட்டை மஞ்சள் கருவும் சமம் அறைத்து வைத்துக்கொண்டு அந்த மருந்துக்கு கவசித்து பிலக்க பிலக்க வாட்டவும். இவ்விதம் கவசித்து 18 தரம் விளக்கில் வாட்டவும். இதற்குள் இது 3ம் உருகி ஷெ உப்பில் சார்ந் துபோஞல் அதைப் பத்திரப்படுத்தவும். அதுதான் சிந் தூரம். இளகிப்போஞல் மெழுகு. வெள்ளி கழஞ்சி 4 உருகும்போது இது ஒரு மஞ்சாடி கொடுக்க எட்டாகப் பழுக்கும்.

## 151 நாகரச காரீய வேதை

கட்டின நாகம் கட்டின காரீயம் வகை கழஞ்சி ஒன்று உருக்கித் தொந்தித்து சிறுநீரின் உப்பெடுத்து கிண்டி வறுத்து கட்டின ரசமும் - கூடப் போட்டு பழசாருல் அறைத்து மறுபடி சாதிலிங்கம் அரிதாரம் பொரிகாரம் கரியுப்பு வகைக்கு கழஞ்சி ஒன்று சேர்த்து எலுமிச்சம்பழச் சாருல் நன்ருக திரளும்படி அறைத்து செம்புக்குகைக்குள் வைத்து சில்லிட்டு மூடி சீலைமண் 4 செய்து தகுந்த சிறு புடமிட செயப்படும். செயப்படாதிருந்தால் மறுமுறையும் அறைத்து புடமிடவும். செம்புக்குகையும் சேர்ந்து சிந்தூரமாகிவிடும். வெள்ளி கழஞ்சி ஒன்று உருகும்போது ஷி மருந்து மஞ்சாடி ஒன்று கொடுக்க ஏழரையாகப் பழுக்கும், இது கைகண்டது என்ருர்.

## 152 நாகரசவாலை சாறுவிட புகையும்

நாகமும் ரசமும் சரி எடையாக நாகத்தை உருக்கி ரசம் தெரந்தித்து கல்வத்தில் கொட்டி துருசுப் பொடியும் அந்த எடையாகப்போட்டு எலுமிச்சம்பழச் சாறுவிடப் புகையும். எடைக்கு எடை சவ்வீரம் கூட்டி அறைக்க வாலையாம் இதனுல்.

## 153 சாரம் துருசு தங்கம் நீற்ற

நமச்சாரம் நீறும், துருசு நீறும். தங்கம் நீறும், இவைகளுக்கு சுண்ணும்புச் சேலைமண் செய்து புடமிடவும். வேதை கண்டு நடத்தவும்.

## 154 நமச்சார மெழுகு வேதை

சாரம் கட்டினது! ஒரு கழஞ்சி சவ்வீரம் கற்பூரம் மனோ சிலே, வகைக்கு கால் கழஞ்சி வாய் நீராலரைத்து ஷை சாரத் திற்குப் பூசி வெயிலிலிட அது மெழுகாம். வெள்ளி கழஞ்சி ஒன்று உருகும்போது ஒரு மஞ்சாடி கொடுக்க பழுக்கும்.

## 155 வங்கத்தில் ரசம் எடுக்க

வங்கம் கழஞ்சி 8 உருகும்போது ரசம் கழஞ்சி4 அதில் தொத்தித்து கல்வத்தில் கொட்டி பேய்ப்பீர்க்கின் சாறு விட்டு 2 சாமம் அறைக்க எல்லாம் ரசமாசிவிடும். தனி வங்கத்திலும் ஏடுக்கலாம் என்பதும் ஷை தூள் சீசாவுள் தூவி வங்கம் வைத்து காற்றுடாமல் வைத்தாலும் ரசம் பிரி யும் என்பதும் பிறஓர் நூலின் முறை. இப்பச்சிலையை பொக்கணம் தூக்கி என்றும் பரிபாசையாகக் கூறுவர். முடக்கற்றனுக்கும் இப்பெயருண்டு.

## 156 உப்புக்கட்டால் தாமிரவேதை

சோற்றுப்பு மணிகளாகப் பொறுக்கியது படி கால் ஊமத்து இலேச்சாறுவிட்டு அறைத்து ஊமத்தங்காய்களே இரண்டாக நறுக்கி விதைகளே நீக்கி அதனுள் ஷை உப்பு வைத்து தோடு மூடி நூல் கட்டி மேல் 4 சதுர சீலேமண் செய்த காய்களே உலர்த்தி குக்கிட புடமிடவும். இப்படி 10 புடமிட்டு எடுத்து பழங் கலசத்தில் அல்லது புட்டியில் பத் திரப்படுத்தவும். இதில் சிறிது எடுத்து ஷை சாறுல் அறைத்து ஒரு கழஞ்சி பாசாணத்திற்கு கவசித்து ஷை காயில் வைத்து சீலேமண் செய்து சிறு புடமிட கட்டும்.

இப்படி பொரிகாரம் சீனம் வெடியுப்புமுதலியதும் கட்டலாம் நல்ல தாமிரத்தை உருக்கியாவது தகடு பழுக்கக் காய்ச்சியாவது காடிப்பானை நீரில் பத்து தரம் தோய்த்து இந்தத் தாமிரம் கழஞ்சி 4 ஷிவகையில் கட்டின பாசாணம் கழஞ்சி ஒன்று உருகுமுகத்தில் கொடுத்து தங்கம் கழஞ்சி ஒன்றும் கொடுத்து உருக்கிக்கொள்ளவும். ஆறுக்கு மேலாகப் பழுக்கும்,

## 157 சேநீரால் நாகம் புகையாது கட்ட

நமச்சாரம் கழஞ்சி 10 கரியுப்பு கழஞ்சி 5 சுண்ணம்புக் கல் கழஞ்சி 5 நன்ருக அறைத்து குகையிலிட்டு மூடி சீலை மண் செய்து 6 எருவில் புடமிட்டு ஆறி எடுத்து, இதோடு அன்னபேதி கழஞ்சி2 சேர்த்து அறைத்துவழித்து சிரட்டை அல்லது பீங்கானில் இரவு முழுவதும் வைத்து அதிகாலையில் பார்க்க செயநீராம். இதை புட்டியில் பத்திரப்படுத்தவும். சுட்ட செங்கலை துளைத்து அந்தக் குழியில் நாகம் கழஞ்சி 2 வைத்து மூடி கரிப்ரோட்டு உருக்கி அது உருகும் போது ஷி சேநீரைச் சிறுகச் சிறுகச் சுருக்கிட்டு சேநீர் தீர்ந்ததும் நன்ருக ஊதி ஆறவிட்டுஎடுத்து சிறுக வெட்டி கரியில் வைத்து உருக்கவும். புகைந்தால் மஞ்சளும் சுண்ணம்பும் அறைத்து மீதமான நாகத்துண்டை பொதிந்து ஒரு புடமிடவும். புகையாவிட்டால் இப்படிப் புடம் வேண்டாம். செம்பிலிட பழுக்கும். நாகப் பொன்னுக்கு நானூறு குற்றம் என்று சொல்வதால் நாகம் நன்ருக முடிய வேண்டும். சிறியா நங்கையைக் கண்டவருமில்லை. சீறிய நாகத்தைக் கொன்றவருமில்லை என்பதிலிருந்து நங்கையும் நாகத்தைக் கட்டக்கூடியதாம். சாரத்தைக் கட்டினுல்

கோபுரத்தைக் கட்டலாம் என்பதிலிருந்து நமச்சாரம் கட்டிஞல் நாகம் கண்ணடங்கிக் கட்டும். வேதையும் பலிக்கும்.

## 158 நாக ரச மெழுகு வேதைச் சிந்தூரம்

கட்டின நாகமும் ரசமும் சரி எடையாக எலுமிச்சம்பழ சாருல் அறைத்துப் பார்க்க மெழுகாம். இதை வழித்து வைக்கவும். கெந்தகம் கழஞ்சி 2 நாகம் கழஞ்சி ஒன்று ரத்தமண்டலிச்சாறு விட்டு அறைத்து ஷி மருந்துக்குப் பொதிந்து இரும்புச் சிமிழிலிட்டு மூடி சீலமண் செய்து புடமிடவும். இப்படி 18 சிறு புடமிட கைகண்ட சிந்தூரமாம். வெள்ளியிலும் தாமிரத்திலும் வேதையிடப் பழுக்கும்.

## 159 நமச்சரரக்கட்டு சேநீர்

கட்டின கரியுப்பும் பொரிகாரமும் சமம் அறைக்க மெழுகாம். இதை நமச்சாரக் கட்டிக்குப்பொதிந்து அதன்மேல் முட்டைத்தோடும் சோற்றுப்பும் அறைத்துப் பொதிந்து 3 சீலமண் செய்து மணல் மறைவில் சிறு புடமிட அந்த நமசாரம் கட்டும். நாகம் உருகும்போது கொடுக்க அது கண்ணடங்கிக் கட்டும். இந்த சாரமும் துருசு கட்டும் அறைக்க சேநீராம். இந்த சேநீர் துவைத்து வாட்ட சசல சரக்கும் கட்டும் மெழுகுமாகும். வேதையறிந்து நடத்தவும். கெந்தகத்தோடு சூடன் சேர்ந்தாலும் துருசு சேர்ந்தாலும் உருகும்.

## 160 பொற் செம்பு தங்க மெழுகு

கட்டின ரசம் சவ்வீரம் சமம் பொன்னுக்குக் கொடுக்க பொன் செம்பாம். கட்டின கெந்தகமும் துருசும் சமம்

அறைக்க மெழுகாகும். இதை சவ்விரத்திற்குப் பொதிந்து சீலைமண் செய்து மணல் மறைவில் சிறுபுடமிட சவ்வீரம் கட்டும். கட்டின சவ்வீரம் ஒன்றிற்கு ரசம் அரை சேர்த்து அறைத்து கெந்தகக் கட்டிக்குப் பூசி வாட்டவும். இவ்விதமே நமச்சாரக் கட்டிக்குப் பூசி விளக்குச் சுடரில் வாட்டவும். வெங்காரத்தில் பூசி வாட்டவும், இது 3ம் சமம் கூட்டி அறைத்து தங்கத் தகட்டில் பூசிவாட்ட அது மெழுகு ஆகும். இதை நாகத்திற்குப் பூசி எருக்கலம் பழுப்பு 7 அறைத்த குகையுள் வைத்து மூடி சீலைமண் செய்து புடமிடப் பொன்னுகப் பழுக்கும்.

## 161 வெள்ளியம் காரீயம் வலுக்க

பெருந்தும்பைச் சாறில் சோற்றுப்பு கரைத்து அதில் உருக்கி வார்த்தாலும், வெள்ளைக்காக்கணம் சாறில், வேப் பிலைச்சாறில் நாய்த்தைவேளை, சுடலாவரைச்சாறு ஒன்றில் சாய்த்தாலும் வலுக்கும். நொச்சி வேர்ப் பட்டை எருக்க லம்பாலால் அறைத்து கவசித்து புடமிட்டாலும் வலுக்கும்.

## 162 செம்பு பேதிக்க

துருசு கருவேலம்பூ வகை கழஞ்சி ஒன்று பிரண்டைச் சாறு மொசு மொசுக்கைச் சாறுல் அறைத்து 2 உண்டை பண்ணி குகையில் கீழ் ஒரு உண்டையிட்டு மேல் ஒரு கழஞ்சி செம்பு வைத்து மேலும் மேற்படி உண்டை வைத்து மூடி சீலைமண் செய்து உலையில் வைத்து உருக்க அந்த செம்பு பேதிக்கும். பொன்னரிதாரத்தை பழுபாகல் கிழங்கு அறைத்து கவசித்து சீலைமண் செய்து சிறு புடமிட்டு ஒரு கழஞ்சி செம்பு உருகும்போது ஒரு மா கொடுக்க அந்த செம்பு பேதிக்கும்.

## 163 சகலத்துக்கும் துருசு சுண்ணும்பு

இந்துப்பு வெடியுப்பு நமச்சாரம் சம எடையாகப் பனி தாங்கிப் பச்சிலைச்சாறு விட்டு அறைத்து, ஓரிதழ் தாமரை சமூலமும் கூடப்போட்டு கரந்தைச் சாறு விட்டு அறைத்து பின்பு எலுமிச்சம்பழச் சாறுவிட்டு அறைத்து வழித்துத் திரட்டி வட்டோடுபோல் இரண்டு தட்டி அதற்குள் துருசு வைத்து சாந்து பதிந்து மூடி வெயிலில் 10 நாள் வைக்க அந்த துருசு சுண்ணும்பாம். இந்த சுண்ணும்பு கழஞ்சி ஒன்று வளைந்து நடு ரசம் விட்டு வாட்டி கட்டலாம். இந்த சுண்ணும்பு சகல காரியத்திற்கும் ஆகும் குருவாம்.

## 164 மனோசிலை மெழுகு வேதை

பவளக்கால், மனோசிலை கழஞ்சி ஒன்று ஓட்டிலிட்டு ஐங்கோல நெய் சுருக்குக்கொடுக்க மெழுகு ஆகும். மெழுகு ஒன்று வெள்ளி 4க்கு கொடுக்க பத்தாகப் பழுக்கும்.

## 165 கள்ளிப்பால் நீராகும் குரு

திருகு கள்ளிப்பட்டையை ஒரு கூடை உலர்த்தி சுட்டு சாம்பலாக்கி அதில் 2 படி ஜலம் விட்டுக் கலக்கி வைத்து தெளிவை இறுத்து, மறு சட்டியில் விட்டு அதில் சவ்வீரம் கழஞ்சி ஒன்று போட்டு. வற்றக் காய்ச்ச சட்டியில் உப்பு படிந்திருக்கும். அதை ஓலையால் சுரண்டி எடுத்து புட்டி யில் பத்திரப்படுத்தவும். இந்த உப்பில் சிறிது எடுத்து ஷி சட்டியிலிட்டு திருகுகள்ளி மூட்டிலே ஷி சட்டியை வைத்து அந்தப் பாலை குத்தி இந்தச் சட்டியுள் ஏந்திப் பிடித்தால் அதில் விழுந்த பாலெல்லாம் தண்ணீர்போலாகிவிடும்.

இந்த நீரை குப்பியில் அடைத்து முத்திரப்படுத்தவும். ஒரு ஓட்டில் சாதிலிங்கக்கட்டி வைத்து (ஒரு கழஞ்சி) இந்த நீரில் சுருக்குக் கொடுக்க அந்த லிங்கம் மெழுகு ஆகும். வெள்ளி 10 உருகும்போது இந்த மெழுகு ஒன்று கொடுக்க பத்தரைப் பழுக்கும். கொடிக்கள்ளி, எருக்கலை, திலலை முதலிய பால்களையும் இம்முறைப்படி நீராக்கலாம் என்பது யுக்தி. இந்த நீரால் சுருக்கிட அநேக சரக்குகள் கட்டும்.

## 166 ரசு வெள்ளிக் குரு

நிமச்தாரம், வெங்காரம், அரிதாரம் வகைக்கு கழஞ்சி எடை ஒன்று வெடியுப்பு சேநீரால் அறைத்து வில்லை உலர்த்தி குகை மூடி சீலை மண் செய்து சிறுபுடமிட்டு எடுத்து, இதை ஷிசேநீரால் அறைத்து வங்கத்தகட்டிற்கு பூசி ஒட்டிலிட்டு சீலமண் செய்து 20 எரு புடமிட நொறுங்கும். இதை அறைத்து வேள்ளித் தகட்டிற்கு தடவி வாட்டி ஓட்டில் வைத்து சீலைசெய்து புடமிட அந்த வெள்ளி பற்பமாம். இந்த பற்பம் ரசம் வகைக்கு கழஞ்சி ஒன்று சேர்த்து அறைத்து உருட்டி மேலே தாளகம் அறைத்து பொதிந்து விளக்கு சுடரில் வாட்ட கட்டும். இந்தரசசூதம் வெள்வங்கம் கழஞ்சிநூறு உருகும்போது ஒரு கழஞ்சி கொடுக்க வங்கத்தின் நீர் வாங்கி வெள்ளியாம்.

## 167 துருசுக்கட்டு நீறு வகை ரசமணி

வராய்விளங்கம் முலைப்பால் விட்டு அறைத்து துருசு கட்டிக்கு கவசித்து வெயிலிலிட நீருகும். வெடியுப்பும் சிப்பிச்சதையும் அறைத்து புடமிட்டு செயநீர் வைத்து, துருசு கட்டிக்கு சுருக்குக் கொடுத்து சூரிய புடமிட துருசு

கட்டும். இந்த எடைக்கு நமச்சாரம் கூட்டி அறைக்க சே நீராகும். இந்த சேநீர் இரும்புத் கரண்டியில் விட்டு ரசமு விட்டு அடுப்பில் கொதிக்கவிட ரசம் சவளையாகும். இதை உருட்டி தண்ணீரிலிட இறுகி மணியாகும். இந்த மணி தாழ்வடத்திலிட்டு கழுத்தணிந்து தியானிக்க மனம் ஒரு நிலைப்படும். செயநீரின் கடைசியில் கஞ்சா கசாயமும் கொஞ்சம் விட்டு கொதிக்க வைத்துக்கொள்ளவும். வெள்ளைக் காக்கணம் சாறு கருவூமத்து சாறில் வகைக்கு 7 நாள் மத்தித்து கழுவ ரசம் கட்டும். நன்னாரி சாறில் 3 நாள் மத்திக்க ரசம் கட்டும்.

## 168 வேலிபருத்தியில் துருசு குரு

ஒரு பிங்கானில் வேலிபருத்திப் பால் கறந்து அதில் வீரம், பூரம், ரசம், சீனிக்காரம் வகைக்கு பண எடை இட்டு மத்திக்க நீராகும். ஒரு துருசுக் கட்டியை இதில் தோய்த்துத்தோய்த்து 3 நாள் ரவியிலிட்டு 4ம் நாள் துருசை மட்டும் வெயிலிலிட வெண்ணீராகும். இதை ஷை நீரால் அறைத்து வில்லைதட்டி உலர்த்தி ஒரு சட்டியில் ஒரு படி மணலில் பாதி இட்டு அதன்மேல் சுண்ணாம்புநீறு பரப்பி அதன்மேல் ஷை வில்லையை வைத்து அதன்மேல் சுண்ணாம்பு நீறும் மணலும் கொட்டி மூடி மேல் சட்டி மூடி 4 சீலைமண் செய்து கமலாக்கினியாக ஒரு சாமம் எரிக்க குருவாம். அந்தக் குரு ஒரு பண எடையும் பச்சைரசம் ஒரு பணஎடையும் அமுதும் விட்டு மத்தித்து தாமிரத் தகட்டில் அப்பி அந்தச் செம்பு 3 வெள்ளி 6ம் கூட்டி உருக்கவும் பழுக்கும்.

## 169 ரசக் கட்டு வகைகள்

வெருகன்கிழங்குள் ரசம் விட்டுச் சீலைமண் செய்து

பெரும் புடமிட்டாலும் வெண்கல வட்டிலில் செவ்வகத்திப் பூச்சாறு விட்டு 3 நாள் மத்தித்து ரவியிட்டாலும், ரசம் சவ்வீரம், அல்லது ரசம் காடிக்காரம் சமம் முலைப்பால் அல்லது பழக்சாறு விட்டறைத்து கோழி முட்டைக் கூட்டிலிட்டு ஷை கூடு மூடி 3 சீலைமண் செய்து அடுப்பில் சுட்டோ அல்லது சிறு புடமிட்டோ எடுத்தாலும் ரசம் கடடும். சிறிது சோத்துப்பும் சேர்த்துக்கொள்ளவும். காடிக்கார சுண்ணம் கொடுத்தாலும் ரசம் கட்டி வெள்ளியாகும், துருசு சுன்னத்திற்கும் இப்படியே ஆகும்,

## 170 ஆறு சரக்குக் கட்டும் சேநீர்

8ம் காய்ச்சல் அல்லது 5ம் காய்ச்சல் வெடியுப்பு பலம்8 கோதுகொட்டை நீக்கிய பழம்புளி பலம்6 சீனிக்காரம் பலம் ஒன்று இவைகளை உரலிலிட்டு இடித்து அறைத்து சீலையில் தடவி திரியாகத் திரித்து நெருப்புக் கொளுத்திச் சுட்டு பொடியாக்கி பீங்கானிலிட்டு, சாணி கரைத்த தாழியில் பதித்து மேல் ஈரத்துணிவேடு கட்டி கர்ற்ருடா மூலையில் வைக்க சேநீராம். இந்த சேநீரில் சிறிது எடுத்து, துருசு கட்டி, நமச்சாரம், சீனிக்காரம், பொரிகாரம், நாகம், ரசம் முதலிய சரக்குகளை கழஞ்சி நிறையாக எடுத்து தனித்தனி தோய்த்து வெயிலிலிட்டு வாட்ட கட்டும். இவைகளுக்கும் ஷைசேநீருக்கும் மேலும் காரமேற்றிஞல் பிரமாதமாகவேலை செய்யும். அஞ்சு சுண்ண குகையில் வைத்து புடமிடவும்.

## 171 எருக்கலம்பால் நீராகும் குரு

சவ்வீரம் 2பண எடை கடல் நுரை சூடன் வகைக்கு 4 வராகனெடை எருக்கலம் பால் விட்டு அறைத்து வில்லை

உலர்த்தி சிப்பியில் வைத்து சீலைமண் செய்து சிறுபுடமிட நீருகும். இந்தக் குரு நீறு சிறிது எடுத்து எருக்கலம்பாலிலிட்டு வைக்க அது தண்ணீர்போலாகும். இந்த நீர் கட்டின லிங்கத்திற்கு சுருக்கிட அது மெழுகு ஆகும் அம்மெழுகு வெள்ளியில் கொடுக்க பழுக்கும். இந்த குரு எந்தப் பாலையும் நீராக்க வல்லதாம்.

## 172 வங்கம் நீர் வாங்க ரசக் கட்டு

வங்கமும் அரிதாரமும் சமம் உருக்க பொடியாகும். இதில் வெள்ளி சரி கூட்டி உருக்கி அதில் ரசம் சரி கூட்டி உருக்க குளிகையாம். இந்தக் குளிகையை வெட்டி வங்கம் கழஞ்சி ஒன்று உருகும்போது ஒரு மஞ்சாடி கொடுக்க நீர் வாங்கும்.

## 173 தொட்டிச் செம்பு வேதை செம்பு சுத்தி

பாச்சோத்தி இலைச் சாறில் ஷியை 3 தபா உருக்கிச் சாய்க்க செம்பாம். வெள்ளி 7 உருகும்போது இது 3 கொடுக்க அஞ்சரையாய்ப் பழுக்கும். செம்பொன் நெருஞ்சி கவசித்து புடமிட செம்பு களிம்பற்றுப்போம்,

## 174 பித்தளை களியாக

குகையில் பித்தளை உருகும்போது நாய்மின்னி இலைச் சாறுவிடவும். இவ்விதம் பொங்கப் பொங்க இரு தடவை செய்ய களியாம்.

## 175 தம்பன ரச மணி

முள்ளுக் கத்திரிக்காய்ப் பழச் சாறு (முள்ளிப் பழம்)

வெண்கல வட்டிலில் விட்டு ரசமும் விட்டு வெண்கலக்குளவியால் மத்திக்க இறுகித் திரளும். அதை உருட்டிக் காரை முள் குத்தி தமரிட்டு வைக்கவும். காய்ந்தயின் அதில் கயிறு கோர்த்து இடையில் கட்டி மணி முன்னரை கிடக்க சுக்கிலதம்பனம். செப்புக் குழலிலிட்டு சிசுக்களுக்கு கட்ட சகல தோஷமும் நீங்கும். கையில் கொடுத்து வாங்க சுகப் பிரசவமாம். உச்சியிலுருந்து பாதம் வரை தடவினும் சுகப் பிரசவமாம். நோய் நீங்கும்.

## 176 கோடாசூரி வீர வாதக் கவி

1 கொச்சியை மடக்கிப் பின்னும் கூட்டியிப்படியே [வைத்தால்
மெச்சிய கோடாசூரி வீரமாய் விளங்கிற்றம்மா
அச்சிய பரங்கிகண்டு ஆத்தாளு மருளிச்செய்தாள்
இச்சியே இதனைத்தானே எத்தனை வாதமாச்சே

2 ஆச்சென்ற வாதம் பொய்யாயானது வீரத்தாலே
வாச்சுது வீரமென்ருல் மலைகல்லுந் தங்கமாகும்
காய்ச்சிய இரும்பின்மேலே காட்டியே தண்ணீர் [சொட்ட
வீச்சென அதனைப்பொத்து விளங்கிடுந்தமருண்டாமே

3 தமரென இரும்பைத்தின்ருல் சகலமும் தண்ணீராகும்
அமரவைம்பண மேதூக்கி யரைப்பலந் துருசுபூரம்
நமருறமிரண்டு சூதம் நான்குநாருகும் வண்டு
கமர்நாபியொன்று கோழிப் பித்துநீர் கலந்துபூசே

4 பூசவே துருசூனிசன் போகிறேன் கயிலைக்கென்பார்
தேசமாம் கவசவாயி செல்வது மெங்கேயென்பாள்

ஊசெனரவியின் தீயால் ஊறல்போய்க் குருவுமாவார்
பேசுதாமிரம் வெள்ளிக்கு நூற்றிலொன்றீந்து பேணே

ஷி கவியின் உரை: கோடாசூரி வீரம் 5 பூரம் 3 உறம்2 வாலே ரசம் 4 நாபி 1 குருவண்டோடு 100. ஷி சரக்குகள் பண எடை வீதமாக எடுத்து வண்டோடு நூறு சேர்த்து கோழிப்பித்து நீருல் அறைத்து அரைப்பலம் துருசுக் கட்டிக்கு கவசித்து பீங்கானிட்டு வெயிலிட அந்தத் துருசு பொருமி நீறி வெள்ளையாம். வெள்ளி செம்பு நூற்றுக்கு ஒன்று கொடுக்க பழுக்கும் என்பதாம். வீரவைப்பு முறைப்படி கொச்சி வீரம் தயாரித்து அந்த கொச்சி வீரத்தை கோடாசூரி வீரமாகத் தயாரித்துக்கொள்ளவும். விரிக்கிற் பெருகும். எந்தவிதமாவது சாதிலிங்கம் மெழுகாஞல் இது ஒரு மா அளவு எடுத்து வெள்ளி சேநீரில் ஊறி எடுத்தது ஒரு கழஞ்சி உருகும்போது கொடுக்க பழுக்கும்.

## 177 ரசமணிச் சிந்தூரம் வேதை

கன்னிக்கோழியின் முதல்முட்டை (கருங்கோழி) சற்று துளைத்து சிறிது வெண்கருவை ஊற்றிவிட்டு அதனுள் ஒரு கழஞ்சி ரசம் விட்டு மெழுகால் அடைத்து அதன்மேல் எருமைக்கன்றுச்சாணி பொதிந்து காயவைத்து திருகு கள்ளியின் விலாப்பக்கத்தில் குடைந்து அதில் இதை வைத்து அந்தசக்கையால் மூடி 40 நாள் சென்றபின் எடுத்துப் பார்க்க அந்த ரசம் சிந்தூரமாக இருக்கும். வெள்ளி கழஞ்சி ஒன்று உருகும்போது இது ஒரு மா கொடுக்க பழுக்கும்.

## 178 பாதாள அஞ்சனம்

ஐந்தாறு குன்ஞன்எலி பிடித்து அவித்து அந்த நெய்

எடுத்து வைக்கவும். அந்த நெய்யில் சித்தாமணக்கு முத்து உறைத்து அதன்பின் கருங்குன்றிமணி சிறிது உறைத்து பின்பு வெண்குன்றிமணி உறைத்து அதைக் குழைத்து உள்ளங்கையில் போட்டு பார்க்கவும். பூமிக்கு அடியிலுள்ள விஷயங்கள் தெரியும் என்ருர்.

## 179 லிங்கக் கட்டு சேநீர் வேதை

உருக்குத்தொட்டி இரண்டரை, நாதம் ஒன்று, சவ்வீரம் அரை இவைகளைக் கழஞ்சி நிறையாக பீங்கானிட்டு வெயிலிட செயநீராம். சாதிலிங்கம் கழஞ்சி ஒன்று இதில் தோய்த்து உலைமுகத்தில் வாட்டவும். இவ்விதம் இரண்டு மூன்று தரம் செய்து உருக்குத் தொட்டியும் கெந்தகமும் சமம் எலுமிச்சம்பழச்சாரு லறைத்து ஷெ லிங்கத்திற்குப் பொதிந்து மேலே சுண்ணும்புச்சேலை செய்து ஒரு படி உமி நடு வைத்து புடமிட கட்டும், உலைமுகத்தில் மணியாக உருகியாடும். இந்த லிங்கம் தங்கம் வகைக்கு ஒரு மஞ்சாடி செம்பு 6 வெள்ளி 14 மஞ்சாடியாக உருக்க மூன்றரையாய் பழுக்கும்,

## 180 சேர்மான வாதம்

மனேசிலை 2 கழஞ்சி நமச்சாரம் 3 கழஞ்சி அமுதநீர் (வாய்நீர்) விட்டு அறைத்து வைத்துக்கொண்டு, நன்ருய் அரவச்ச செம்பு 2 அரவச்ச வெள்ளி 8 உருகுமுகத்தில் கொடுக்க மூன்றறை ஆகப் பழுக்கும் நிசம் என்ருர்.

## 181 ரசக்கட்டு துருசுநீறு சேநீர்

கருப்பாக இருக்கும் பேய்க்காளான் சாறு படி அரைக்

கால் ரசம் வேண்டிதற்கு ஒட்டிலிட்டு சுருக்கிட கட்டும். காளான் கவசித்து புடமிட துருசு நீறும். சங்குப்பொடியும் துத்தி இலையும் அறைத்து எலுமிச்சையளவு குகை செய்து துருசு கட்டி வைத்து மூடி 2 நாழிகை வெயில் வைத்து சீலை மண்செய்து உலர்த்தி ஒரு படி மணல் தரையிலிட்டு அதன் நடுவில் வைத்து மணல் மூடி காடைப்புடம் உறைக்கும்படி புடமிட்டு எடுக்க துருசு நீருகும். துருசு நீரோடு சாரம் சேர்க்க சேநீராம். இது துவைத்து வாட்ட சகல சரக்கும் கட்டும்.

## 182 நாகரச மணி

துத்தநாகம் ஒரு கழஞ்சி கரண்டியிலிட்டு உருக்கி அபின் குன்றியளவு எடுத்து சிறிது சிறிதாக கொடுக்க அது பொடியாகும். அந்த நாகமும் ரசமும் சரி எடையாக அறைத்து உருக்க மணியாகும். ஒரு லிங்கவடிவான கருக் கட்டின குகைக்குள் ரசம்விட்டு அந்த அளவு நாகம்உருக்கி விட்டு குயையை உடைத்து பார்க்க ரசம் கட்டி லிங்கவடி வாய் இருக்கும். இதைப் பூசிப்பதும் உண்டு.

## 183 அத்திப்பால் கட்டி லிங்கம் கட்ட

அரிதாரம் நெல்லிக்காய் கெந்தகம் கழஞ்சி வீதம் சம மாக பொடித்து ஒரு சிரட்டைலிட்டு அதில் அத்திப்பால் அரைக்கால்படி விட்டு வெயிலிட அந்தப்பால் கட்டியாகும். இதில் சாதிலிங்கம் 2 கழஞ்சிப் பங்காக பொதிந்து சீலை மண் செய்து ஒன்றிரண்டு நாழிகை ஊத பால் புகைந்து போகும். லிங்கம் கட்டி இருக்கும். இது தாமிரம் 3க்கு ஒன்றும். வெள்ளி 7க்கு 3ம் கொடுக்க அவை 4 ஆகப் பழுக்கும்.

## 184 முச்சரக்கு வேதை

அரிதாரம் கெந்தகம் நமச்சாரம் வகைக்கு கழஞ்சி ஒன்று உமிநீரால் மாய அறைத்து உருட்டி வெயிலிட்டு காய்ந்தபின் 4 நாழிகை பிறகு இந்துப்பு கழஞ்சி 2 உமி நீராலறைத்து அதற்குமேல் கவசம் கட்டி 4 நாழிகை உலர்த்தி இடுக்கியால் பிடித்து 2 நாழிகை வாட்டி மேல் கவசம் நீக்கி வைக்கவும். தாரிவெள்ளி 10 உருகும்போது இது ஒன்று கொடுக்க ஆருகப் பழுக்கும்.

## 185 சார சேநீர் துருசு நீறு வேதை

நமச்சாரம் அரிதாரம் வெடியுப்பு கெந்தகம் வகைக்கு கழஞ்சி அரை உமி நீரில் ஊறவைத்து அறைத்து உருட்டி முன்கூறிய காளான் துருசு பற்பமும் சாரமும் சேர்த்த செய நீரில் துவைத்து இடுக்கியால் பிடித்து விளக்கில் வாட்ட கட்டும். இது வெள்ளி 7க்கு மூன்று செம்பு 3க்கு ஒன்று கொடுக்கப் பழுக்கும்.

## 186 பொரிகாரக் கட்டு மணி வேதை

பொரிகாரம் மடல் துத்தம் வகைக்கு கழஞ்சி அரை எருக்கலம்பாலால் அறைத்து ஒரு கழஞ்சி பொரிகாரத் திற்கு கவசித்து வெயிலிலிட்டு சீனக்கல் எருக்கலம்பாலால் அறைத்து அதற்கு பொதிந்து உலர்த்தி சீலைமண் செய்து கோழிப்புடமிட கட்டும். இதை குடைகரியுள் வைத்து உருக்கினால் மணியாம். இது ஒரு கழஞ்சி குடை கரியுள் உருகும்போது அரிதாரம் வெடியுப்பு கெந்தகம் நமச்சாரம் வகைக்கு கால் கழஞ்சி கொடுத்து தாரிவெள்ளியில் 10க்கு ஒன்று கொடுக்க பழுக்கும்.

## 187 இரும்பில் ஈய சிந்தூர வேதை

காந்தக்கம்பியால் எடுத்த அரபொடி பலம் ஒன்று இரும்புச் சல்லி பலம் ஒன்று, அரிதாரம் கழஞ்சி 2 ஆற்றுச் சிப்பி 2 பிளிந்து அதன் வயிற்றுத் தசையின்பால் கழஞ்சி 2சேர்த்து சிப்பியில் வைத்து புடமிட அந்தத் தாளகம் நீரும். அந்தத் தாளகம் சிப்பியையும் பொடிபண்ணி முதலே தடங்குச்சாறு படி அரைக்கால் கற்பூரவல்லி செங்கீரை வகைக்கு சாறு படி அரைக்கால் மூன்றும் கலந்து ஷி சிப்பி அரிதாரத்தை நன்ருய் அறைத்து இதில் கலக்கி விரவி ஷி அரபொடி இரும்பு சல்லியும் இதிலிட்டு விரவி திரட்டி வெயிலிட்டு, எரு அடுக்கி அதுமேல் வட்டஓடு வைத்து அதுமேல் 4 எரு அடுக்கி அதுமேல் இந்த மருந்தை வைத்து கன புடமாகப் போடவும். அதன் ஈயம் ஓட்டில் இறங்கும். ஆவரை இலை பூ காய் பட்டை வேர்ப்பட்டை இந்த ஐந்தும் சமமாக உலர்த்தி பொடித்து ஒருபடி, செந்நாயுருவி அல்லது நாயுருவி சூரணம் படி அரை, வெள்ளாட்டு ரத்தம் உலர்ந்த பொடி படி ஒன்று இது 3ம் விரவி ஷி இரும்பில் எடுத்த ஈயத்தை சட்டியிட்டு அடுப்பேற்றி ஒரு சாதி விரகிஞல் எரித்து உருகும்போது ஷி சூரணம் சிரங்கை வீதம் தூவி இரும்புக் கரண்டியால் வறுக்கவும். பொரிந்தபின் சற்று நேரத்திற்கு ஒரு தடவை தூவவும். இவ்விதம் ஷி ஈயம் சிந்துரமாகும் வரை அந்த சாம்பலை ஊதிவிட்டு வறுக்கவும். கரண்டியால் தேய்த்து வறுக்கவும். சிவந்தபின் எடுத்து பத்திரப்படுத்தவும். வெள்ளி 7க்கு 3 கொடுக்கப் பழுக்கும். இதில் சிறிது எடுத்து விளக்கெண்ணை குழைத்து கரியில் வைத்துஉருக்க மணி திரளாமல்இருந்தால் நோய்க்கும் ஆகும், சீனிக்காரம் சேர்த்தும் உருக்கிப்பார்க்கலாம்.

இவ்வித சோதனைக்கு உள்ளான வங்கமே அவுஷதத்திற்கு ஏற்றதாம்.

## 188 சாறு வரா மூலிகையில் சாறு வர துருசு குரு

துருசு 2 கழஞ்சி கட்டியை இடுக்கியால் பிடித்து, கணு வுக்கு கணு கோதுமைபோல் காய்த்து வெண்பூவோடு வாசனையாயிருக்கும் விச சஞ்சீவியான கோடகசாலை மூலி கைச்சாறில் தோய்த்துத்தோய்த்து பீங்கானிட்டு வெயிலிட அந்தத் துருசு பொடியாக உதிரும். இதுபோல் தலைவிரித் தான் குமட்டிச் சாறில் தோய்த்துத் தோய்த்து 2 நாள் வெயிலிட துரு கட்டி சீனிக்காரம்போல் வெள்ளையாகும். முன் சொன்ன முறைப்படி செய்த துருசு பொடியை எலு மிச்சம்பழச் சாறால் அறைத்து வில்லை தட்டி உலர்த்தி கால் படி சுண்ணாம்பு நீறில் பாதி நிலத்திலிட்டு பரத்தி மேலே ஷெ வில்லை வைத்து மேலும் மீத சுண்ணாம்பு மூடி சிறு புட மாகப் போட நீறும். மாலை நேரம் சாறுவரா மூலிகையை உரலில் இடித்து உரலோடு வைத்து இந்த குரு சிறிது விரவி சற்று நேரம் சென்று அல்லது அதிகாலையில் கம்பி ளித்துணியில் வைத்து பிளிய சாறு வரும். ஷெ வெள்ளை யான துருசுக்கு மகா செயநீர் துவைத்து வெயிலிட கடுங் காரச் சுன்னமாம். பாலை நீரரக்கும் குருவில் சிறிது வீரம் சேர்ப்பதுபோல் சாறு வராவிடில் அந்த முறையைத் தழு விச் செய்யவும் யுக்தி.

## 189 வசிய ரச வெண்ணை மை குளிசம்

பாலாட்டின் குழை சாறு உள்ளங்கையில் விட்டு ரசம் மத்திக்க வெண்ணையாம். சிமிழில் அடைத்து திலதமிட

வசியமரம். இது உலர்ந்துபோனல் பொற்றிலே கரிப்பான் சாறு அல்லது தொட்டால் சுருங்கிசாறு மத்தித்துக்கொள் ளவும். கூகை நீறு பூசிச் சென்றல் மாற்றுன் தளமும் பயப்படும். ரச சிந்தூரமும் உமிழ்நீர் குழைத்து நெற்றி யில் திலதமிட சகல தேவதைகளும் ஓடிப்போம். குங்குமம் திலதமிட்ட பெண்களை வசியமுறை இழுக்காது. சீனிக்கா ரக்கட்டி தலையின் கீழ் வைத்து உறங்க கெட்டகனவுகள் தட்டாது. குக்கில் வெள்ளிக்குழலிலடைத்துக் கட்டியிருக்க ஏவல் பில்லி வஞ்சனை சூனியம் பேய் மருந்தீடு விசம் ஒன் றும் கிட்ட அண்டாது. அதனல் வந்த நோய்களும் ஓடிப் போம். பவளம் அணிந்த குழந்தைக்கு பயப்பிராந்தி வராது. புத்திரசீவிவிதை மாலை அணிந்த குழந்தைகள் நோயின்றி சுகமாக வளரும்.

## 190 சீனப் பித்தளை சுழிவு வேதை

சிப்பிச் சுண்ணும்பு கழஞ்சி 10 நமச்சாரம் கழஞ்சி 10 சவ்வீரம் கழஞ்சி2 சேர்த்து அறைக்க செய நீராகும். இதில் சீனப் பித்தளைத் தகடு 7 நாள் ஊறவைத்து 8ம் நாள் எடுத்து பொறிகாரம் கொடுத்து உருக்க கடைக்கேறும்.

## 191 உருக்கு தாமிர வேதை

உருக்கு கழஞ்சி2 பத்தாணுக ஊதின தாமிரம் கழஞ்சி2 இரண்டும் உருகுமுகத்தில் தாளகம் மஞ்சாடி 6 கொடுத்து இது வெள்ளிக்கு 3 கொடுத்து வெள்ளோட்டில் வைத்து ஊதிப்போடவும் இது 4க்கு ஒன்று தங்கம் சேர்க்கவும். அஞ்சயகாலாய்ப் பழுக்கும்.

## 192 வெள்ளிய செந்தூர வேதை (அருமையானமுறை)

புத்தோடு அமுரிவிட்டு அறைத்து அடை தட்டி உலர்த்தி நடுவில் வெள்ளியம் கழஞ்சி 10 வைத்து ஷி ஓடு மூடி சீலேமண் செய்து கஜபுடமிட்டு பின்பு புளியைக்கருக்கி அமுரி என்னும் சிறுநீர் விட்டு அறைத்து அதில் வைத்து புடமிடவும். பிறகு நீலக்கத்திரிக்காயைக் கருக்கி சிறுநீரா லறைத்து பொதிந்து புடமிடவும். இவ்விதம் 3 கஜபுடங்க ளிட்டு இந்தாயம் உருகும்போது ரசம்சரிஎடைதொந்தித்து புடமிட சிந்தூரமாகும். சரி கெந்தகமும் சேர்த்து புடமிட வும். இச் செந்தூரம் வெள்ளி 10க்கு ஒன்று கொடுக்கப் பழுக்கும்.

## 193 பித்தளை வேதை

கெந்தகமும் மடல்துத்தமும் சரி கூட்டித் தாழம் பாலால் அறைத்து பித்தளை தகடுகளுக்குப் பூசி குகையி லிட்டு இதற்கு சமம் வெள்ளி கூட்டி காரம் குத்தி உருக்கி புத்தோட்டில் வைத்து ஊதிப்போடவும். அஞ்சாகப் பழுக் கும். தாமிரமும் நாகமும் சேர்ந்தது பித்தளை.

## 194 தாமிர வேதை

அக்கராகாரம் எலுமிச்சம்பழச்சாரால் அறைத்துதாமிர தகட்டில் தடவி 3 புடமிட அது நீரும். இந்த நீறு ஒன்று வெள்ளி 4 கூட்டி உருக்க 4 ஆகப் பழுக்கும். இதற்கு சரி எடை 6 மாற்று பொன் சேர்த்து உருக்க அஞ்சாகப் பழுக்கும்.

## 195 வங்க ரச வேதை

கட்டின காரியம் கட்டின ரசம் சமம் உருக்கிச் சேர்த்து இலுப்பை எண்ணெயால் அறைத்து சிந்தூரமாக்கி வெள்ளி7 தாமிரம்3 உருகும்போது 10க்கு ஒன்று கொடுக்க சதுராகப் பழுக்கும்.

## 196 பித்தளை வேதை

கட்டினசவ்வீரம் தங்கம் வகைக்கு கழஞ்சி ஒன்று ரசம் கழஞ்சி 10 அறைத்து பித்தளைத் தகட்டில் தடவி புடமிட்டு அந்த தகட்டுக்கு அந்த ரசம் தடவி வெயிலிட்டு கழுவ கடைக்கேறும்.

## 197 காரீயக் கட்டு

குப்பைமேனிச்சாறும் வெள்ளைச் சாரணைச்சாறும் சமம் கலந்து அதில் சிப்பிச்சுண்ணாம்பும் பெருங்காயமும் கலந்து கலக்கி கருவங்கம் உருகும் முகத்திலே சுருக்கிட கட்டும்.

## 198 ரசம், தாளகம், மனோசிலை கட்டு

ரசம் ஒட்டிலிட்டு சிறுதீ எரித்து முத்தெருக்கன்செவிச் சாறு ஒரு படி சுருக்கிட்டு அந்தச் சாறால் அறைத்து உண்டைபண்ணி அந்த இலையை அறைத்து அதற்கு கவசம் கட்டி மேல் 4 சீலை மண் செய்து சிறு புடம் இடவும். இப்படி 5 புடங்களிட அந்த ரசம் கட்டும். இவ்விதமே தாளகம் மனோசிலையையும் கட்டிக்கொள்ளலாம்.

## 199 கவுரி, வெள்ளை, தாளகம், சிலைகட்டு

அன்னபேதியை அறைத்து கெவுரி பாசாணத்திற்கு கவசம் கட்டி அதன்மேல் அவுரி இலையை அறைத்து கவ

சித்து ஒரு சட்டியிலிட்டு அடுப்பேற்றி ஆமணக்கு எண்ணை கால்படியை சிறுகச் சிறுக விட்டு வறுத்து கவசம் கருகின பின் எடுத்துக்கொள்ளவும் கட்டும். இதுபோல் வெள்ளைப் பாசாணம், தாளகம், மனோசிலையும் கட்டிக்கொள்ளலாம். கதலிப்பழத்துடன் நெல்லுமி சேர்த்து பிசை ஜலமாகும். இந்த ஜலம் கால்படி ஒரு கலசத்திலிட்டு ஒரு பலம் கவுரி பாசாணம் அதிலிட்டு ஓடு மூடி சீலைமண் செய்து 15 எரு வில் புடமிட்டு எடுக்க அது கட்டி பற்பமாகும், அரை அரிசி எடை முறை சுரம குளிர் சுரம் தீர்க்கும். வேதைக்கு மாகும்.

## 200 ஈய நீறு வெள்ளி நீறு ரசசிந்தூரம் வேதை

தாளகத்தை ஆலம்பால் விட்டு அறைத்து காரீயத் தகட்டில் பொதிந்து ஓட்டில் வைத்து சீலைமண் செய்து புட மிட காரீயம் பற்பமாம். இந்த பற்பத்தை ஷை பாலால் அறைத்து வெள்ளித் தகட்டில் பூசி முன்போல் புடமிட வெள்ளி நீரும். இந்த நீறு கட்டின ரசத்திற்குப் பூசி குகை யிட்டு மூடி சீலைமண் செய்து புடமிட அந்த ரசம் சிந்தூர மாம். இந்த ரசம் வெள்ளி உருகும்போது கொடுக்கப் பழுக்கும்.

## 201 பாசாணக் கட்டு வேதை

வெள்ளைப் பாசாணந்திற்கு எருதுச்சாணம் பொதிந்து சீலைமண் செய்து குக்கிட புடமிட்டு எடுத்து, பன்றிநெய் சுருக்குக் கொடுத்து வைத்துக்கொள்ளவும். சுத்திசெய்த தாமிரத்தில் உருகும்போது 10க்கு 2 கொடுக்க நாலரை. இந்த வெள்ளி 2ம் சுத்தக்கட்டி வெள்ளி ஒன்றும் கூட்டி உருக்க ஆறுகப் பழுக்கும்.

## 202 சகலமும் கட்ட அண்ட மெழுகு

வெடியுப்பு கழஞ்சி 2 சட்டியிலிட்டு உருகும்போது, அதில் தலைமயிர் கத்தரித்துப்போட்டுக் கிண்டி அதில் கன்னிக்கோழிமுட்டையைப் போட்டு புரட்டிக் கொடுத்து எடுக்க அதிலுள்ள மஞ்சள்கரு மெழுகாகி இருக்கும். இந்த மெழுகு பூசிப்போட சகல சரக்தும் வெயிலில் கட்டும். புடமிட நீறும்

## 203 வெடியுப்பு கட்டு முடித்தாரசிங்கி வேதை

வெடியுப்பு பலம் அரை சட்டியிட்டு உருகும்போது கம்பிளி பூவரசம் பழுப்பும் நறுக்கிப்போட்டு கிண்ட அந்த உப்பு கட்டும். அதை உமிநீரால் அறைத்து முடித்தார சிங்கிக்குக் கவசித்து சீலைமண்செய்து உலர்த்தி கதுவாலிப் புடமிட கட்டும். இந்த சிங்கியை ஆலம்பாலில் புரட்டி தலைமயிர் கட்டிச் சுற்றி செம்பு உருகுமுகத்திலே சரிக்குச் சரி கொடுத்து அந்தச் செம்பு வெள்ளி 7 உருகும்போது 3 கொடுத்து புத்தோட்டில் வைத்து ஊதிப்போடவும் நாலாகப் பழுக்கும்.

## 204 தங்கச் செம்பு வேதை பொற்குரு

ரசம் கழஞ்சி ஒன்று கெவுரி பாசாணம் கழஞ்சி அரை வேலிப்பருத்திச் சாறுல் அறைத்து குகையிலிட்டு கனத்த செம்புத் தகடு மூடி, சீலைமண் செய்து கோழிப்புடமிட்டு ஆறி எடுத்து செம்புத் தகட்டில் பற்றி இருக்கும் பதங்கத்தை எடுத்து தங்கத்திற்கு சரி எடை கொடுத்து உருகும் போது, பூநாகத்தை ஈரவெங்காயச்சாறு விட்டு அறைத்து

உளுந்துபோல் உருட்டிய உண்டைகள் ஷை 1 க்கு இது 4 எடை கொடுக்க அது செம்பாம். இந்த செம்பு வெள்ளி 8 உருகும்போது ஒன்று கொடுக்க பத்துக்கு மேலாகவும் பழுக்கும். இது ஏமமார்த்தாண்டம்.

## 205 வெள்ளிக் குரு

வெள்ளைப் பாசாணம் கழஞ்சி ஒன்று ரசம் கழஞ்சி ஒன்று வேலி பருத்தி சாருல் அறைத்து முன் பொற்குரு முறைபோல் புடமிட்டு செம்புமூடியில்பற்றிய ப.தங்கத்தை பத்திரப்படுத்துக. இது நல்ல வெள்ளியில் சரிக்குச் சரி கொடுத்து செய்ய சிந்தூரமாம் சுத்தி செய்த செம்பு 4. வெள்ளி 2, பித்தளை 2 கூட்டி உருகும்போது ஷை சிந்தூரம் ஒன்று கொடுக்க வெள்ளி எட்டரை ஆகப் பழுக்கும்.

## 206 சர்வ சரக்கும் கட்டும் நமச்சாரக் கட்டு

துருசு வெடியுப்பு சீனிக்காரம் வகைக்கு ஒரு கழஞ்சி எடை பொடித்து பனை ஓலை பச்சை மடலைப் பிளந்து அதனுள் வைத்து ஓலையைப் பொதிந்து கட்டி விளக்குச் சுடரில் வாட்ட உருகும். ஆறினபின் எடுத்து இது கழஞ்சி 2 பழச்சாருல் அறைத்து ஒரு கழஞ்சி நமச்சாரக் கட்டிக்கு கவசித்து, காக்கை சிப்பியை உமிழ்நீர் விட்டு அறைத்து கோழிமுட்டைத் தோட்டுக்கு பூசி புடமிட்டு எடுக்க நீறும் இந்த நீறும் உமிழ்நீர் விட்டு அறைத்து அந்தக் கவசத்திற்கு மேற்கவசம் கட்டி அதன்மேல் வளையல்பொடி உமிழ்நீராலறைத்து அதுமேல் கவசித்து நாழி உமியுள் வைத்து புடமிட்டு ஆறி எடுக்க அந்த நமச்சாரம் கட்டும். இந்த நமச்சாரமும், வளையல் பொடியும், முட்டைத்தோடு நீறும்

ஒன்றன்மேம் ஒன்றாக கவசம் கட்டி புடமிட எந்தச் சரக்கும் புகையாமல் கட்டும்.

## 207 வாயில் அமுதம் சுரக்க புட எரிப்பு விதி

கற்பூரமாவது சீனிக்காரமாவது சிறிது வாயில் ஒதுக்க அல்லது அக்கராகாரம் ஒதுக்க உமிழ் நீர் சுரக்கும். இதால் மருந்துகள் அறைத்துக்கொள்ளவும். அமுதம் என்பது வாய்நீர். அமுரி சிறுநீர் காடை ஒரு எரு கதுவாலி 3 எரு குக்குடம் 10 எரு புடவிதி. இரு விரல் கன விறகு 1 தீபாக்கினி 2 கமலாக்கினி4 காடாக்கினி எரிப்புவிதி. ஒரு துருத்தி சன்ன உலை இரு துருத்தி உருக்கு உலை 3 கன்ன உலை 4 சர உலை ஊது விதி இது.

## 208 வாலை ரசம் எடுக்க மடல் துத்த வேதை

ரசம் கழஞ்சி 5 சித்திரபாலாடை சாறு படி 4 சுருக்கிட வாலை ரசமாம் கல்காவி கல்லுப்பு சீனிக்காரம் வகைக்கு கழஞ்சி ஒன்று எலுமிச்சம்பழச் சாறுல் அறைத்து மடல் துத்தம் கழஞ்சி ஒன்றரைக்கு கவசித்து சீலைமண் செய்து சிறுபுடமிட நீறும் இந்த துத்தமும் ஷிவாலை ரசமும் ரேகித்து பணத்தில் தடவி புடமிட ஏழரையாய்ப் பழுக்கும். உலாந்தாலிங்கம் பலம் 2 கொடிவேலிவேர் பலம் 4 வேரையிடித்து பாண்டத்திட்டு ஷி லிங்கம் பொடித்து மூடி மேல்பானை மூடி தீ எரித்து மேல் பானையிலிருக்கும் ரசத்தை பன்றி மயிரால் துடைத்து எடுப்பதும், லிங்கம் மஞ்சள் துணியில் திரித்து சட்டியில் வைத்து தீக்கொளுத்தியும் பலவிதமாக லிங்கரசம் எடுப்பதுண்டு. அலுமினியன் பாத்திரத்தில் முலைப்பால் விட்டு வீரம் போட்டுவைக்க ரசமாகிவிடும். மிருதார்சிங்கி குமரியால் வங்கமாகிவிடும்.

## 209 சேர்மான வேதை

அரபொடி, அரிதாரம், பொரிகாரம் வகைக்கு கழஞ்சி ஒன்று, பழசாருலாட்டி உருட்டி அதுமேல் தலைமயிர் சுற்றி பொதிந்து குகைக்குள் வேலிப்பருத்தி பொடியிட்டு அது மேல் கவசம் வைத்து அது மேலும் ஷை சூரணமிட்டு குகைக்கு சில்லுமூடி சீலை மண் செய்து உருக்கி எடுத்து இது ஒரு பங்கு நாகம் ஒரு பங்கு வெள்ளி 2 பங்கு பொன் ஒரு பங்கு தாமிரம் அரைப்பங்கு சேர்த்து உருக்க நாலரை யாய்ப் பழுக்கும்.

## 210 நாக வெள்ளி வேதை

துத்தநாகம் முத்திரைக்கட்டி பலம் ஒன்று உருக்கி கல்வத்தில் ரசம் பலம் ஒன்று விட்டு அதன்மேல் சாய்க்க இரண்டும் சேர்ந்து பிட்டுப்போலாம். வெள்ளி ஒன்று அரவச்செம்பு ஒன்று ஷை நாகப்பிட்டு இதற்கு நாலுக்கு ஒன்று சேர்த்து குப்பைமேனிச்சாருல் விரவி பொரிகாரம் சேர்த்து, சிறு குகையில் வைத்து குகை வாய்க்கு வட்ட ஓடு மூடி 4 சீலை மண் செய்து உருக்க வெள்ளி ஏழாகும். இதை கரி நெருப்பில் வைத்து ஒரு தரம் ஊதிப் போட்டு, சோற்றுப்பு அறைத்து அதில் தடவி கரிநெருப்பில் காய்ச்சி 3 தரம் நெடுக அடித்து புளியிட்டு விளக்கவும் ஏழாகும் நிசம் என்றார்.

## 211. பணவேதைக் குரு

பரங்கி வீரம் கிடையாவிட்டால் சவ்வீரம் களஞ்சி ஒன்று கெந்தகம் களஞ்சி 4 இது இரண்டையும் நல்லெண்

ணைக் கலயத்தின் அடியில் உறைந்திருக்கும் கடுகு மண்டி விட்டு ஒரு சாமம் அறைத்து 2 நாள் வெயிலில் காய வைத்து பணம் ஒன்றுக்கு எள்ளுப் பிரமரணம் பூசி தீயில் வைக்க புகையும் புகை மாறினபின் எடுக்க கருப்பாக இருக்கும் அதை காரம் குத்தி உருக்க ஏழாகப் பழுக்கும்.

## 212 பீங்கான் வேதை

இரும்பில் எடுத்த ஈயக்கிண்ணியை ஒரு சட்டி மணலில் பதித்து அடுப்பேற்றி சிறு தீயாயாக எரித்து பீங்கான் விராகனெடை 10 ரசம் வராகனெடை 10 அதிலிட்டு எலுமிச்சம்பழச் சாறு சுருக்குக் கொடுத்து சுவர எரித்து எடுத்து, ஈயம் 10 வெள்ளி 3 தரமிரம் ஒன்று பீங்கான் பொடி ஒன்று கழஞ்சி வீதமாக சேர்த்து இவைகள் உருகும்போது ஷி பீங்கான் ரசக்குரு கழஞ்சி ஒன்று வெள்ளைச் சாரணை சாற்றில் விரவி கொடுக்க வெள்ளியாம்.

## 213 இரும்பில் ஈயம் எடுக்க

இரும்புச் சல்லிகளில் நீல அஞ்சனக்கல் கொன்று போட்டு கலந்து குகையிட்டு உருக்க ஈயம் இறங்கும்.

## 214 நாங்கிள் ரசமணி வேதை

ரசம் களஞ்சி ஒன்று அதற்கு பத்து பங்கு எடை நாங்கிள் புழு நன்ருக அறைத்து இரும்பு தேய் கடையில் பூசி உமிக்காந்தல் தீயில் புதைத்து நிமிடத்தில் அதை எடுத்து அதன்மேல் சட்டி கவிழ்த்தி பதங்கம் எடுக்கவும். இவ்விதம் 3 தடவை செய்து பதங்கம் எடுத்து இதற்கு காரம் குத்தி உருக்க நன்ருக உருகும். மேல் போக்கு தங்கம் சேர்த்து வெள்ளியில் கொடுப்பது முதலியவை தெரிந்து செய்யவும்.

## 215 ரசக்கட்டு சத்து வகை மூலிகை

முருங்கைப் பூச் சாறு, அவுரி இலைச் சாறு, பாலாட்டின் குழைச் சாறு, கோவை இலை சாறு, ஓரிதழ் தாமரை சாறு, குப்பைமேனி சாறு, இலுப்பை எண்ணை, கருவூமத்தஞ் சாறு, கல்தாமரை சாறு, கஞ்சாச் சாறு, காளான் சாறு, காட்டுள்ளிச் சாறு, ஆடுதின்னுப் பாளைச் சாறு விடத்தலைச் சாறு இவைகள் ரசத்தைக் கட்டக்கூடியதாம், மூன் கூறிய மூன்று சாறும் ஷை எண்ணையும் அரைக்கால் படி வீதம் ஒரு சட்டியிலிட்டு ரசம் கழஞ்சி ஒன்று விட்டு காய்ச்சி எடுக்கவும். இதுபோல் இணங்கின மூலிகைகளாலும் சுருக்கிட்டும் கட்டிக்கொள்ளலாம். குப்பைமேனியில் தங்கச் சத்து இருக்கிறது. பொற்றலைக் கரிப்பானில் தங்கம் தாமிர சத்து இருக்கிறது. தாமரைப்பூ இனத்தில் நிறைய தாமிர சத்து இருக்கிறது. தாவரங்களின் புஷ்ப மணத்தைக்கொண்டு கெந்தக சத்தும் புஷ்ப வர்ண அழகைக்கொண்டு ரச சத்தும் நிர்ணயிக்கலாம். சுவை கண்டு பாசாண சத்து உப்பு சத்து உணரலாம்.

## 216 பண வேதைக் குரு

சாதிலிங்கம் 2 வெள்ளைப்பாசாணம் ஒன்று பொரிகாரம் ஒன்று இவைகளை களஞ்சி எடையாக எடுத்து, எருக்கலம் பழுப்புச் சாறு அல்லது பொற்கொன்றைப் பூச் சாறு விட்டு அறைத்து ஒரு புதுச்சட்டி நடுவில் வைத்து அதை செப்புக்கிண்ணம் கவிழ்த்தி மூடி அதன் சந்து வாய் சீலை மண் செய்து அதுமேல் ஒருபடி மணல் கொட்டி அடுப்பேற்றி தீ எரித்து எடுக்க ஷை செம்புக் கிண்ணத்துள் பதங்கம் ஏறி இருக்கும். பத்திரப்படுத்தவும். இது எள் பிரமாணம் எடுத்து உமில் நீரில் மத்தித்து ஒரு பணக்

காசில் தடவி தீயில் வைக்க புகையும் பிறகு எடுத்து பொரி காரம் கொடுத்து உருக்க ஏழாகப் பழுக்கும்.

## 217 செம்பு களிம்பற வேதை

சோற்றுப்பும் காக்காய்சிப்பியும் சமம் அறைத்து பழச்சாறு விட்டு நெகிழ அறைத்து செம்புதகட்டில் பொதிந்து தகுந்த புடமிடவும். இவ்விதமாக 3 புடமிட செம்பின் களிம்பு அற்றுப்போம். வெள்ளி 4 உருகும்போது இச்செம்பு ஒன்று கொடுக்க மூன்றரையாகப் பழுக்கும்.

## 218 மட்டப் பொன்னை உயர்த்தும் வன்னகாரி

வெடியுப்பு கரியுப்பு சீனிக்காரம் பொரிகாரம் வகைக்கு கழஞ்சி அரை பழச்சாறுல் அறைத்து துருசுக்கட்டி கழஞ்சி நாலுக்கு கவசித்து சீலை மண் 3 செய்து சிறு புடமிட துருசு நீரும். இந்த நீறுடன் காவிக்கட்டி கழஞ்சி ஒன்று சேர்த்து அறைத்து புட்டியில் வைக்கவும். இது வன்னகாரியாம். இதை மட்டப் பொன்னில் தடவி புடமிட மாற்று உயர்ந்து வரும். கீழ்கண்ட ஏம ரசமும் செய்து வைக்கவும். ஷெ சரக்குகளைப் பல எடையாகவும் செய்யலாம்.

## 219 மாற்று உயர எம ரசம் சார சேநீர் துருசு குரு

வெடியுப்பு கரியுப்பு சீனிக்காரம் சிப்பி இது நாலும் வகைக்கு பலம் அரை, பொடிசெய்து ஒரு சட்டியில் பாதிப் பொடியிட்டு அதன்மேல் 6 வராகனெடை நமச்சாரக் கட்டி வைத்து மேலும் அந்தப் பாதிப்பொடி மூடி மேல் சட்டி மூடி சீலை மண் 5 செய்து ஒரு சாமம் தீ எரித்து ஆறி அந்த

கட்டியை எடுத்து பீங்கானிலிட்டு வெயிலில் வைக்க செய நீராம். இந்த சேநீரில் பரங்கி விரம் அரை வராகனெடை போட அதுவும் கூடி செயநீராம். இதை புட்டியில் பத்தி ரப்படுத்தவும். இந்நீர் 6 வராகனெடை துருசு கட்டிக்கு சுருக்கிட்டு வெயிலிட குருபற்பமாம். ஒரு வராகனெடை ரசத்திற்கு ஒரு பண எடை தங்கமும் இந்த குருபற்பம் ஒரு பண எடையும் அறைத்து இரும்புக் கரண்டியில் வழித்து விட்டு நெருப்பிலிட ஏமரசமாம். இந்த ஏம ரசத்தை ஐத்து மாற்று மட்டப் பொன்னில் தடவி முன் கூறிய வன்ன காரி பொதிந்து ஓட்டில் வைத்துப் புடமிட சரியாக மாற்றேறி பழுக்கும்.

## 220 ரசகெந்தி பதங்க வேதை

ரசம் 4 கெந்தகம் 8 வராகனெடையாக எடுத்து மயூ ரோசனை இலை கூட்டி அரைத்து வில்லை தட்டி உலர்த்தி வச்சிரக் குகையிலிட்டு அதுமேல் செம்புக் கிண்ணம் கவிழ்த்தி மூடி 4 சீலைமண் செய்து சிறு புடமிட செம்புக் கிண்ணத்தில் பதங்கம் படிந்திருக்கும். ஒரு வராகன் எடை உருக்குத் தொட்டி செம்பு உருகும்போது ஷை பதங் கம் கால் வராகன் எடை கொடுத்து இந்த செம்பு 3ம் வெள்ளி 7ம் வராகனெடையாக எடுத்து பண எடை தாய் என்ற தங்கமும் கொடுத்து உருக்கி பின்பு ஈயம் குத்தி ஊதிப் போடவும் சதுராகப் பழுக்கும்.

## 221 தாவர வேதைகள் தாமிர சுத்தி.

ஒரு முழ உயரம் பங்களாக்களில் வளர்க்கும் கருங் கள்ளி இலையாவது ஒடைச்சடைச்சி இலையாவது அறைத்து

கவசித்து புடமிட்ட தாமிரதகடு வெள்ளிபோல் சுத்தியாம் தாமிரம் குடை கரியில் உருகும்போது புங்கம்பூச்சாறு பிழிய பழுத்து பேதிக்கும். புங்கு புரசம் பிசின் கருவேலம் பிசின் முருங்கை பிசினுக்கும் பேதிக்கும். புங்கவேர் சீவி துவைத்து எடுத்த பால் தாமிரதகட்டில் பூசி உருகுமுகத்திலும் கொடுக்கவும் இவ்விதம் 3 தரம் செய்ய உருக்கி சாய்க்க செம்பு களிம்பு நீங்கி ஆறுமாற்று வெள்ளி நிறமாம், இதற்கு வெள்ளைப் பாசாணம் கட்டியது 10க்கு ஒன்று கொடுத்துப் பார்க்கவும் பழுக்கும்.

## 222 தாமிர பற்பத்தால் தங்கச் செம்பு

கெந்தகத்தை சோற்றுக் கத்தாழையின் பால் விட்டு அறைத்து பயறுபோல் உண்டைகள் செய்து உலர்த்தி செம்பு 10 உருகும்போது இது 5 எடையாகக் கொடுக்க அந்தச் செம்பு நொறுங்கும் இந்தச் செம்பு தங்கம் உருகும் போது கொடுக்க அந்த தங்கம் செம்பாகும் வேதை முறைப்படி நடத்திக்கொள்ளவும்.

## 223 சோற்றுக் கத்தாழை சேநீர் எடுக்க தாரவேதை

அதன் சோறு எடுத்து பீங்கானிட்டு கெந்தகத்தூள் விரவிவைக்க சேநீராம். கடுக்காய்த்தூள் விரவிவைத்தும் எடுக்கலாம். இது வைத்திய முறைக்கு ஆகும். முன் முறைபோல் எடுத்த சேநீர் அரிதாரம் வேண்டியதற்கு சுருக்கிட்டு வெள்ளி 10க்கு ஒன்று கொடுக்கப் பழுக்கும்.

## 224 துருசுச் செம்பு வேதை

உவர்பூவை வாய்நீரமுதம் விட்டறைத்து துருசு கட்டிக்கு கவசித்து குகையிட்டு காரம்குத்தி உருக்க செம்பு பிறக்கும். தேனில் வாழைப்பழம் பிசைந்ததில் உருக்கி 3 தடவை சாய்த்து அமுக்கரா இலைச் சாறில் 3தபா சாய்த்து வெள்ளி 7க்கு 3சேர்த்து உருக்க 3ஆகப் பழுக்கும். கையாந் தகரையை அறைத்து துருசைப் பொதிந்து அதன்மேல் முருங்கைப்பட்டை அறைத்துப் பொதிந்து சீலைமண்செய்து புடமிட துருசு செம்பு ஆகும்.

## 225 நாகச் சேநீர், சேநீர் எடுக்கும் விதி

இரும்பு கரண்டியில் துத்தநாகம் ஒரு கழஞ்சி உருக்கி ரசம் அரைக் கழஞ்சி தொந்தித்து சவ்வீரம் கழஞ்சி ஒன்று போட்டு கல்வத்தோடு அல்லது பீங்கானில் வைக்க புகைந்து செய நீராகும். நாலைந்து நாளில் செயநீராம். 2 நாலைக்கு ஒரு தபா கையாடி விரவிவைக்கவும். இரவில் பனியில் வைக்கவும் செயநீராகும். ஒரு சட்டியில் முக்கால் சட்டி வரை சாணியை குழம்பாக கரைத்துவிட்டு நெகிழ பிசைந்து அதன் நடுவே செயநீர் சரக்கு வைத்த பீங்கானை பதிந்து சட்டிக்கு சீலை நனைத்து வேடு கட்டி மூலையில் அசையாமல் வைக்கவும் சேநீர் வரும்.

## 226 நாக சேநீரில் லிங்க கட்டு வேதை

சாதிலிங்கம் கழஞ்சி ஒன்று இடுக்கியால் பிடித்து ஷெ சேநீரில் தோய்த்து வாட்ட கட்டும். சேநீர் முழுதும் கொடுத்துவிடவும். சுருக்குமிடவும். அதன்மேல் அந்த

சேநீர் பிங்கான் அடியிலிருக்கும் திப்பிலைய ஷெ லிங்கத் திற்குப் பொதிந்து 2 நாள் காயவைத்து அரபொடி குன்றி மணி பருப்பு பழசாருல் அறைத்து கவசித்து 2 நாள் காய வைத்து கரியுப்பு சிறு நீரில் கழுவி அறைத்து அதுமேல் கவசித்து காயவைத்து சீலேமண் செய்து எருவின் பொடி யும் உமியும் கலந்து ஒரு படி அளந்து அதன் நடுவில் வைத்து புடமிட கட்டும். உருக்கு தொட்டி கழஞ்சி அரைக்கு பழசாறு விட்டு அறைத்து கெந்தகம் கழஞ்சி கால் கூடப்போட்டு அறைத்து கவசித்து மேல் சிறுநீர் கரிப்பு அறைத்து கவசித்து முன்போல் புடமிட கட்டும் வெள்ளி 7 செம்பு 3 க்கு பதங்கம் ஒரு மஞ்சாடி கொடுத்து கலிப்பு மாற ஊதிடபோட சதுராகப் பழுக்கும்.

## 227 முட்டைதோடு சுன்னம் மகாசேநீருக்கு

குஞ்சு பொறித்த கோழிமுட்டைத்தோடு உவர் மண் ணும் ஜலமும் விட்டு அவித்து சவ்வு நீக்கி கழுவி உலர்த்தி சுத்தித்து பலம் ஒன்று ஒரு சட்டியிட்டு அடுப்பேற்றி தீ எரித்து உவர் மண் படி ஒன்று சிறுவர் மூத்திரம் படி ஒன் றரை விட்டு கலக்கி தெளிந்த நீரை இறுத்து அந்த தோட் டுக்கு முழுதும் சுருக்கிட்டு அடைபோல் பிடித்திருக்கும் அந்த தோடும் உப்பும் சேர்த்து சுருக்கிட்ட மீதஜலத்தால் அறைத்து வில்லை தட்டி காயவைத்து ஒட்டிலிட்டு ஒடு மூடி சீலேமண் செய்து சேவல் புடமிட்டு ஆறி எடுத்து நுணுக்கி புட்டியில் பத்திரப்படுத்தவும். இது மஞ்சளிலிட சிவக்கும். இதை வெண் கருவால் அறைத்து தாளகம், வெள்ளை பாசாணம் நமச்சாரம், லிங்கம், பூரம் முதலியது

கழஞ்சி வீதம் எடுத்து தனித்தனி கவசித்து காக்காய்ச் சிப்பியில் வைத்து சிப்பி மூடி 3 சீலமண் செய்து சிறுபுடமிட அவை உருகியும் கட்டியும் இருக்கும். பின்வரும் மகா சேநீருக்கு இந்த சுன்னம் சேர்ப்பதாம்.

## 228 பொரிகார நீறு மகா சேநீருக்கு

ஒரு சட்டி அடுப்பில் காயவைத்து பொரிகாரம் கெந்தகம் வகைக்கு கழஞ்சி எடை 2 கெந்தி உருகும்போது ஷ பொரிகார மணியிட்டு புரட்டி ஒரு கழஞ்சி கவசகனம் ஏற்றி வைக்கவும். இவ்விதமாக பல பொரிகாரமணிகள் தயாரித்து நாலைந்து நாள் ரவியில் காயவைத்து பின்பு அக்கவசங்கள் நீக்கி பொரிகாரத்தைமட்டும் ரவியிலிட அது வெளுத்து நீறும்.

## 229 சீனிக்கார நீறு மகா சேநீருக்கு

5ம் காய்ச்சல் வெடியுப்பு குத்துப்புளி வகைக்கு பலம் ஒன்று அரைத்து துணி தடவி திரித்து விளக்கில் பிடிக்க உருகி கட்டிகளாக விழும். இது மஞ்சளுக்கு சிவக்கும். இதை பொடித்து நமச்சாரம் கழஞ்சி ஒன்று கூட்டி விரவி முன் செயநீர் விதிப்படி செய்ய சேநீராம். சீனிக்காரம் கழஞ்சி 2 இச்சேநீரால் அரைத்து வில்லை தட்டி காய வைக்க அது நீருக்கும் தினம் ஒரு தபா ஐந்தாறு நாளைக்கு அந்த சேநீர் விட்டு வெயிலிட்டு வரவும். பின்பு அந்த வில்லையை ஷ சேநீரால் அரைத்து பொரிகாரத்திற்குப் பொதிந்து ஐந்தாறு நாள் வெயிலிட்டு அந்த கவசம் நீக்க

பொரிகாரம் நீருகும். உள்ளே வைரம் இல்லாமல் நீற தினம் வெயிலிட சுத்த நீரும்.

## 230 நமச்சார நீறு மகா சேநீருக்கு

மூன் சொன்ன முட்டைத்தோட்டுச்சுன்னம் உமிநீரால் அறைத்து ஒன்றரை கழஞ்சி நமச்சாரக் கட்டிக்கு கவசித்து ஒருநாள் வெயிலிட்டு மாலையில் துணியில் சுண்ணும்புதடவி நான்கு சதுரமான சீலைசெய்து காடைப்புடமிட நீர்வற்றி அந்த சார்ம் கட்டும். இது நாகம் முதலியது கட்டவும் சேநீருக்கும் முக்கியமானது துருசுடன் அறைக்க சேநீராம். இதில் ரசம் கொதியிட மணியாம்.

## 231 சவுக்கார நீறு மகாசேநீருக்கு

சுண்ணும்பு நீற்றின தெளிவு நீர்படிவ, உவர்மண்ணில் சிறுநீர் விட்டு கலக்கி தெளியவைத்து இறுத்த நீர் படிவ, பூஞ்சாராயம் படிவ, ஆக முக்கால் படியும் ஒன்றுசேர்த்து சவுக்காரம் பலம் ஒன்று பொடி செய்து போட்டு நன்ருக கலக்கி அதில் வரும் நுரையை கோழித்தூவலால் எடுத்து ஒரு சட்டியில் போடவும், நுரை எல்லாம் வரும் வரையில் கலக்கிக் கலக்கி எடுத்து ரவியில் உலர்த்தவும், இந்த நுரை கொக்கிறகு போன்ற நீருகும். இதன் மகிமையை வழலை, முப்பு, சவுக்காரம் எனவும் கூறுவர்.

## 232 மகா சேநீர் வைக்கும் முறை.

227ல் சொல்லப்பட்ட முட்டைத்தோட்டுச் சுன்னம்,

228ன் பொரிகார சீறு, 229ன் சீனிக்கார சீறு, 230ன் நமச்சார சீறு 231ன் சவுக்கார சீறு இந்த ஐந்தும் வகைக்கு ஒரு கழஞ்சி வீதம் எடுத்து கல்வத்திலிட்டு பொடித்து ஒரு பீங்கானிலிட்டு. சாணி கரைத்துவிட்ட தாழியுள் ஷெ கிண்ணம் பதித்து தாழிவாய்க்கு ஈரத்துணி வேடு கட்டி காற்றில்லாத ஒரு அறையின் மூலையில் வைக்கவும், 2 நாளைக்கு ஒரு தபா அந்த சரக்குகளை கையாடி விரவி வைத்து வரவும். நாலைந்து நாள் சென்றால் அதில் சேநீர் கசிந்து வரும். அதன்மேல் இரவு சந்திர ஒளி பனியில் வைக்க சேநீராம். இதை புட்டியில் பத்திரப்படுத்தவும்.

## 233 மகா சேநீரால் சவ்வீர மெழுகு வேதை

ஒருசிறு அடுப்பின்மேல் அப்பிரேகத் தகடு வைத்து, அதில் ஒன்று அல்லது இரண்டு கழஞ்சி சவ்வீரக் கட்டி வைத்து, அடுப்புள் ஒரு விளக்கெண்ணைத் தீபச்சுடர் தாக்கும்படி செய்து, ஷெ மகாசேநீரை கோழித் தூவலால் எடுத்து சுருக்கிட்டுவர அந்த சவ்விரம் நெகிழ்ந்து பொங்கி ஷெ தகட்டில் பரந்து நிற்கும். சேநீரெல்லாம் நாளாவட்டத்தில் சுருக்கிட்டுவர நிசமான மெழுகு ஆகும். தண்ணீர் ஊறிய பதமாக இருக்கும். திரட்டி எடுத்துப் பத்திரப்படுத்தவும். இந்த மெழுகு எள்ளுப்பிரமாணம் எடுத்து ஒரு கழஞ்சி பித்தளைத் தகட்டிற்குப் பூசி, அதன் மேல், முன்போல் சுருக்கிட்டு கெந்தகத்தை தைலமாக்கி அதை அதற்குமேல் பூசி, அதன்மேல், சீனக்கல்லும் கரியுப்பும் அறைத்து பொதிந்து கதுவாலிப் புடமிட பித்தளை மெலிவு கொடுத்து வன்னபேதமாம். உருக்கிப் பார்க்கவும்.

கலிப்பும் பித்தளை நிறமும் மிஞ்சியிருந்தால், முன் மருந்து பூசினபடி மறுபடியும் செய்து சீனக்கல் புடத்திலிடவும். ஷ தகடு வசப்படும் வரை பருவமாகக் கவனித்து செய்யவும். இந்த சவ்விர மெழுகு மஞ்சாடி ஒன்று மஞ்சாடி தங்கத்தகட்டில் பொதிந்து தத்தாரி வெள்ளி10க்கு ஒன்று கொடுக்க பழுக்கும். சிவகடாட்ச முண்டு என்றார்.

## 234 ரச மெழுகு

காரீயம் கழஞ்சி ஒன்று உருக்கி ஒரு கழஞ்சி ரசம் தொந்தித்து கல்வத்தில் கொட்டி, சிறுநீர் படி ஒன்றில் ஒரு பலம் கெந்தகம் அறைத்து கலக்கிய நீரால் சுருக்கிட்டு வர அந்த ரசம் மெழுகாம், வேதையறிந்து செய்க

## 235 துருசு நீறு மகா சேநீரால்

ஒரு துருசுக்கட்டியை தலை விரித்தான் குமட்டி இலைச் சாறில் துவைத்து துவைத்து வெயிலிலிட 2 நாளுக்குப்பின் சீனிக்காரக் கட்டிபோலாகும், இக்கட்டிக்கு 232ல் கூறிய மகாசேநீரில் முக்கி வெயிலில் வைக்க கடுங்காரச் சுன்னமாம் அதற்கு மேலும் வகையான கரம் ஏற்றிக் கொள்ள நிசமான துருசு சுன்னமாம். வேதை முறை கண்டு செய்க ரசம் மணியாம். மணியில் தங்கம் சேர்த்து வேதையிட பழுக்கும்.

## 236 லிங்கக் கட்டு

லிங்கம் பலம் ஒன்று: தலைவிரித்தான் குமட்டிச்சாறு ஒரு படி சுருக்கிட்டு நாட்டுப் பூவரசம்பட்டை ஷ சாறல் அறைத்து கவசித்து மேலே 4 சீலை மண் செய்து குக்கிட

புடமிட்டு பண எடை அனுபானங்களிலிட வாதம் சூலே வாய்வு, சன்னி சுரம் குட்டம் குறை நோய் முதலிய சகல நோய் தீர்க்கும். வேதைக்கும் ஆகும்.

## 237 பாசாணக் கட்டு வேதை

உப்பு புளி மிளகு சம எடையாக அறைத்து ஒன்றிரண்டு கழஞ்சி வெள்ளைப் பாசாணத்திற்கு கவசித்து காயவைத்து 3 சீலேமண் செய்து காடைப்புடம் இடவும். இப்படி 7 புடமிட கட்டும். செம்பு 7 வெள்ளி 3 உருகும்போது இது ஒன்று கொடுத்து கலிப்பு மாற ஊதி இதை தாரத்தில் சேர்த்துக்கொள்ளவும். வேதையாம்.

## 238 நாக சிந்தூர வேதை

சுத்தித்த நாகம் காண்டியிலிட்டு உருக்கி கட்டின நமச்சாரம் கொடுக்க கண்ணடங்கி புகையடங்கி கட்டும். இதில் பச்சைப் புனுகு தடவி, கரியுப்பு வெடியுப்பு சீனிக்காரம் சம எடைகளாக எலுமிச்சம்பழச் சாறுல் அறைத்து அதன்மேல் கவசம் கட்டி காயவைத்து, ஒரு செங்கல்லில் குழி செய்து அதனுள் குன்றிமணி அறைத்த பசை தடவி அதில் ஷி கவசம் வைத்து அதற்கு பொருத்தமான வேறு ஒரு செங்கல் மூடி சீலேமண் செய்து சேவல் புடமிட்டு ஆறி எடுக்க சிந்தூரமாம். இதில் புனுகு அல்லது வெண்ணை மத்தித்து திரட்டி எடுத்து வெள்ளி 7 செம்பு 3 உருகும் போது இச் செந்தூரம் ஒன்று கொடுக்கப் பழுக்கும். நாக எடை கழஞ்சி விதமாகக்கொண்டு செய்யவும்.

## 239 சாதிலிங்க மெழுகு

அரளிப்பழுப்பு இலைகளை உரலிட்டு இடித்து துருசுக் குரு கொடுத்து சாறுவரப் பண்ணி, ஒரு கழஞ்சி சாதிலிங் கதத்திற்கு ஒட்டிலிட்டுச் சுருக்கிட மெழுகு ஆகும். செம்பு 7 வெள்ளி 3 உருகும்போது இது ஒன்று கொடுக்க பழுக்கும். இதுபோல் வராலியில் சாறு எடுத்தும் சுருக்கிடலாம். நிக ரற்ற வேதையாகும். வெள்ளி வித்தைக்கு நந்தியா வட்டையில் எடுத்த சாறு மிக விசேடமாம்.

## 240 சேர்மான மருந்து வேதை

காரியம் ரசம் பவளக்கால் மனோசிலை சாதிலிங்கம் அரி தாரம் இத்த 5ம் கழஞ்சிவிதம் தொந்தித்து, கோழி முட்டை வெண்கரு நீக்கி மஞ்சள் கருவின்மேல் அதை யிட்டு அதன்மேல் வேறு ஒரு முட்டையின் மஞ்சள் கரு விட்டு முட்டை தோடு மூடி பசைச்சீலை செய்து பலப்படுத்தி ஒரு சட்டியுள் ஒரு படி மணலுள் புதைத்து ஒரு சாமம் தீ எரித்து ஆறி எடுக்கவும். செம்பு 7 வெள்ளி 3 சேர்ந்து உருகும்போது இது ஒன்று கொடுக்க பழுக்கும். இதை தங்கம் 20க்கு ஒன்று கொடுக்கவும்.

## 241 அரிதாரக் கட்டு வேதை

பாசாணமும் கெந்தகமும் சம்பந்தப்பட்டது அரிதார மாம். இதை சுண்ணாம்பு முதலியவைகளில் சுத்திசெய்து போதுமானது எடுத்து, ஒரு துணியில் முடிந்து கிழி கட்டி, பூவரசன் காயும் பூவுமாக இடித்து ஒரு பாண்டத்திலிட்டு பதக்கு நீர் விட்டு ஷை கிழியை அந்த நீருள் தொங்கவிட்டு

நீர் வற்ற எரித்து எடுத்து கழுவி, ஒரு குமட்டிக் காய்க் குள் 20 நாள் வைத்து, அதன்மேல் சீலே மண் செய்து சிறு புடமிட கட்டும். களிம்பற்ற செம்பும் இரும்பும் சரி கூட்டி உருக்கி இது 5 களஞ்சிக்கு ஷி அரிதாரம் ஒரு மஞ்சாடி கொடுத்து எடுத்து, துய்யான் 7க்கு 3 கொடுத்து தாமிரம் பட ஊதிப்போடவும் பழுக்கும்.

## 242 ரசமணி வெள்ளிய நீர் வாங்க

ஒரு உடும்பின் வாயில் 10 கழஞ்சி ரசம் விட்டு குதம் வாய்களைத் தைத்து ஒரு பானே சோற்றுப்பில் ஷி உடும்பு நிமிர்ந்திருக்க வைத்து உப்பு மூடி பானைக்கு சட்டி மூடி சீலே மண் செய்து தக்க புடமிட்டு ஆறி எடுக்க அந்த ரசம் கட்டி இருக்கும். இந்த குளிகையை பத்திரப்படுத்தவும். வெள்யம் கழஞ்சி 19 உருகும்போது இந்த மணியை இட்டு எடுத்து பாலில் போடவும். அந்த ஈய நீரைச் சாப்பிட்டு விடும். அது வெள்ளியாக மாறும். ஆடரவம் வாயில் நீடு ரசம் வாரு. என்ற கவியின்படி நல்லபாம்பிலும் இவ்விதம் குளிகை செய்வதுண்டு.

## 243 ரசப் பிசின் வேதை

பலகரை என்னும் சோகிக்குள் 10 கழஞ்சி ரசம் விட்டு ஒரு கலசத்தில் மருதமரப்பட்டைச் சூரணம் கொட்டி அதன் நடுவில் இந்த சோகியைப் பதித்து மூடி மேலே உப்பு மூடி 40 நாள் சென்ற பின் எடுக்க ரசம் பிசின்போல யிருக்கும். வெள்ளியம் 60 உருகும்போது இது ஒரு பண எடை கொடுக்க துய்யாளுகும்.

## 244 துருசு சுன்ன வேதை

சிறுநீரில் நமச்சாரத் தூளிட்டுக் கலக்கி, ஒரு சட்டியில் துருசுக்கட்டி வைத்து இந்த நீர் வற்ற வற்ற விட்டு வெயிலில் 10 நாள் வைத்து அந்த ஒட்டில் படிந்திருக்கும் உப்பை சுரண்டி எடுத்து உமிழ் நீரால் மத்தித்து ஷை கட்டிக்கு கவசித்து அதன்மேல் கல்லுப்பு சுண்ணும்பு அறைத்து கவசித்து சீலமண் செய்து காடைப்புடமிட நீறும். இந்த நீறு ரசம் பொரிகாரம் வகைக்கு ஒரு மஞ்சாடி சேர்த்து அறைத்து வெள்ளியிலாவது செம்பிலாவது ஒரு கழஞ்சி எடைக்கு ஒரு மஞ்சாடி எடை கொடுக்க பழுக்கும்.

## 245 சுத்தி வகைகள் பாசாண சுத்தி

வெள்ளைப் பாசாணம் வேண்டியது பொடித்து துணியில் கட்டி சுண்ணும்பு தெளிவு நீர் ஒரு சட்டியில் விட்டு சட்டிக்கு துணி வேடுகட்டி அதன்மேல் ஷை 'பொட்டணம் வைத்து சட்டி மூடி எரித்து எடுக்க பாசாணம் சுத்தியாம்.

## 246 சாதிலிங்க சுத்தி

முலைப்பால் அல்லது எலுமிச்சம்பழச் சாறில் அறைக்க சுத்தியாகும். சூடன் சாம்பிராணி சமம் கீழ் மேல் வைத்து எரித்தாலும் சுத்தியாகும்.

## 247 துத்த சுத்தி (மடல் துத்தம்)

எருமைத் தயிரால் அரைத்து வில்லை பண்ணி, அடுப்பில் வைத்து காய்ந்த ஓட்டை இறக்கி அதில் அதை

வைத்து பொங்க விட்டால் சுத்தியாம். இந்த சரக்கு வேதைக்கு மிக முக்கியமானது இதை மடயன் என்பர்.

## 248 துருசு சுத்தி

நல்ல துருசைப் பொடித்து மெல்லிய சீலையை மடித்து அதில் வைத்து பொட்டணம் கட்டி. ஒரு சட்டியில் 4 படி தண்ணீர் விட்டு அதிலிட்டு முக்கால் படியாக காய்ச்சி எடுத்து வெயிலிலிட சுத்தியாம்.

## 249 கெந்தக சுத்தி

கரண்டியில் விளக்கெண்ணை விட்டு கெந்தகமும் போட்டு உருக்கி சாணிக் குகைக்குள் கொட்ட சுத்தியாம். பசுவின் பாலில் 7 தபா உருக்கி சாய்த்தாலும், வெள்ளாட்டுப் பாலில் வேகவைத்து எடுத்தாலும் சோற்றுக்கத்தாளை சோறில் அவித்து எடுத்தாலும் சுத்தியாகும்.

## 250 வெண்காரசுத்தி சீனிகாரசுத்தி

நெருப்பு ஓட்டிலிட்டு பொரித்து எடுக்க சுத்தியாம். கரும்புச் சாறிலிட்டு புடமிட்டு எடுக்க சுத்தியாம். சீனிக்காரம் சட்டியிட்டு நீர்வற்ற புரட்டி கொடுத்தும் பொறித்து எடுக்க சுத்தியாம்.

## 251 நமச்சார சுத்திகட்டு

கொதிக்கும் ஜலத்தில் நமச்சாரத் தூளிட்டு கலக்கி தெளிவை இறுத்து வெயிலிட்டு காய்ந்தபின் உப்பை எடுக்கவும். இவ்விதம் 4 தபா செய்ய உயர்ந்த சுத்தியும் கட்டும் ஆகும்.

## 252 ரச சுத்தி

மஞ்சள் தூள் செங்கல் தூள் போசரைத் தூளிட்டு அறைத்து ஊதியெடுக்க சுத்தியாம். சித்திரபாலாடை சாறு சுருக்கிட உயர்ந்த சுத்தியாம்.

## 253 ரச கற்பூர சுத்தி

முலைப்பலில் ஊறவைத்து தேன் சுருக்கிட சுத்தியாம். கொக்குமந்தாரைப் பூச்சாறு காட்டாமணக்கு பால் சுருக்கிட உயர்ந்த சுத்தியாம்

## 254 வீர சுத்தி

இளநீர் ஜலத்தில் கிழி கட்டி அவித்த வீரத்திற்கு முளைக்கீரை அறைத்து கவசித்து, 2 சீலை மண் செய்து சிறு புடமிட சுத்தியாம் அதன்மேல் மிளகரணை அரைத்து கவசித்து சீலைமண் செய்து 8 எரு புடமிட சிந்தூரமாம். அரிசி எடை அனுபானங்களிலிட 1, 2 வேளையில் குன்மம், குட்டம், கிரந்தி, சன்னி சகல நோய் தீரும்.

## 255 இரும்பு அரபொடி சுத்தி

நல்லெண்ணெயில் அரபொடியை 3 நாள் ஊறவைத்து வேகவைத்து கழுவி எடுத்து கருவேலம்பட்டைச் சாறில் வேகவைக்கவும், 2 சாமம் பின் எடுக்க சுத்தியாம்.

## 256 காந்த சுத்தி

வரகு வைக்கோலில் சுட்டு எடுத்தாலும், துணியில் முடிந்து வெள்ளாவியில் அவித்து எடுத்தாலும், எலுமிச்

சம் பழச் சாறு. காடிநீர், புளித்த மோரில் வகைக்கு ஒரு நாள் ஊறவைத்து 2 நாழிகை வெயிலில்காயவைத்து எடுத்தாலும் சுத்தியாம்.

## 257 நாக சுத்தி

நாகத்தை கரண்டியிலிட்டு உருக்கி இலுப்பை எண்ணெயில் விடவும். இப்படி 7 தடவை செய்ய நாகம் சுத்தியாம்.

## 258 வெள்ளி சுத்தி தங்க சுத்தி

வெடியுப்பு சேநீரில் ஊறவைத்து எடுக்க சுத்தியாம். இம்முறை வேதைகளுக்கு நல்லது. செம்மண் தடவிப் புடமிட தங்க சுத்தியாம்.

## 259 அரிதார சுத்தி

அரிதாரம் பலம் 5, துணியில் கட்டி 2 படி சுண்ணும்புக் கல்லுக்குள் வைத்து ஜலம் விட்டு நீற்றி கழுவவும். இப்படி 7 தபா செய்ய அதிலுள்ள எண்ணெ நீங்கும். பிறகு அதைச் சட்டியிலிட்டு அடுப்பில் வைத்து தீ எரித்து, குமரி சாறு, வெங்காயம், கொட்டக்கரந்தை, முசுமுசுக்கை சாறு வகைக்கு படி ஒன்று சுருக்கிட உயர்ந்த சுத்தியாம். இதுவே வேதைக்கும் அவுஷதத்திற்கும் பொருத்தமானது

## 260 சோற்றுப்பு சுத்தி

புதுச் சட்டியை அடுப்பில் வைத்து அதிலிட்டு வெதுப்பவும். இவ்விதம் 3 தடவை செய்ய சுத்தியாம்.

## 261 சேங்கொட்டை சுத்தி

பசுவின்பால் கோமியத்தில் வேகவைக்க சுத்தியாம். எள்ளு தேங்காய் சேர்க்க கெட்ட குணம் நீங்கும். புளி இலை விளக்கெண்ணைக்கும் அப்படியேயாம்.

## 262 சிவதைவேர் சுத்தி கொடிவேலிவேர் சுத்தி

பசுவின் பாலில் அவித்து எடுத்து உலர்த்த சுத்தியாம் தாவர வர்க்க சூரணங்கள் எல்லாம், சட்டியில் பால்விட்டு சட்டிமேல் துணி வேடு கட்டி அதில் வைத்து சட்டிமூடி எரித்து உலர்த்த சுத்தியாம். வாய் பிடிக்கும் மருந்துகளை பெருமரப்பட்டை சூரணத்தில் வைத்துக் கொடுத்தாலும் அரைமுக்கால் அவுன்சு விளக்கெண்ணையில் காலையில் ஒரு வேளை மட்டும் 3 — 5 நாள் கொடுத்தாலும் வாய் பிடியாது. கருவேலம்பட்டை சீனிக்கார கசாயம் கொப்பளித்தாலும் காசுக்கட்டி வாயில் ஒதுக்கினாலும், மாசிக்காய் ஒதுக்கினாலும் வாய் பிடியாது. சாணிப்பால், தேன், தயிர் குழைத்து கொடுத்தால் மருந்து வேகம் தணியும். கடுக்காய்ப்பூ அறைத்து பாலிலிட கள்ளிப்பால்களின் வேகம் தணியும்.

## 263 துருசு வித்தை குமரி சேநீர்

கடுக்காய் தோடு சூரணித்து சோற்றுக்கத்தாளை சோறிலிட்டு பிசைந்து வைக்க சேநீராம். அதில் துருசு நீற்றை வைக்க சுத்த நீராம். அந்த நீற்றிற்கு நாகநஞ்சு வேலிப்பருத்திப் பால் ரேகித்து அதில் தோய்க்க ஷெ துருசு நீரும். தேதையறிந்து செய்க.

## 264 அரிதார வித்தை தங்க செம்பு வேதை

அரிதாரம் கழஞ்சி ஒன்றுக்கு சங்கு சுண்ணும்பு பொதிந்து சிறு புடமிடவும். இப்படி 10 புடங்களிட்டபின் அதை குன்றிமணி தைலத்திளுல் அறைத்து 120 உண்டைகளாகச் செய்து ஒரு கழஞ்சி தங்கம் உருகுமுகத்திலே ஒவ்வொன்ருக கொடுக்க அந்தத் தங்கம் செம்பாக மாறும். அந்தச் செம்பை வெள்ளி 10க்கு ஒன்று கொடுக்க வலுக்காணும். கெந்தகச் செம்பு தங்கச் செம்பு கழஞ்சி வீதம் சேர்ந்து உருகும்போது தங்கச் செம்பு ஒரு பண எடை 16 பண எடை செம்பில் கொடுத்து தொந்திக்க எழுந்திருக்கும். வெள்ளி கழஞ்சி ஒன்றுக்கு கெந்தகம் சேர்ந்த தங்கம் ஒரு மா எடை கொடுக்க ஏழாகப் பழுக்கும்.

## 265 நாகச் சேநீர் வேதை

நாகம் கழஞ்சி ஒன்று உருக்கி ரசம் கழஞ்சி அரை தொந்தித்து கல்வத்தில் கொட்டி கெந்தகம் கழஞ்சி கால் கூட்டி பொடி செய்து அந்த எடை வீரம் கூட்டி சேநீர் முறைப்படி வைக்க சேநீராம். சாதிலிங்கத்தில் தங்கத் தகடு பொதிந்து ஷை சேநீரில் துவைத்து வைத்து தீயில் சிவக்கும்படி குரட்டால் பிடித்து வாட்டவும். தங்கத்தை உள்ளே இழுத்துக் கொள்ளும். இதை வெள்ளியிலாவது செம்பிலாவது ஒரு கழஞ்சி எடைக்கு ஒரு மஞ்சாடி எடை கொடுக்கப் பழுக்கும்.

## 266 தொட்டி செம்பு வேதை

கெந்தகமும் அப்ரேகமும் கழஞ்சி வீதம் எடுத்து ராம அவுரி இலைச்சாறு விட்டு மெழுகாக அறைத்து, தொட்டிச்

செம்பில் தடவி காயவைத்து புடமிட்டு எடுத்து வெள்ளி நாலுக்கு ஒன்று கொடுக்கப் பழுக்கும்.

## 267 வங்கவெள்ளி.

வெள்ளியம் கழஞ்சி ஒன்று உருக்கி அதில் ரசம் கழஞ்சி ஒன்று தொந்தித்து வெள்ளை அப்ரேகம், அரிதாரம் வகை கழஞ்சி ஒன்று சேர்த்து 5 நாள் அறைத்துப் பதமாக்கி, ஒரு கழஞ்சி வெள்வங்கம் உருகும்போது இந்த மருத்து ஒருமா கொடுக்க நீர் நீங்கி வெள்ளியாம்.

## 268 வைத்த மாற்றுக் காணும் பொற்குரு.

சவவிரம் ரசம் வகைக்கு ஒரு மஞ்சாடி எடுத்து உமிழ் நீரால் 5 நாழிகை மத்தித்து அறைத்து ஒருபண எடை தங்கத் தகட்டிற்குப் பூசி ஒரு நாழிகை வெயிலில் வைத்து காரியக் கிண்ணத்துள் வைத்து மூடி சீலைமண் செய்து சுனகன் புடமிட்டு எடுத்து வைக்கவும். துய்யான் என்னும் வெள்ளி கழஞ்சி ஒன்று உருகும்போது இது ஒரு மஞ்சாடி கொடுக்க முன்செய்த தங்கத்தின் மாற்றுக அது பழுக்கும்.

## 269 சகல தொழிலுக்கும் ஆகும் அயச்செம்பு.

புளிநடலைக்கிழங்கை சிதைத்து எலுமிச்சம்பழச்சாறில் ஊறவைத்து அறைதது நல்ல இரும்புத்தகட்டின்மேல் பூசி பொதிந்து ஒரு குகையில் வைத்து சில்லிட்டு மூடி சீலைமண் செய்து உலையில் வைத்து உருக்க அது செம்பாம். இந்தச் செம்பு, வேதை, சகல தொழிலுக்கும் ஆகும்.

## 270 நாகக்கட்டு.

கவுரிபாசாணமும் அரிதரமும் சம எடையாக எடுத்து ஆமணக்கு இலைச்சாறுல் அறைத்து நாகத்திற்குப் பொதிந்து ஒரு குகையுள் சுண்ணும்பு தடவி உலர்த்தி அதில் வைத்து மூடி சீலைமண் செய்து புடமிட நாகம் கட்டும். வேண்டிய பாகத்தில் சேர்த்துக் கொள்ளலாம்.

## 271 கெந்திலிங்க சவ்வீர சிந்தூர சேநீர்.

கெந்தகம், கரியுப்பு, வெடியுப்பு, சீனிக்காரம், பொரிகாரம், ரசம், அரபொடி, காந்தம், நமச்சாரம், பூநீறு சமமாகச் சேர்த்து சேநீர் முறைப்படி செய்ய சேநீர் வரும். இந்த சேநீரால் கெந்தகமோ சவ்வீரமோ சாதிலிங்கமோ தனித்தனியாக அறைத்து சிப்பியில் வைத்து சீலைமண் மணலுள் வைத்து எரிக்க அவை சிந்தூரங்களாம். வேதை வழிகண்டு போதல் முறை.

## 272 ரசமணி.

விஷ்ணுகிரந்தி வெண்பூவிசேடம் இதை முயல் ரத்தத்தால் அறைத்து குகைசெய்து அதில் ரசம்விட்டு பொதிந்து அதன்மேல் சாணி கவசித்துக் காயவைத்துப் புடமிடக் குளிகையாம்.

## 273 கோழிமல வேதை.

சருகுப்பித்தளை ராவின தூளும் காணப்பயறு நொறுக்கிய பொடியும் கலந்து சேவலுக்கு இரையாகக் கொடுத்து அதன் மலத்தை சேகரித்து உலர்த்தி உருக்கப் பழுத்திருக்கும் களிம்பு இராது.

## 274 துருசுச் செம்பு வேதை.

துருசு கழஞ்சி 10 ஒரு கட்டியாக வாங்கி அதன்மேல் தலைமயிர் சுற்றி அதன்மேல் பசுவெண்ணெய் பொதிந்து குகையில் வைத்து உருக்க 10 பணஎடை செம்பு இருக்கும். அதை மறுமுறை உருக்கி காடி தெளிவில் சாய்க்கவும். இவ்விதம் 5 தபா செய்து பிறகு 10 பணஎடை வெண்கலப் பொடியும் இருபது பணஎடை வெள்ளியும் ஷை செம்பும் கூட்டி உருகும்போது 11 பணஎடை காரீயத் தகட்டை சிறிது சிறிதாக வெட்டிக் கொடுத்து அதில் 8 மாற்றுத்தங்கம் கால் கழஞ்சி கூட்டி உருக்க எல்லாம் சேர்ந்து எட்டுஆகப் பழுக்கும்.

## 275 தாமிர சிந்தூர வேதை.

செம்பரத்தம்பூ சாறில் மடல்துத்தம்இட அந்தச்சாறு உண்ணும். அதை கொசுவின் தேறல் அறைத்துக் குகை செய்து, ஷை பூச்சாறில் 10 தபா உருக்கிச் சாய்த்த செம்பு வைத்துப் பொதிந்து சீலமண் செய்து சாண் உயரமான புடத்தில் இரவு 30 நாழிகை இருக்கவிட்டு எடுத்து சொர்ண வைரவர் தியானம் செய்து வைத்துக்கொள்ளவும். (சொர்ண வைரவர் தியானம்: ஓம்ஐயும் ரீயும் ஸ்ரீயும் அவ்வும் சொர்ண வைரவா சௌபாக்கிய லட்சுமிவா) ஷை சிந்தூரம் வெள்ளி 7 க்கு 3 கொடுக்க நாலாகப் பழுக்கும்.

## 276 மட்டப்பொன் மாற்றேறும் குரு.

கெந்தகம் தாளகம் வகைக்கு கழஞ்சி 5 குப்பைமேனி சாறுவிட்டு அறைத்து 3 பங்கு செய்து ஒருபங்கை ஒரு கழஞ்சி லிங்கத்திற்கு கவசித்து குகையிலிட்டு சிறு புடம்

இடவும். இப்படியே பிறகும் 2 புடங்களிட்டு பொரிகாரத்தை பசுவின் நெய்யினுல் அறைத்து ஷை லிங்கத்திற்குப் பொதிந்து உருக்கவும். இதை தணிந்த மாற்று கழஞ்சி ஒன்று உருகும்போது இந்த லிங்கம் ஒரு மஞ்சாடி கொடுக்க மாற்று உயரும்.

## 277 மடல் துத்த வேதை

மடல் துத்தம் கழஞ்சி 4 வெள்ளாட்டு மூத்திரத்தில் கிழிகட்டி அவித்து புளிநடலை கிழங்கு சாறில் 15 நாள் ஊறவைத்து பிறகு இலுமிச்சம்பழச்சாறில் 10 நாள் ஊற வைத்து எடுத்து, கருநொச்சி இலைச்சாறில் 7 தடவை உருக்கிச் சாய்த்த செம்பு கழஞ்சி ஒன்று உருகும்போது ஷை துத்தம் கழஞ்சி கூட்டி உருக்கி அந்த எடைக்கு தங்கம் கூட்டி உருக்க எல்லாம் சேர்ந்து எட்டரையாகப் பழுக்கும்.

## 278 நாகதாளியில் ராசி வேதை

நாகதாளி இலைச்சாறில் (ராசி) செம்பு 9 தடவை உருக்கிச் சாய்த்து அந்த ராசி 3ம் வெள்ளி 7ம் சேர்த்து உருக்கி முன்போல் தங்கம் சேர்க்க ஏழரையாய்ப் பழுக்கும்.

## 279 செம்பரத்தம்பூ கெந்தி வேதை

செம்பரத்தம்பூவும் பொரிகாரமும் அறைத்து கெந்தகத்திற்குப் பொதிந்து குகையிலிட்டு மூடி சீலைமண்செய்து ஒரு எருவில் புடமிட்டு எடுத்து ராசி என்னும் செம்பிலாவது துய்யான் என்னும் வெள்ளியிலாவது 10க்கு ஒன்று கொடுக்க பரி என்னும் தங்கம் அஞ்சாகப் பழுக்கும்.

## 280 சேர்மான வேதை

இரும்புத்தூள் தாமிரத்தூள் வெள்ளித்தூள் பொன் தூள் வகைக்கு கழஞ்சி ஒன்று பொரிகாரம் கூட்டி உருக்கி ஆதாளை சமூல சாறில் சாய்க்க எட்டாகப் பழுக்கும்.

## 281 நாகல் பிசின் வேதை

வெள்ளீயம் உருகும்போது நாகல் பிசின் கொடுக்க வெள்ளியாகவும் தாமிரம் உருகும்போது கொடுக்க பொன் னுகவும் மாறும்.

## 282 புங்கம்பிசின் வேதை

புங்கம் பிசினை தண்ணீரில் குழைத்து இரும்புத் தகட் டில் பூசி உருக்கவும் இவ்விதம் 5 தடவை செய்ய பொன் னுகப் பழுக்கும்.

## 283 புரசம்பிசின் வேதை

வெள்ளீயம் உருகுமுகத்தில் புரசம்பிசின் கொடுக்க நீர் வாங்கும்.

## 284 ஓடைச் சடைச்சி வேதை

இந்தப் பச்சிலை அறைத்து பொதிந்து புடமிட தாமி ரம் சுத்தமாம். நாயுருவி சாம்பலுக்கும் கருங்கள்ளி இலைக் கும் சுத்த வெள்ளி போலாம். காடி ஜலத்தில் 10 தபா காய்ச்சி தோய்த்தாலும், உருக்கி வார்த்தாலும் தாமிரக் களிம்பு நீங்கும். இவைகளே வேதைக்கு உரியதுவாம்.

## 285 பாசாண மெழுகு

வெள்ளைப் பாசாணம் 10 வராகன் எடை எடுத்து தைவேளைச்சாறு ஒருபடி சுருக்குக் கொடுத்து பிறகு பன்றி நெய், தேன் வகைக்கு அரைப்படி வீதம் சுருக்கிட மெழுகு ஆகும். சுத்தித்த தாமிரம் 10 க்கு ஒன்று எட்டரையாகப் பழுக்கும். இதைத் தண்ணீர் விட்டு அறைக்க உப்பாகும். இதோடு ரசம் விட்டு 4 சாமம் அறைக்க மெழுகு ஆகும். இந்த மெழுகு 10க்கு ஒன்று கொடுக்க எட்டரையாகப் பழுக்கும்.

## 286 குக்குடமல நாகவேதை.

ஒரு இரும்புக் கரண்டியில் சிறிது இலுப்பை எண்ணை விட்டு சிறு கண்நாகம் வேண்டியது பலம் 4 இட்டு உருக்கி தேங்காய்ப் பாலில் சாய்க்கவும். இவ்விதம் 7 தடவைசெய்து அந்த நாகத்தை அரத்தால் ராவி, கருங்கோழியைக் கட்டி வைத்து, ஷை ராவின தூளை கருங்குருவை அரிசி மாவில் விரவி அந்தக்கோழியை மேயவிடவும். அதன் மலத்தை எடுத்து கழுவி அதிலுள்ள நாகத்தூள்களைக் குகையிலிட்டு உருக்கி 5 கழஞ்சி எடுத்து அதற்கு நெருஞ்சியின் சமூலம் அரைத்து பொதிந்து சீலைமண்செய்து கோழிப்புடமிடவும். பின்பு எருக்கலம்பழுப்பு அரைத்துப் பொதிந்து முன்போல் புடமிடவும் கட்டும். வெள்ளி கழஞ்சி ஒன்றுக்கு இது ஒரு மஞ்சாடி கொடுத்தாலும் செப்பு கழஞ்சி 7க்கு 3 மஞ்சாடி கொடுத்தாலும் அது எட்டரையாகப் பழுக்கும்.

## 287 துருசு நீரு.

கணுவுக்குக்கணு கோதுமைபோல் காய்த்து வாசனையாக இருக்கும் கோடகசாலை என்ற மூலிகையின் சாறு

துவைத்து வெயிலிலிட துருசு வெளுத்து நொறுங்கும். இவ்விதம் 3 நாள் செய்து பின்பு ஷ சாருல் 2 சாமம் அரைத்து வில்லை செய்து காயவைத்து ஒரு சிறு சட்டியுள் சுண்ணும்பு நீறு இட்டு அதில் வைத்து ஷ நீறு மூடி ஓடு மூடி சீலைமண் செய்து குக்கிடப் புடமிட நீறும். இந்தத் துருசுக்கு காரச்சேநீர் கொடுத்து அதிக காரம் ஏற்றிக் கொள்ளவும். இது சாறுவராத் தழைகளில் சாறு வரச் செய்யவும் ரசம் கட்டவும் சகல சரக்கு நீற்றவும் கட்டவும் உபயோகமாகும்.

## 288 தாளக நீறு.

சுண்ணும்பில் வைத்து ஜலம் விட்டு 7 தடவை சுத்தித்த தாளகம் காடி நீரில் 3 நாள் ஊறவைத்து எடுத்து துணியால் துடைத்து வெயிலில் காயவைத்து மறுநாள் அந்தக்கட்டிக்கு எருக்கலம்பால் சுவரச்சுவர அடித்து வெயிலில் காயவைத்து அந்தப் பாலின் கவசத்தை நீக்கி விட்டு கால்பலம் வெயிலில் காயவிட்டு. சுண்ணும்பும் கட்டின சோற்றுப்பும் ஜலத்தால் அரைத்து அந்தக்கட்டிக்கு விரல் கனமாகக் கவசித்து நன்ருகக் காயவைத்து சுண்ணும்புச் சீலை செய்து உலர்த்தி சிப்பிச்சாம்பலுள் வைத்து குக்கிடப் புடமிட நீறும் அரிசி குன்றிஎடை விதம் அனுபானங்களிலிட சுய காச கப ரோகங்களும், குட்டம், வாதம் சகல கொடிய நோய்கள் தீரும். ஆடுதின்ன பாளைச்சாருல் 2 சாமம் அரைத்து சிறு வில்லைகளாக ரவி உலர்த்தி ஓட்டில் பரப்பி ஓடுமூடி சீலைமண் செய்து சிறு புடமாக இட்டு நீற்றி அரிசி விதம் சயகாசங்களுக்கு கொடுப்பதும் உண்டு.

## 789 கூட்டு வேதை.

முன் கூறிய கோழிமுட்டைத் தோட்டுச் சுன்னம் கழஞ்சி கால், கழுவித்துடைத்த பொரிகாரம். நமச்சாரம், சவ்வீரம், மடல்துத்தம், ரசம், சிறுகண்நாகம் வகைக்கு கழஞ்சி கால்வீதம் இந்த 7 சரக்கும் சேர்த்துப் பொடித்து ராசி கழஞ்சி ஒன்று உருகுமுகத்தில் கொடுத்து வாரடித்து மறுபடி வங்கம் குத்தி ஊதிப்போடவும். ஒன்றேகால் கழஞ்சி செம்பிற்கு கால் கழஞ்சி தாளகம் கூட்டி உருக்கிக் கொண்டு மண்குகையில் சங்கு நீரில் வைத்து உருக்கவும். இவ்விதம் 3 தடவை செய்து அந்த எடைக்கு எடையாக வெள்ளி சேர்த்து உருக்கி குமரிசாறில் சாய்க்கவும். இவ்விதம் 32 தடவை செய்து எடுத்து இதன் எடைக்குத் தங்கம் சேர்த்து வெள்ளி 10 க்கு ஒன்று கொடுக்க அஞ்சாகப் பழுக்கும்.

## 290 சாதிலிங்க கட்டு வேதை.

கரியுப்பு அரை, ரசம் முக்கால், துருசு ஒன்று சூடன் ஒன்றேமுக்கால், வெடியுப்பு 2 இந்த எடைகள் கழஞ்சி வீதமாக எடுத்து பொடித்து அடுப்பில் ஒரு ஓடு காய வைத்து அதில் ஷெ பொடியில் பாதியிட்டு, அதன்மேல் ஒரு பலம் லிங்கக்கட்டியை வைத்து அதன்மேல் ஷெ பாதித் தூளால் மூடி சிறு தீயாக எரித்து கம்பியால் புரட்டிக் கொடுத்து எரித்து எடுக்கவும். இந்த லிங்கம் மஞ்சாடி ஒன்று எடுத்து பரிமா வெள்ளி 7 செம்பு 3 சேர்த்து உருகும் போது கொடுக்க நன்ருகப் பழுக்கும். அரிதாரம், இரும்பு அரபொடி, கெந்தகம், மனோசிலை வகைக்கு பலம் ஒன்று கோழிமுட்டை வெண்கருவில் ஊறவைத்து அரைத்து மூன்று பலம் லிங்கக் கட்டிக்குக் கவசித்து சீலைமண் 7 செய்து காயவைத்து குக்கிடப் புடமிட லிங்கம் கட்டும்.

இந்த லிங்கம் குன்றிபணாளடை விதம் தேன் முதலிய அனு பானங்களிலிட சகல வாய்வு சன்னி சுரம் பேதி மாரடைப்பு பிரசவசன்னி முதலிய சகல நோய்களுக்கும் சஞ்சீவியாம் இது குடும்ப மருந்தாம். இது ஒன்று கைவசம் இருந்தால் வைத்திய விருது கட்டலாம். சூலை வாதம் குட்டமும் தீர்க்க வல்லது. பத்தியமில்லை.

## 291 வகாரக்கவி.

1. அரிதாரம் அந்த வெங்கல நிமிளையும்
பரிவான சூதமும் பாங்கான லிங்கமும்
தருவான ரத்தத் தயிலத் தறைத்திட
திருவான வங்கம் செயக்கட்ட தாச்சே.
2. ஆச்சுது வங்கத்திற் காம்பரி யோரிடை
பாச்சு ரவிமதி பாங்காக நாலிடை
ஓச்சு யிதாறுமே ஒக்க வுருக்கிட
வாச்சுதே வுப்புக்கு மாயாத சொர்ணமே.

இரத்தத்தைலவிதி. வெடியுப்பு சேநீரில் சவ்வீரம் இட சிவந்த நீராம். இச்செயநீரால் ஷை மருந்து அறைப்பது முறை.

## 292 நமச்சார மெழுகு. பலமெழுகு.

கர்ண்டியில் வெடியுப்பு இட்டு காக்காய் சிப்பியால் மூடி அடுப்பில் வைத்து நன்றாய் எரித்து எடுக்க ஷை உப்பு மணியாய் இருக்கும். அதைப் பொடித்து இரும்புக் கிண் ணத்திலிட்டு 60 நாழிகை வைத்திருக்க சேநீராம். இந்த சேநீரால் சீனிகாரம் ஒரு கழஞ்சி அறைத்து கிண்ணத்துள் அப்பி ஓடுமூடி சீலைமண் செய்து குக்கிடப்புடமிட்டு எடுத்து

கன்னிக்கோழிமுட்டை குடைந்து மஞ்சள் கருவை நீக்கி விட்டு வெள்ளைக்கருவோடு ஷ சீனத்தை சேர்த்து மறு தோடுமூடி உப்புப் பானைக்குள் மூடிவைக்க 60 நாழிகையில் அது செயநீராம். இந்தச் செயநீரில் பச்சைக் கற்பூரம் ஒரு கழஞ்சி மத்தித்து வெயிலில் வைக்க அது உப்பாகும். அந்த உப்பை உமிழ்நீரால் மத்தித்து நமச்சாரக்கட்டிக்குப் பூசி வெயிலில் வைக்க நமச்சாரம் மெழுகு ஆகும். இந்த மெழுகை தாளகத்திற்குப் பூசி வெயிலில் வைக்க அது மெழுகாம். இத்தாளக மெழுகை பரங்கி பாசாணத்தில் தடவி தீயில் வாட்ட பரங்கி மெழுகாம். இந்த மெழுகு துய்யான் கழஞ்சி ஒன்று உருகும்போது ஒரு மஞ்சாடி கொடுக்க அதிகமாகப் பழுக்கும்.

## 293 துருசு நீறு

துத்தி இலையும் சங்கும் அறைத்து துருசுக்கட்டிக்குக் கவசித்து சீதுமண் செய்து மணல் மறைவில் சிறு புடமிட நீறும்.

## 294 சிப்பிச் சேநீர் சீனப்பித்தளை வேதை.

சிப்பிச்சுண்ணும்பு நமச்சாரம் வகைக்குக் கழஞ்சி எடை 10 சவ்வீரம் கழஞ்சி 2 சேர்த்து அறைக்க செயநீராம். இதில் சீனப்பித்தளைத் தகடு 10 நாள் ஊற வைத்து எடுத்து தாரம் கூட்டி உருக்க பழுக்கும்.

## 295 பித்தளை வேதை,

கெந்தகம் மடல்துத்தம் சரிஎடையாக எடுத்து கரட்டுக் காயப்பால் விட்டு அரைத்துப் பித்தளைத் தகட்டில் தடவி

உலர்த்தி இதற்குச் சரிஎடை வெள்ளி கூட்டி காரம் கொடுத்து உருக்கிப் பிறகு புத்தோட்டில் வைத்து ஊதிப் போடவும் பழுக்கும்.

## 296 தாமிரபற்பமும் வேதையும்.

அக்கிராக் காரம் எலுமிச்சம்பழச் சாறுல் அறைத்து தாமிரத் தகட்டிற்குத் தடவி ஓட்டில் வைத்து சீலேமண் செய்து புடமிடவும். இவ்விதமாக 3 புடமிட நீருரும். இந்த நீறும் வெள்ளியும் வகைக்கு கழஞ்சி வீதம் உருக்கி இது கண்ட எடைக்கு 6 மாற்றுப்பொன் சேர்த்து உருக்க எல்லாம் அஞ்சாகப் பழுக்கும்.

## 297 கருவங்கக் கட்டு.

குப்பைமேனிச் சாறு வெள்ளேச் சாரணேச் சாறு சமம் கலந்து சிப்பிச்சுண்ணும்பு பெருங்காயம் சமமாக அதில் கரைத்து காரீயம் உருகுமுகத்தில் சுருக்கிட அந்த ஈயம் கட்டும்

## 298 ரசம் சுத்தியாய் கட்டுப்பட.

மஞ்சள், செங்கல்தூள் ஓட்டடைத் தூள்களில் அரைத்து எடுக்கப் பாதரசம் சுத்தியாம். இதை வெள்ளேக் காக்கணம் சாறு, கருவூமத்தின் சாறு, நன்னரி இலேசாறு வகைக்கு 7 நாள் மத்தித்து, வெண்கல வட்டியில் விட்டு செவ்வகத்திப்பூ சாறுல் மத்தித்தாலும், காட்டு உள்ளிக் கிழங்கு சாறுல் மத்தித்து அந்தக் கிழங்குள் வைத்து சீலேமண் செய்து சிறு புடமிட்டாலும், கல்தாமரைச்சாறு கருவூமத்தின்சாறு 2 நாழிகை சுருக்கிட்டாலும், முத்தெருக்

கன்செவி சாறில் 3 நாள் மத்தித்து (ஒருபடி சாறு சுருக்கிட்டு) ஷெ இலேக்குகைக்குள் வைத்து சீலேமண் செய்து சிறு புடமாக 5 இட்டாலும் ரசம் வெண்ணெயாம். அதை உருட்டி ஜலத்திலிட மணியாக இறுகும். கோவை இலே குப்பைமேனியிலும் கட்டுவதுண்டு. குப்பைமேனி தங்கச் சத்து உள்ள மூலிகையாம். எவ்விதமாவது ரசத்தைக் கட்டினவர் தவசியாவர் என்று கூறப்பட்டிருக்கிறது. இது சிவன் விந்துவாம்.

## 299 நாகம் கட்ட.

பொடுதலேச்சாறில் உழக்கு எடுத்து அதில் நாகம் 7 தடவை உருக்கிச் சாய்த்து பிறகு சிப்பிக்குள்ளிருக்கும் சதையும் நாவல் பட்டையும் அதன் கொழுந்தும் சரிகூட்டி அரைத்து 5 கழஞ்சி நாகத்திற்குக் கவசித்துப் பொதிந்து அதன்மேல் செங்கல்லும் இரும்புக்கிட்டமும் அறைத்துப் பொதிந்து சீலேமண் 2 செய்து கோழிப் புடமிடக் கட்டும். தாமிரத்தில் கொடுக்கப் பழுக்கும். நாகப்பொன்னுக்கு நானூறு குற்றம் என்பர். நன்கு கவனித்துச் செய்யவும்.

## 300 ரசமெழுகு வேதை.

சுண்ணும்புக்கல் கழஞ்சி 4 இதில் வெந்நீர் சிறிது விட்டு நீற்றி அந்தத் தெளிவுநீரை இறுத்து அதில் சீனிக்காரம் கழஞ்சி ஒன்று பொடித்துப் பேசட்டால் கொதிக்கும் நீராகும். அதன்பின் நமச்சாரம் 5 துருசு 10 கெந்தகம் 20 ரசம் 40 இவைகளை கழஞ்சி எடைகளாக எடுத்து ரசம்தவிர மற்றவைகளை கல்வத்திலிட்டு நுணுக்கி ஷெ செயநீர் விட்டு அறைக்க உப்பு ஆகும். அதன்பின் ஷெ ரசமும் சேர்த்து

அரைக்க மெழுகு ஆகும். இம்மெழுகு வெள்ளி கழஞ்சி 20 உருகு முகத்தில் ஒரு கழஞ்சி கொடுக்க அது பழுக்கும்.

## 301 வகாரக்கவி.

1. ஊமையினுட் கரு வுலர்த்தி யினங்களை
தேமக் கொடுக்கச் செந்நாதம் கட்டதாம்
காமிய நீரால் கலந்து ஜலமதாம்
ஊமையில் சாரம் உருவாகும் காரமே.

2. உருவாகு முப்பு வுடன்கார சாரமும்
பிரியா தீயப் பேசா தடக்கும்
தருவாகும் சொன்னந் தான் தருவிக்கும்
கருவாகும் நாகம் ரசம்கட்டுங் கட்டுமே.
கட்டுமே கெந்தி கார்வண்ணன் தேவி
ஒட்டுமே வெள்ளை வுறவாம் கவுரி
மட்டுங் கவசம் மருவிய லிங்கம்
பட்டறை வாட்டப் பதைப்பறச் சாகுமே.

ஊமை என்பது சிப்பி இன்ங்கள் என்பது வெடியுப்பு.

## 302 வெள்ளைப் பாசாணக் கட்டு.

மிளகு, பழம்புளி, சோற்றுப்பு சமமாக அரைத்து 4 கழஞ்சி வெள்ளைப்பாசாணக் கட்டிக்கு பொதிந்து கவசித்து காயவைத்து அதன்மேல் சீலைமண் செய்து உலர்த்தி காடைப் புடமிடவும் இவ்விதம் 7 புடமிட கட்டும். இதால் ரசம் கட்டும். வெள்ளி செம்பிலிட பழுக்கும். செங்காரம் வெண்காரம் 7 கூட்டி மருந்து ஒன்று கொடுக்கவும் என்று கூடகமாக எழுதியிருந்தது. இதை அனுபவத்தால் கவனிக்கவும்.

## 303 வெள்ளீய வேதை.

சிறுநீரில் தலைவிரித்தான் குமட்டிக்காய் வளையமாக நறுக்கி இட்டுக் கலக்கி அந்த நீரை வெள்வங்கம் பலம் 10 உருகும்போது சுருக்கிடவும் என்று எழுதியிருந்தது. ஷை நீர் வாங்கினால் அந்த ஈயம் வெள்ளியாக மாறும் என்பது யுக்தி.

## 304 தாமிர பற்பம்.

நெல்லிக்காய்க் கெந்தகத்தை தூதுவளை இலைச்சாறு விட்டு அரைத்து இலேசான தாமிரத் தகட்டின்மேல் பூசி உலர்த்தவும் இப்படி 3 தடவை பூசி உலர்த்தி காயவைத்து புகையில்லாத எருவின் தணலுக்குள்ளாவது கரியிலாவது புடமிடவும் இவ்விதம்3 புடமிடபற்பமாக நீறும் அரிசி வீதம் தேன் திப்பிலிச் சூரணத்திலிட சத்தி குன்மம் சகல வாய்வு கழிச்சல் தீரும். இளநீர் ஜலத்தை இரண்டொன்றாகக் காய்ச்சி அதில் பற்பமும் கோரோசனையுமிட்டு குன்றிபண வீதம் 3 நாள் கொடுக்க சூதுபாண்டு மகோதர முதலியவை தீரும். பசி தீபனமாம்.

## 305 அரிதார பற்பம்

சுத்திசெய்தது பலம் 5 குமரிச்சாறு, வெங்காயச்சாறு, கொட்டைக் கரந்தைச்சாறு, முசுமுசுக்கைச்சாறு வகைக்கு படி ஒன்றுசுருக்கிட்டு இந்தத் தாளகம் ஒரு பலம் எடுத்து புகையிலைச்சாறு படி அரைக்கால் கொண்டுஅரைத்து சிறு வில்லைகளாக்கி உலர்த்தி ஒரு ஓட்டில் ஷை புகையிலை இடித்துப் பிழிந்த சக்கையைப் பரப்பி அதன்மேல் வில்லை களைப் பரப்பி மேலும் சக்கைமூடி மேலே ஓடுமூடி சீலைமண்

7 செய்து காயவைத்து குக்கிடப் புடமிட்டு ஆறி எடுக்க (15 எரு) பற்பமாம். தேன் நெய் முதலிய அனுபானங்களில் காலைமாலை குன்றிஎடை கொடுத்துவர நாலைந்து நாளில் கப சம்பந்தமான சகல நோயும் தீரும். சீதளப்பதார்த்தங்களை நீக்கவும். சுண்ணும்புக் கல்லில் வைத்து 7 தபா நீற்றி எடுத்த தாளகத்தையும் இவ்விதம் செய்வதுண்டு. மேமே கூறிய சுருக்கிட்ட தாளகம் எந்த மருந்துக்கும் விசேடமாகும்.

## 306 லிங்க செந்தூரம் தாதுபலக்க.

ஒரு பலம் சீனிக்காரத்தை கொடிக்கள்ளிப் பாலால் 3 சாமம் அறைத்து ஒரு பலம் லிங்கக்கட்டிக்குக் கவசித்து நிழலில் உலர்த்தி, ஒரு அகலில் கிராம்யுத்தூள் பலம் 4-ல் பாதியிட்டு அதன்மேல் ஷை கவசம் வைத்து அதன்மேல் ஷை தூள் பாதியிட்டு செம்மி மூடி மேல் ஓடுமூடி சீலைமண் 4 செய்து காயவெத்து 30 எரு புடமிட்டு ஆறி எடுத்து லிங்கத்தின்மேல் பிடித்திருக்கும் கவசத்தை சுரண்டி எடுத்துவிட்டு லிங்கத்தை நுணுக்கி வைக்கவும். காலை மாலை அரிசி எடை விதம் வெண்ணை நெய் பால் சுக்குச்சூரணங்களில் கால் அரை ஒரு மண்டலம் சாப்பிட்டு வர இந்திரியம் கெட்டது, ஆண்குறி துவளல், நரம்பு தளர்ச்சி, நபும்சகம், துரிதகலிதம், பலவீனம் முதலிய நோய்களை நீக்கி திடகாத்திரமும், போகசக்தியும், வாலிப தோற்றமும் தரும். வாய்வு சுரம் முதலிய நோய்களும் தீரும்.

## 307 தாதுலேபன வெண்ணை.

சிவலைப் பசுவின்பால் படி 1 வெள்ளெருக்கலம்பூ 60 அதிலிட்டு பூ குழைய வேகவைத்து புறையூற்றி மறுநாள்

கடைந்து அந்த வெண்ணை எடுத்து அதோடு கோரோசனை புனுகு சிறிது சேர்த்து ஆண்குறியில் தடவி வர ஆண்குறி கோணல் துவளல் நுனி பருத்து அடி சுருங்குதல் முதலியவை நீங்கி புருஷத்தன்மை உண்டாவதோடு போகித்த மாதர் வசீகரமும் போகசக்தியும் உண்டாம்.

## 308 வகாரக் கவி.

நல்லவெள்ளி எட்டுமா நலங்கொள்செம்பு நாலுமா
செரல்லுநாகம் ரெண்டுமா குலாவுபொன்னு மவ்வடை
வில்லிஞேசை யொன்றுகூட்டி மேவியூத வல்லிரேல்
எல்லையற்ற சோதியாணை யெட்டுமாற்றுக் காணுமே

வில்லிஞேசை — வெங்காரம்

## 309 லிங்க செந்தூரம்.

அரைப்பலம் லிங்கக்கட்டிக்கு அரைக்கால் படி ஆதாளம்பால் சுருக்குக் கொடுத்து கோழிமுட்டை குடைந்து வெண்கருவை எடுத்துவிட்டு மஞ்சள் கருவோடு சேர்த்து முட்டை தோடுகொண்டு ஷெ துளையைமூடி மேலே 4 சதுர சீலைமண் செய்து ஒரு சட்டியில் ஒருபடி மணலுள் வைத்து மூடி 3 சாமம் எரித்து எடுக்கவும். இது அனுபானங்களில் பணஎடை கொடுக்க சன்னி சுரம் வாய்வு தாதுபலயீனம் மந்தாக்கினி தீர்க்கும். வேதையில் பழுக்கும்.

## 310 வகார வேலைக்கு ஆணிவேரான சவ்வீரவைப்பு. கோடாசூரி வீரவைப்பு.

5-ம் காய்ச்சல் வெடியுப்பு பலம் 20 சவுட்டுப்பு பலம் 20 நமச்சாரம் பலம் 5 கல்லுப்பு பலம் 5 இவைகளை பொடிசெய்து

ஒரு வாலைப்பானையிலிட்டு வாலை சொருகி சீலைமண் செய்து அடுப்பேற்றி எரிக்க திராவகம் இறங்கும். முதல்நீர் வெண்ணிறமாம். அதைப் புட்டியில் பிடித்துக் கொண்டு அடுத்து வரும் மஞ்சள் நிறமான செயநீரைப் பத்திரப்படுத்தவும். இந்த மஞ்சள் நீரில் 8 பலம் ரசம்இட்டு (குப்பிக்கு சீலைமண் செய்து உலர்த்தி) சட்டி மணலுள் கழுத்தளவு பதித்து சீசா வாய்க்கு மாக்கல் அடைத்து திராவகம் வற்றும் பருவமாக எரித்து எடுக்க அந்த ரசம் வெண்ணிற மணல்போல் இருக்கும். இந்த ரசமணலுடன் துருசு கல்லுப்பு வெடியுப்பு சீனிக்கராரம் பூநீறு வஸ்து வகைக்கு 2 பலம் சேர்த்து அன்னபேதி பலம் 3 நமச்சாரம் பலம் 4 இவைகள் எல்லாம் சேர்த்து பொடித்து மேரு என்னும் காசிக் குப்பிக்கு சீலை மண் 7 செய்து உலர்த்தி அதில் பாதி அளவுக்குப் போட்டு மாக்கல் வாய்க்கு சொருகி சீலை செய்து பாண்ட மணலுள் கழுத்தளவு அக் குப்பியை பதித்து மணல்மூடி (பாண்டத்தின் அடியில் 2 விரல் உயர மணலுக்கு மேல் குப்பியை வைத்து மணல் மூடவும்.) அதன்பின் பாண்டத்தை அடுப்பில் வைத்து தீபாக்கினியாக 4 சாமம், கமலாக்கினியாக 4 சாமம் எரித்து பிறகு காடாக்கினியாக பத்துசாமம் எரித்து அடுப்போடு வைத்து நன்ருக ஆறினபின் குப்பியை உடைத்துப் பார்க்க தேங்காய்ச் சில்லுப்போல் வெண்மையாக இருக்கும் சவ்வீரம். இந்த வீரம் பலம் 8 வெடியுப்பு பலம் 4 சீனிக்காரம் பலம் 4 கல்லுப்பு பலம் 4 துருசு நமச்சாரம் அன்னபேதி வகைக்குப் பலம் 2 சேர்த்துப்பொடித்து முன்போல் குப்பியிலடைத்து வாய்க்கு மாக்கல் அடைத்து பசைச்சீலை செய்து மணலில் பதித்து முன்போல் எரித்து ஆறவிட்டு எடுக்கவும் (தீபாக்கினி கமலாக்கினி வகைக்கு 3 சாமம் காடாக்கினி 8 சாமம் எரிக்கவும்.) பானை குளிரும்

வரை ஆறவிட்டு குப்பியை எடுத்து உடைத்துப் பார்க்க பதங்கமாக ஏறி இறுகி இருக்கும். இது கொச்சி வீரமாம். இந்த வீரத்துடன் முன்கூறிய சரக்குகள்கூட்டி முன்போல் எரித்து எடுப்பது கோடாசூரி வீரமாம். இவை ஒன்றுக்கு ஒன்று அதிக வேகமுடையதாம். முன்முறைபோல் 3 முறை மடக்கிச் செய்தது கொச்சி வீரம் என்றும் 5 முறை மடக்கிச் செய்தது கோடாசூரி வீரம் என்றும் கூறுவர்.

## 311 வேறு விதமான ஒரு முறை.

சீனிக்காரம் பலம் 10 வெடியுப்பு பலம் 20 சவட்டுப்பு பலம் 30 சேர்த்துப் பொடித்து வாலைப்பானையிலிட்டு முன் போல் திராவகம் வடித்து நடுவில்வரும் மஞ்சள் நிறசேநீரில் ரசம் பலம் 8 இட்டுக் கிண்ட கல்வத்தோடு ரவியிட ரசம் மாவாகப் பொறியும். ஷீ ரசமணலில் வெடியுப்பு 7 சீனிக் காரம் கல்லுப்பு துருசு .பூநீறு வகைக்கு பலம் 2 அன்ன பேதி பலம் 3 நமச்சாரம் பலம் 4 சேர்த்து பொடி செய்து முன்போல் குப்பியில் அடைத்து மணலில் பதித்து முன் போல் முத்தீயும் எரித்து ஆறினபின் எடுக்கவும். இந்த வீரத்துடன் முன்சரக்குகளை மீண்டும் சேர்த்து முன்போல் எரித்து எடுக்கவும். இவ்விதம் 3 தடவை செய்தது கொச்சி வீரமாம். அதன்பின்னும் 2 தடவை எரித்து எடுப்பது கோடாசூரி வீரமாம். ரசமணல் செய்வதில் 8 பலம் ரசத் திற்கு 80 வராகனெடை சேநீர் என்று எடை கூறுவர். இவ் விதமே ரசமணல் செய்து முன் முறைபோல் சவ்வீரம் கொச்சி வீரம், கோடாசூரி வீரம் தயார் செய்துகொள்ளவும் இவ்வீரங்களே வாதவித்தைக்கு வித்தாம். அரிதாரத்தைக் கொவ்வைஇலைச் சாறு விட்டறைத்து நெய் முட்டைக்குள்

இட்டு அடுப்பில் எரிக்க மனேசிலையாம். ஒரு சட்டி மணல் மேல் வெள்ளை அப்ரேகத்தகடு வைத்து அதுமேல் அரிதாரக் கட்டியை வைத்து மேலே பாகல் இலைச்சாறு விட்டு மேலே ஷ தகடுமூடி மேலும் மணலிட்டு மூடி புகை உண்டாகும் போது சட்டியைஇறக்கி ஆறவிட்டுப்பார்க்கஅது மனேசிலை யாம் கெந்தகமும் பாசாணமும் சேர்ந்தது அரிதாரமாம்.

## 312 நமச்சாரக் கட்டு.

நமச்சாரக் கட்டிக்கு குறுந்தொட்டி இலை அறைத்து கவசித்து ஒரு பீங்கானில் வைத்து வெயிலிலிட அதிலுள்ள எண்ணையைக் கக்கும். அதன்பின் சுண்ணும்பு நீறுள் வைத்து ஒரு சாமம் எரித்து எடுக்க பூரா எண்ணையும் நீங்கி விடும். பிறகு ஒரு சட்டியில் பாதி யானை லத்தி பரப்பி அதன்மேல் செங்கல்தூள் பரப்பி அதன்மேல் ஷ நமச்சா ரத்தை வைதது அதன்மேல் செங்கல்தூள்மூடி அதன்மேல் யானை லத்திமூடி பொருத்தமான மேல்சட்டி மூடி 7 சீலை மண் செய்து ஒரு சாமம் எரித்து ஆறவிட்டு எடுக்க அது சட்டும். நாகம் உருகும்போது கொடுக்க கட்டும். அரிசி குன்றி விதம் அனுபானங்களிலிட சூதக வியாதிகள் இடுப்பு நோய்கள் தீரும். வேவைச் சரக்குகளில் சேர்க்கலாம்.

## 313 வெள்வங்க பற்பம்.

முசுமுசுக்கை இலை தேங்காயளவு அறைத்து சுத்தித்த ஷ தகடுகள் நறுக்கி பொதித்து சீலைமண் 7 செய்து கஜ புடமிட சங்குபோல் நீறும். இவ்விதம் சத்திச்சாரணை இலைச் சாறிலும் நீற்றலாம். வங்கபற்பத்தை விளக்கெண்ணை மத் தித்து குடைகரியிலிட்டு உருக்கவும். அதில் ஈயமணிகள்

இருந்தால் அதை நோய்க்குக் கொடுக்கக்கூடாது. மணி திரளாமல் நீறினதே சாப்பிடத்தக்கதாம். சீனிக்காரம் சேர்த்தும் உருக்கிப் பார்க்கலாம்

## 314 லிங்க பற்பம்.

சிவனார் வேம்பின் வேர்த்தோல் வாத்துமுட்டை அள வாக அறைத்து அதை ஒரு பலம் லிங்கக் கட்டிக்கு கவ சித்து இரும்புக் குகை அல்லது சேர்மானக் குகையில் வைத்து சில்லுமூடி சீலைமண் செய்து 15 எரு புடமிட எடை போகாது. மங்கல் வெண்மையாய் இருக்கும் பணஎடை தேனில் காலை மாலை கொடுக்க சன்னி சுரம் வாய்வு இரும்ல் தாதுபலயீனம் தீரும். ரத்தசுத்தி ரத்தவிருத்தியாம். சூலை பிடிப்புகளும் தீரும். வெண்ணையில் கொடுக்க நாட்பட்ட வெள்ளை வெட்டைகளும் 10 நாளில் பூரண குணமாகும் பத்தியமில்லை. போகம் கூடாது.

## 315 வீரசெந்தூரம்.

மிளகு பலம் இ அறைத்து ஒருதுணியில் பரப்பி அதில் வீரம் பலம் ஒன்று வைத்து கிளிகட்டி ஒருகலசத்தில் 2 படி இளநீர் ஜலம்விட்டு அதிலிட்டு தோளாயந்திரமாக எரித்து எடுத்து அந்த வீரத்திற்கு முளைக்கீரை யை அறைத்து விரல்கனமாகக் கவசித்து உலர்த்தி 3 சீலை மண்செய்து 3 எருவில் புகையாமல் புடமிட்டு எடுக்க பூரண சுத்தியாம். இந்த வீரம் அரைப்பலம் கட்டிக்கு மிளகரணை இலையை அறைத்து பெருவிரல்கனமாக கவசித்து உலர்த்தி அதன்மேல் 4 சதுரமான சீலைமண் செய்து காயவைத்து

குக்கிடப் புடமிட எடைபோகாது சிந்தூரமாகி இருக்கும். தவருகச்செய்திருந்தால் வெள்ளையாக நீறிஇருக்கும். இதில் அரை ஒன்று இரண்டு அரிசி எடை பலம் அறிந்து மிளகுச் சாந்தில் பொதிந்து கொடுக்க எப்படிப்பட்ட குன்மமும் ஒரே வேளையில் குணமாகும். பசி தீவிரம் அதிகமாம். வாந்தி எடுத்து விட்டாலும் குணம் தவருது. 3 வேளைக்கு மேல் எந்த நோயும் இராது முலைப்பால் தேன்கசாய அனுபானங்களிலிட, கபநோய் 96, சன்னி 13, வலிப்பு 5, சயகாசம் 5. சுவாசகாசம் 5, குன்மம் 8, குட்டம் 18. கிரந்தி 9 முதலிய கொடூரமான நோய்களும் ஒன்றிரண்டு வேளையில் குணத்திற்கு வரும். வெட்டை புண் புரைகளுக்கு விளக்கெண்ணை அரை முக்கால் அவுன்சில் காலையில் மட்டும் 3 நாள் 5 நாள் கொடுக்க தீரும். கட்டின வீரத்திற்கு அயம், கெந்தகம் சமமாக எடுத்து எலுமிச்சம் பழசாருல் அறைத்து கவசித்து அதன்மேல் சோற்றுப்பு அறைத்து கவசித்து மணலில் பதித்து ஒரு சாமம் எரித்து எடுக்க வீரம் சிந்தூரமாகும். வாதம் 80 கண்டமாலை நோய்க்கும் வீரநீறு சிறந்ததாம். வாழைத்தண்டை வில்லைகளாக நறுக்கி ஒரு கலயம் நிறைய வைத்து அதன்மேல் வீரக்கட்டி வைத்து சட்டி மூடி எரித்து எடுக்க எடைபோகாது சுத்தியாய் இருக்கும்.

## 316 ஆறுமுக பற்பம்.

ரசம், இந்துப்பு, கல்லுப்பு, வளையலுப்பு, சீனிக்காரம், அன்னபேதி இந்த ஆறும் வகைக்கு ஒருபல வீதம் எடுத்து சுத்தஜலத்தால் 3 மணிநேரம் அறைத்து ஒரு அகலச் சட்டியில் வழித்துவிட்டு மேல் சட்டிமூடி 7 சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பேற்றி தீபாக்கினி 1 மணிநேரம் கமலாக்கினி 1 மணிநேரம் கடாக்கினி 1 மணிநேரம் எரித்து ஆற

விட்டு பிரித்துப் பார்க்க மேல்சட்டியில் தேங்காய்ப்பூபோல் பதங்கம் இருக்கும். கீழ்சட்டியில் சிந்தூரம் இருக்கும். பதங்கத்தை ஓலையால் வழித்து புட்டியில் பத்திரப்படுத்தவும். ஒரு குன்றிஎடை எடுத்து ஒன்று அல்லது முக்கால் அவுன்சு விளக்கெண்ணையில் மத்தித்துக் காலையில் ஒரு வேளை மட்டும் கொடுக்கவும். மலக்கட்டு நீங்கும்படி எண்ணெ சேர்க்கவும் மறுநாள் எண்ணெயை ¾ அவுன்சாக் குறைக்கவும் வாய் பிடியாது. இவ்விதம் 5 நாள் 5 வேளை கொடுத்தால் தீராத கொறுக்கு யோனி தண்டு அழுகின புண் புரை யோனிப்புற்று மேகப்புண் கிரந்தி கண்டமாலை அரையாப்பு துடைவாழை சூதக்வாய்வு முதலிய கெட்ட சீக்குகள் ஒடிப்போம் பால் நெய் சேர்க்கவும். சம்போசித பத்தியம் வைக்கவும். மூன்றுவேளையில் குணம் காட்டும் கண்டமாலைப் புண்ணுக்கு காக்காய் விருசமரப் பட்டையை சிறுநீரில் உரைத்து அப்பவும். பூச்சிகள் செத்து புண்களும் ஆறும்.

## 317 தங்கம் வெள்ளி பற்பம்.

தங்கத்தகடு கழஞ்சி 5, வெள்ளித்தகடு கழஞ்சி இவைகளை உப்பிலாங்கொடி இலையை அரைத்து கவசித்து சீலைமண் செய்து வராக புடமிட பற்பமாம். அவைகளை சேர்த்து குன்றிஎடை அனுபானத்திலிட மேகம் 20, சுரம் 64, அதிசாரம் 6, மந்தம் தாதுநட்டம் முதலிய நோய்கள் தீரும்.

## 318 தங்க செந்தூரம்.

கோழிக்குடுமி என்னும் மூலிகையால் அரைத்து வராக புடமிடவும். இவ்விதம் 3 புடமிட ரோஜாப்பூ நிற

மான்-சிந்தூரமாம். தாதுவிருத்தி தேகபலம் தரும். வெண் குட்ட முதலிய நோய்கள் நீக்கும்.

## 319 வெள்ளி பற்பம்.

சுத்தித்த வெள்ளி 3 தோலா உருகும்போது மகிழம்பூ சாறு பலம் அரை சுருக்கிட்டு எடுத்து ஷை சாறுல் அறைத்து வராகபுடமிட நீறும் குன்றிஎடை அனுபானத்திலிட மேகம் ஈளை இருமல் முதலிய நோய்கள் தீரும். செம்முள்ளி இலைச் சாறுல் அறைத்து 3 புடமிட நல்ல சிந்தூரமாகும்.

## 320 காந்த சிந்தூரம்.

நாவி கழஞ்சி 3½, கெந்தகம் கழஞ்சி 50, காந்தம் கழஞ்சி 100, செம்புபற்பம் உருக்குபற்பம் வகைக்கு கழஞ்சி அரிதாரம் லிங்கம் மனோசிலை குக்கில் பொரிகாரம் வகைக்கு கழஞ்சி 12½, ரசம் கழஞ்சி 2½, வெள்ளி கழஞ்சி 5, தங்கம் கழஞ்சி 2½ வனகபற்பம் கழஞ்சி 1 இவைகளை பொற்றலை கரிப்பான் சாறுல் ஒருநாள் அறைத்து மறுநாள் கவுதும் பைச்சாறு, அவரை இலைச்சாறு, கீழ்வாய் நெல்லிச்சாறு தனித்தனி அறைத்து அயபற்பம் கழஞ்சி 20 சேர்த்து எலுமிச்சம்பழச்சாறுல் அறைத்து வில்லைகளாக உலர்த்தி ஓடுமூடி சீலைமண் செய்து 10 நாழிகை எரியும்படியாக புடமிடவும். இப்படி 10 புடமிட முருக்கம்பூ நிறசிந்தூரமாம். பணஎடை சிந்தூரம் எடுத்து கால் கொட்டைப்பாக்கு சீவி வாயிலிட்டு ஒரு வெற்றிலையில் சுண்ணம்பு தடவி அதில் ஷை சிந்தூரம் வைத்து சுருட்டித் தின்னவும் இப்படி 10 நாள் 20 வேளை கொள்ளவும். கைப்பு புளி நீக்கவும். வாழைக் காய் கச்சல் எருமைத்தயிர் முளைக்கீரைத்தண்டு அத்திப் பிஞ்சு சேர்க்கலாம். இச்சாபத்தியம். இதனுல் பாண்டு வீச

பாகம் கிருகிருப்பு மகோதரம் ஈளை இளைப்பு காசநோய் சலக்கழிச்சல் உள்ளுருக்கி முடக்குவாதம் வாதசூலை கவுசி குன்மம் மூலவாயு கிராணி 8 சோகை பித்தபாண்டு உள் இளைப்பு வெடிசூலை கைகால் கடுப்பு சூதக வாயு முதலிய நோய்கள் நீங்கி தேகதிடம் உண்டாம்

## 321 உபசாரம் எடைபாகம் வேதை விதி.

சலாசத்து பிரிதிவு சரக்கு எடை ஒன்றேகால் கல்நார் அப்புச்சாக்கு ஒன்றரை வெண்காரம் தேயுச்சரக்கு 1 கல் மதம் வாயுச்சரக்கு முக்கால் சீனிக்காரம் ஆகாயச்சரக்கு அரை இந்த எடை முறைகளை அனுசரித்துச் செய்தால் வேதையில், திரை, சவடு, களிம்பு, ஊரல், சவளை, நழுகல் என்னும் 6 வகைக்குற்றம் நீங்கும். ஊட்டம், காய்ப்பு, புட நயப்பு, காகரப்பு முதலிய நாலுவகைக் குணங்களும் வாய்க்கும். ஆதலால் எடைபாகம், புடபாகம், கைபாகம், செய்பாகம் தெரியாமல் செய்தால் வேதை மனவேதையைத் தான் உண்டாக்கும். "வாதி ஆறிக்கெட்டான் வைத்தின் ஆருமல் கெட்டான்" என்பது பழமொழி.

## 322 உபரச சரக்குகளின் பூதம்.

சலாசத்து, பூநாகம், அயகாந்தம், ராஜவர்த்தம், பிருதிவிசரக்குகள், சங்கு, கோழிமுட்டை, கிழிஞ்சல், நண்டு அப்புச் சரக்குகள், எலும்பு, இந்திரகோபம், மயிலிறகு, நிமிளை, வெண்காரம், தேயுச்சரக்கு, சாத்திரபேதி, கல்நார் கல்மதம், அன்னபேதி, உரோமம்,வாயுச்சரக்கு. துத்தம்,சுக்கான், துருசு, சாணம், வைகிராந்தம் ஆகாயச் சரக்குகளாம்

## 323 லவணபஞ்ச பூதம்.

கல்லுப்பு, இந்துப்பு, வளையலுப்பு; பிரிதிவு மூன்று விதமான சாரங்கள் அப்புவாம். சூடன், வெடியுப்பு, சவுட்டுப்பு தேயுவாம். வெண்காரம், துருசு, சீனம் வாயுவாம். பூரம், வழலை ஆகாயமாம்.

## 324 பாசாண பூதம்.

தாளகம், பிரிதிவு, வீரம் அப்பு, லிங்கம்தேயு, வெபாசாணம் வாயு, கெந்தகம் ஆகாயமாம்.

## 325 கருபஞ்ச பூதம்.

மலம் பிரிதிவு, சிறுநீர் அப்பு, இரத்தம் தேயு, வாய் நீர்வாயு, விந்து ஆகாயமாம்.

## 326 அஷ்டலோக மாரணம்.

ரசம் கெந்தகம், நமச்சாரம், வெண்காரம், வெடியுப்பு' வெபாசாணம், ரசகற்பூரம், வீரம், இவை சமமாக பழசாறுல் அறைத்து எந்த உலோகத் தகட்டிலும் தடவி உலர்த்தி ஓடுமூடி சீலைமண்செய்து கஜபுடமிட அவை நீறிப்போகும்.

## 327 நமச்சாரக்கட்டு மெழுகுவேதை.

சீனிக்காரம் பொரிகாரம் வகை பலம் 1 வாழக்கிழங்கின் சாறுல் அறைத்து கால் பலம் நமச்சாரக்கட்டிக்கு கவசித்து அதன்மேல் கொடிவேலிப்பட்டை அறைத்துக் கவசித்து சீலைமண் செய்து குக்கிட புடமிடவும் எடைபோகாது

கட்டிப்போம்; கசியாது. அதன் பிறகு வெடியுப்பு பலம் 1 அந்தச் சாரத்தோடு சேர்த்து எருக்கலம் பழுப்புச் சாருல் அறைத்து வில்லைதட்டி சிறிது உலர்த்தி ஒரு சட்டியில் கோழிக்காரம் பரப்பி அதுமேல் ஷை வில்லையை வைத்து மேலும் கோழிக்காரம் மூடி, சிறு தீ எரிக்க மெழுகு ஆகும். இது சொக்கம் பலம் 1 க்கு மஞ்சாடி கொடுக்க புத்தாகப் பழுக்கும். முன்கூறியசாரம் நெருப்பிலிட புகையாது உருகி ஆடும் எடைபோகாது. நாகம் உருகும்போது கொடுக்க அது கண்ணடங்கிக் கட்டும். இந்த நாகம் செம்பிலிட அகத்திப் பழுப்புபோல் பழுக்கும்.

## 328 நமச்சாரக் கட்டு விதிகள்.

குறுந்தொட்டி இலை அறைத்து கவசித்துபீங்கானிட்டு வெயிலிலிட எண்ணெ கக்கிவிடும். சுண்ணும்பு நீறுள் வைத்து 2 சாமம் எரித்து ஆறவிட்டு எடுக்க நமச்சாரம் கசிவறும். கொதிக்கும் ஜலத்தில் 2 வீசை நமச்சாரம் நொறுக்கி இட்டு கரைத்து சூட்டோடு துணியில் வடிகட்டி குளிர வைத்து அதை அகலப் பாத்திரத்தில் விட்டு கடும் வெயிலிலிட அந்த உப்பு கட்டிப்போம். இந்த நமச்சார உப்பை பத்திரப்படுத்தவும். வேதைகளுக்கு உதவும். இவ்விதம் வெடியுப்பு முதலிய உப்புகளையும் கட்டலாம். நமச்சாரத்தை காட்டு முருங்கை இலை சாறுவிட்டு அறைத்து வில்லைதட்டி உலர்த்தி ஒரு சட்டியில் பூநீறு இட்டு அதன்மேல் ஷை வில்லையை வைத்து மேலும் பூநீறுமூடி மேல் சட்டிமூடி சீலை மண்செய்து எரித்து எடுக்க நமச்சாரம் தந்தம்போல் இருக்கும். நாகம் உருகுமுகத்தில் சிறிது இட கண்விட்டு ஆடும். தாமிரஊரல் நீக்கும். இதை சேகீர்செய்து இதில் தோய்த்து வாட்ட எந்த சரக்கும் கட்டும். கெந்தகவாடை போம். துருசு

அரிதாரம் லிங்கம் கட்டும். ரசம் மனோசிலை பூரம் வேறு வர்ணமாம். நாகம் சீறலறும். ஒவ்வொரு வகையிலும் வேதைகள் பலவாய்ப் பழுக்கும். "சாரத்தைக் கட்டினால் கோபுரத்தைக் கட்டலாம்" என்பது பழமொழி.

## 329 உருக்கின் நீற்றின சித்தூர ஆதி.

எலுமிச்சம்பழச்சாறு, முலைப்பால், வாய்நீர் கட்டு மித்திரமாம். வெள்ளைக்கரு சுண்ணும்பு நீறு, நீற்றின ஆதியாம். கெந்தகம், ரசம், தாளகம், மனோசிலை, துத்தம், வெடியுப்பு, அப்ரேகம் சிந்தூர ஆதியாம். வெட்டையான சரக்குகளில் பூரம் கொடுத்து உருக்க உருகும்.

## 330 அயச்செம்பு.

நவ்வல்பட்டை இடித்து காடித்தெளிவு நீரில் கலக்கி கொட்டிலான் சல்லிகளை அதில் ஊறவைத்து மறுநாள் இறுத்து விடவும். இவ்விதம் 5 தடவை செய்து கழுவி ஆத்தாளைவேர் அறைத்து தண்ணீரில் கலக்கி இதில் ஒரு நாள் ஊறவைத்து கடுக்காய் 10 தட்டிப்போட்டு காடியில் ஒருநாள் ஊறவைத்து எடுக்க சுத்தியாம். இவ்விதம் சுத்தித்த இரும்பு பலம் 1 காரம் பலம் 1 கூட்டி விரவி செங்கீரை நாவல்பட்டை சமமாக அறைத்து அதில் விரவி 1 புடமிடவும். இவ்விதம் 5 புடமிட்டு எடுக்க அது நல்ல செம்பாம். இது கைகண்டது என்றார். அயச்செம்புகள் உருகாமல் கொத்தி கொத்தினால் நாலைந்து நாக்கிளாம் பூச்சிகளிட நீரிக் உருகும் என்றார். இவ்விதம் செய்த அயச்செம்பே வேதைக்கு லாயக்காகும்

## 331 நமச்சாரக் கட்டு.

முன்கூறிய 126-வது முறைப்படி எண்ணை நீக்கி சுண்ணும்பு நீறுள் வைத்து எரித்து எடுத்த நமச்சாரத்தை ஒரு சட்டியில் யானை லத்தியிட்டு அதுமேல் செங்கல் தூளிட்டு அதுமேல் வைத்து அதுமேல் செங்கல்தூள் லத்தியும் முறையாக மூடி சட்டி மூடி சீலமண் செய்து ஒரு சாமம் எரித்து ஆறினபின் எடுக்க சாரம் கட்டும்.

## 332 வெள்ளை பாசாணக் கட்டு.

கொளுஞ்சி இலை அறைத்து ஷை கட்டிக்கு கவசித்து பிங்கானிட்டு சாய்வாக வெயிலில் 8 நாளும் சந்திர ஒளியில் 6 நாளும் வைக்க அதன் எண்ணை கக்கிவிடும். பின்பு அதை உபசரங்களில் அறைத்து புடமிட கல்லுப்போல் கட்டிப் போம். இதனுல் வெள்ளி வித்தை பலிதமாம்.

## 333 குருச்சுன்னம்.

சூடன் பச்சைக் கற்பூரம் சமம் நிறுத்து கோழிமுட்டை வெண்கருவால் அறைத்து ஒரு துருசுக் கட்டிக்கு கவசித்து பூசி ரவியில் வைக்க அது நீறி சுன்னமாம். ஷை சுன்னமும் சவ்வீரமும் ரசமும் வெண்புரு எச்சமும் சூடனும் சமம் வெண்கருவால் அறைத்து வில் இலை உலர்த்தி கரியுப்பு அறைத்து அதன்மேல் பொதிந்து சுண்ணும்பு சேலைசெய்து காயவைத்து ஒரு புடமிட குருவாம். வராலி இலை இடித்து இக்குரு சிறிது கொடுத்து விரவிவைத்து மாலையில் கம்பிளி துணியில் பிளிய சாறு வரும். இது சுருக்கிட கெந்தகம் லிங்கம் மெழுகாம். வெள்ளி செம்பு 100 க்கு 1 கொடுக்க 9 ஆகப் பழுக்கும்.

## 334 நாகக் கட்டு

துத்தி இலை அறைத்து ஒரு கழஞ்சி நாகத்திற்கு கவசித்து சீலைமண் செய்து முழப்புடமிட நீறும். செம்பு வெள்ளியிலிட பழுக்கும். சகல நோய் நீக்கும் பெருமை மிக்கது என்றார்.

## 335 தாமிரக் களிம்பற.

சீனிக்காரம் நமச்சாரம் பொரிகாரம் கரியுப்பு சமமாக எடுத்து மாவிலைச் சாறால் அறைத்து தாமிரத் தகடுக்குப் பூசி ஓட்டிலிட்டு சிறு புடமிட களிம்பு நீங்கும். இவ்விதம் 3 தபா செய்யவும் வர்ணமுண்டாகும் புளி இலையை எலுமிச்சம்பழ சாறால் அறைத்து தாமிரத் தகட்டிற்குப் பூசி சோற்றுக் கத்தாளை மடலை வகுந்து அதனுள் வைத்துமூடி சீலைமண் செய்து சிறு புடமிடவும். இவ்விதம் 3 புடமிட களிம்பற்று வர்ணமுண்டாகும். ஓடைச்சடைச்சி இலை கருங்கள்ளி இலைக்கும் செந்நாயுருவிக்கும் இவ்விதமே ஆகும்.

## 336 வெங்கார பற்பம்.

வெங்காரம் பலம் கால் நுணுக்கி ஒரு அகலச்சட்டியுள் பாதி தூளிட்டு அதுமேல் கெந்தகம் பலம் ஒன்று நுணுக்கின தூள் பாதியிட்டு பரத்தி அதுமேல் ரசம் பலம் ஒன்று விட்டு அதன்மேல் ஷை கெந்தகத்தூள் பாதியும் ஷை வெங்காரத்தூள் மீதமும் இட்டு மூடி பொருத்தமான சட்டிமூடி 7 சீலைமண் செய்து கமலாக்கினியாக 30 நாழிகை எரித்து ஆறவிட்டு எடுத்து எல்லாம் சேர்த்து நுணுக்க சிவந்த பற்பமாம். பணஎடை கருப்புக்கட்டியில் $3\frac{1}{2}$ நாள் 7 வேளை கொடுக்க வெடிசூலை வாதசூலை கணுச்சூலை சூலைவாய்வு சுரம் வாதம் வாய்வுகள் கிரந்திபதுக்கள் புண்புரை குன்மம்

8-ம் தீரும். வெண்கரும்பத்து புத்துநோயும் தீரும். சீனிக் கீரம் பலம் ஒன்று சட்டியிட்டு உருக்கி அதன் நடுவே கெந்தகம் பலம் ஒன்று இட்டு உருக்கி அதன் நடு ரசம் பலம் ஒன்று இட்டு இறக்கி சட்டி மூடி சீலமண் செய்து முன் போல் எரித்து எடுக்க ரோஜாப்பூ நிறமான சிந்தூரமாம். பணஎடை தேன் முதலிய அனுபானங்களிலிட சகல பத்துகளும் முன்கூறிய நோய்களும் தீரும். இச்சாபத்தியம்,

## 337 துருசு சுன்னம்.

துருசு பலம் 3 கழுதை மூத்திரம் விட்டு 3 நாள் அரைத்து வில்லை செய்து காயவைத்து உலைமூடிச் சட்டியுள் கீழ்த்தலத்தி பரத்தி அதன்மேல் வில்லைவைத்து அதன் மேல் பச்சைசலத்தி பரத்தி மூடி ஓடுமூடி சீலமண் செய்து சற்றுவுலர்த்தி அடுப்பேற்றி 15 பலம் காஞ்சூரன் கட்டை யசல்லியாக வெட்டி காயப்போட்ட விறகால் 3 நாழிகை எரியிட்டு ஆறி எடுக்க துருசு சுன்னமாம். ரக்கட்டு முதல் சகலத்துக்கும் ஆகும்.

## 338 கெந்தக தைலம் குருமெழுகு.

கெந்தகம் பலம் 4 கட்டின சாரம் பலம் 2 வெங்காரம் பலம் 2 வெளுத்த துருசு பலம் ஒன்று வெடியுப்பு பூநீறு வகைக்கு பலம் அரை இவைகளை கோழிமுட்டை மஞ்சள் கருவிட்டு அரைத்து சல்லி அளவாக வில்லைகள் தட்டி உலர்த்தி குழித்தைல முறைப்படி தைலம் இறக்கி வைக்கவும். இதால் சுருக்கிட லிங்கமும் வீரமும் மெழுகாம். இவ்விதம் கட்டின வீரமும் லிங்கமும் கழஞ்சி விதம் எடுத்து சூடனும் கூட்டி இரும்பு கரண்டியிட்டு தைலம்விட்டு விளக்கில் வாட்டி மெழுகாம். இதில் 3 சரக்குடன் ரசம் கெவுரிபாசா

ணமும் சேர்க்க ஜி கப்விசேடமாம். இந்தக் குருமெழுகு செம்பு 5 வெள்ளி 5 தங்கம் 2 ஆக மஞ்சாடி 12 உருகுமுகத்தில் ஷை மெழுகு ஒருமஞ்சாடி கொடுக்க $7\frac{1}{2}$ ஆக்கப்பழுக்கும்.

## 339 தாளக முறை.

சுண்ணாம்புக்கல்லில் 7 திடவை நீற்றி எடுத்து கழுவி வெங்காயசாறு, கொட்டை கரந்தைசாறு, குமரிசாறு, முசுமுசுக்கைச்சாறு, நொச்சி இலைச்சாறு முக்கண்ட சாரணத்தி சாறு வகைக்கு படி ஆ சேர், ஷை தாளகம் பலம் 5 க்கு சுருக்கிட்டு வைத்துக் கொள்ள எந்த மருந்து செய்வதற்கும் நல்லதாம் இவ்விதம் செய்த தாளகம் கழஞ்சி 3 காக்காய் சிப்பியில் வைத்து சிப்பிமூடி சீலைமண் செய்து 3 எரு கீழே அடுக்கி அது நடுவே மணல் சிறிது கொட்டி அதன்மேல் ஷை கவசம் வைத்து மண்ல்மூடி மேலே 2 எரு முறித்திட்டு புடம்போட்டு ஆறி எடுக்கவும் நீறும். அரிசிஎடை அனுபானங்களிலிட சயரோகங்கள் தீரும். ஆடுதின்னா பாளை சாறுல் அறைத்தும் முன்போல் புடமிடலாம். சிப்பி ஒரு குருவான தாழல், அதில் வைத்துப் புடமிடும் சரக்குகள் ஓடாது.

## 340 வைத்தியச் சேநீர்.

வெடிப்புப்பு பலம் 10 பூநீறு பலம் 10 எலுமிச்சம்பழ சாறுல் அறைத்து இரும்புக் கரண்டியில் வழித்து விட்டு அனல் கொதிக்க வைக்க இது சுன்னமாம். இதை பீங்கானிலிட்டு பனியில் வைத்தாவது சாணி கரைத்ததில் அமுக்கி வைத்தாவது சேநீர் செய்து கொள்ளவும். இந்த சேநீரால் சலாசத்தை அறைத்து வில்லைசெய்து ஒட்டிலிட்டு சீலைமண்

செய்து முழப்புடமிட சுன்னனமாம். இச்சுன்னம் குன்றி எடை அனுபானங்களிலிட அஷ்டகுன்மவாயு முதலிய மல பந்த நோய்கள் நீங்கி நல்ல ரத்தசுத்தி தேகதிடம் தரும். நாகம் உருகும்போது கொடுக்க கட்டும். இது காரச்சுன்ன மாம். மற்ற சரக்குகளும் இதால் நீற்றலாம்.

## 341 வெள்ளி பற்ப ரசமணி

இலேசான வெள்ளித் தகட்டிற்கு புளிச்சக்கீரை அறைத்து கவசித்து அகலில் வைத்து மூடி 7 சீலமண் செய்து குக்கிடப் புடமிடவும். இப்படி 3 புடமிட அந்த வெள்ளி பற்பமாம். இந்த பற்பம் ரசத்தில் சிறிது இட்டு அறைக்க அந்த ரசம் வெண்ணையாம். அதை உருட்டி காட்டுள்ளியுள் வைத்து ஒரு சிறு புடமிட மணியாம் சாரணை முறைப்படி புடமிட்டுக்கொள்ளலாம். ஷை ரச வெண்ணையை உருக்கினல் செயற்கை வெள்ளியாகும். காடிக்காரத்திலும் ரசவெண்ணை செய்யலாம், துருசாலும் ஆகும்.

## 342 லிங்கக்கட்டு தாமிரவேதை.

தும்மட்டி காயுள்வைத்து சீலமண் செய்து 8 எருவில் புடமிட்ட உலாந்தா லிங்கம் இவ்விதம் 180 புடமிட உருகி கட்டும். இது அரிசிஎடை சுத்தித்த தாமிரத்தில் 2 தபா கொடுக்க பழுக்கும். மஞ்சள் ஊமத்தம் பூவை அறைத்து தாமிரத்தகட்டிற்கு பொதிந்து 3 புடமிட பழுக்கும். ரசத்தை நன்ருக சுத்திசெய்து மஞ்சள் சேர்த்து நன்ருய் அறைத்து புடமிட செயற்கை வெள்ளியாம். செம்பு 5 பங்கு துத்த நாகம் 1 பங்கு தங்கம் 1 பங்கு சேர்த்து மூசையில் உருக்கி எடுத்து நகைகள் செய்ய என்றும் மங்காமல் தங்கம்

போலவே இருக்கும். இலுப்பை எண்ணெயில் 7 தடவை உருக்கிச் சாய்த்த நாகம் சேர் ஒன்று கண்ணாடிக் கல்லை அறைத்து கவசித்து குகையிலிட்டு சீலைமண் செய்து குக்கிடப்புடமிடவும். இவ்விதமாக 10 புடமிட சுத்த வெள்ளியாம். கரு ஊமத்தங்காயுள் வெள்ளீயக் கட்டி வைத்து சீலைமண் செய்து சிறு புடமிட வெள்ளியாம். அதிக புடமிட பற்பமாம். இந்த பற்பம் வெள்ளீயம் உருகுமுகத்தில் ஒரு சிட்டிகை கொடுக்க அது செயற்கை வெள்ளியாம்.

## 343 நாகக்கட்டு வேதை

ஆடாதோடை சாறு, குமரிசாறு, கள்ளிப்பால், திருகு கள்ளிப்பால், கச்சக்குமட்டிசாறு வகைக்கு 10 தபா உருக்கி சாய்த்த நாகம் நல்ல வெள்ளி போலாம். நமச்சாரம் வெண் கருவால் அறைத்து ஷை நாகத்திற்கு கவசித்து ஓட்டிலிட்டு சீலைமண் செய்து முழப்புடமிடவும். இப்படி 5 புடமிட கட்டும். சுத்தித்த தாமிரத்தில் 4 க்கு ஒன்று கொடுக்க 7 ஆக பழுக்கும். இது 4 க்கு 1 தாய் என்னும் தங்கம் சேர்க்க 8½ ஆகப் பழுக்கும். சத்தியுப்பு, நமச்சாரம், வெடியுப்பு, சீனிக் காரம், பூநீறு, அரிதாரம், முட்டைத்தோடு சுத்தித்தது இவைகளை சமஎடையாக எடுத்து வெண்கருவால்அறைத்து ஷை நாகத்திற்கு கவசித்து முன்போல் புடமிட முழுக் கட்டாகும்.

## 344 அயச்செம்பு

இரும்பை உருக்கக் கூடியது ஊணங்கொடி என்னும் மூலிகையாம். இதனல் வெள்ளி தங்கத் தகடுகளும் நீற்றலாம். இந்த மூலிகையை நிழலிலுலர்த்தி நறுக்கி குழித்

தைலம் எடுத்து வைக்கவும் இதில் இரும்பு தகடு சல்லிகள் அரபொடியை விரவி குகையிலிட்டு ஓடுமூடி சீலைமண் செய்து உருக்க உருகும் இப்படி 3 தடவை செய்ய அயம் செம்பாம்.

## 345 தாளக சிந்தூரம்.

பொன்னரிதாரம் சுத்தித்தது பலம் கால் எலுமிச்சம் பழ சாறுல் அறைத்து உருட்டி நடுவே பள்ளம் செய்து ஒரு கழஞ்சி வீரத்தூளில் பாதி அதிலிட்டு அநுமேல் கால்பலம் ரசம்விட்டு அதுமேல் மீத வீரதூளிட்டு அதை ஷை தாளக சாந்தால் மூடி சீலைமண்செய்து ஒருபடி மணல் பூமியிலிட்டு அதன் நடுவே வைத்து மூடி அதன்மேல் 5 எரு முறித்து போட்டு புடமிட்டு ஆறினபின் சீலைமண் கவசம் நீக்கி மருந்தை பழசாறுல் அறைத்து உருட்டி மேலே சீலைமண் செய்து முன்போல் 10 எருவில் புடமிட்டு எடுத்து மறுபடி அறைத்து 50 எருவில் முன்போல் புடமிட்டு எடுத்து நுணுக்க ரோஜாப்பூ நிறமான சிந்தூரமாம். இது தங்கசிந்தூரம்போல் வேலை செய்யக் கூடியது. சயரோக முதல் சகல ரோகத்திற்கும் குன்றி எடை அனுபானங்களிலிடலாம். மேகசுரம் கபசுரம் சகலசுரம் குட்டம்பத்து விசகீர் முதலிய கொடிய நோய்களும் தீர்க்கும். சமயோசிதபத்யம்.

## 346 நரை திரை மாறி காயசித்தி தரும் கல்ப சிந்தூரம்.

1-வது முறையில் கூறிய பாதரசக்கட்டை மண்குகையுள் வைத்து பொரிகாரம் கொடுதது உருக்கி உருகும் போது வெற்றிலைபாக்கு மென்ற உமிழ்நீர் விட மின்னி பிரகாசிக்கும். இதற்கு சரிஎடை தங்கம் சேர்த்து உருக்கி

நூறு வராகனெடை சுத்த செம்புக்கு உருகும்போது ஒரு வராகனெடை கொடுக்க அதிகமாகப்பழுக்கும். முன்கூறிய பாதரசக்கட்டு வெள்ளியானதுடன் தங்கம் சுத்தித்த சிறு கண்நாகம் ரசம் கெந்தகம் வகைக்கு கால்பல விதம் ராவி பொடித்து கல்வத்திலிட்டு பொற்றலைக் கரிப்பான் சாருல் 2 நாள் அறைத்து வில்லைதட்டி உலர்த்தி நுணுக்கி ஏழு சீலைமண் செய்து உலர்த்திய காசிக் குப்பியில் பாதிவரை செலுத்தி அன்வாய்க்கு மாக்கல்லினுல் மூளைசெய்து மூடி ஒரு பாண்டத்தின் அடியில் நாலுவிரலுயர மணலிட்டு அதன்மேல் ஷி குப்பியைவைத்து அதன் கழுத்தளவு வரை 4 படி வெந்தயப் பருமனை மணல்கொட்டி பாண்டத்தை அடுப்பேற்றி 12 மணி நேரம் தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினி என்ற முத்தீயும் எரித்து சாங்க சீதளமாய் ஆறினபின் புட்டியை எடுத்து பத்திரமாக மருந்தை எடுத்துக்கொள்ளவும். முள்முருங்கம்பூவின் நிறமாக இருக்கும். இதுதான் பருவம்; தேவியை பூசித்து பணஎடை தேனில் காயகல்ப மூலிகைகளில் கொடுக்க சயரோக முதல் சகல ரோகமும் தீரும். நவலோகத்தில் சொடுக்க அதிக மாகப் பழுக்கும் நரை திரை மூப்பு மாறி சரீரம் வாலிபத் தோற்றமாம் பொற்றலைச் சூரணத்திலிட வெண்குட்டம் செங்குட்டம் கருங்குட்டம் பத்து பதகரி புத்துநோய்களும் தீரும். தொட்டால் சுருங்கி சூரணத்தோடு கொள்ள காய சித்தி யோகசித்தி ஞானசித்திகளும் தரும். முள்ளுடன் கொடியாக படர்ந்து சிவப்பு பூ பூத்து வெந்தய அளவுள்ள இலை இணுக்குகளுடன் நீர் வாய்க்கால் ஓரங்களில் பத்தை யாகப் படரும் இம்மூலிகை மகான்களின் ரகசிய மூலிகையாம்.

## 347 கவுரி சிந்தாமணி.

ரசம் கழஞ்சி 20 கெந்தகம் கழஞ்சி 30 வெண்காரம் கழஞ்சி 10 மூன்றும் கல்வத்திலிட்டு ரசம் மாள அறைத்து கோடித்துணியில் அல்லது அசல் பட்டுத்துணியில் பொதிந்து கட்டி மேலொரு துணி சுற்றிக்கட்டி ஒரு பானையில் 4 படி மணலிட்டு அதுமேல் ஷை கிளியை வைத்து அதுமேல் 4 படி மணல் கொட்டி பானை வாய்க்கு வட்டோடு மூடி சீலைமண் செய்து குழிக்குள் 100 எருவில் புடமிட்டு ஆறி எடுத்து நுணுக்க மருந்து ஆலம்பழ நிறமாக இருக்கும். பணஎடை திரிகடுகத்தூள் திரிகடியில் வைத்து தேன் விட்டு குழைத்து 20 நாள் கொடுத்துவர இடையிடையே மருந்து நிறுத்தி எண்ணை ஸ்நானம் செய்துவர 20 நாளில் சூலை 18 வாய்வு 26 குன்மம் 8 ஈளை இருமல் எலிகடி மந்தாரகாசம் காயாசுவாசம் உள்மாந்தை சுரமாந்தை சுவாச காசம் கசரோகம் காமாலை சோகை யோனி நாபி பக்க அண்டசூலைகள் அண்டவாதம் மூலரோகம் அரையாப்பு துடைவாளை கண்டமாலை கண்டவிப்புருதி கூடுவிப்புருதி முதலிய கொடிய நோய்கள் குணமாம். குரோசாணி சூரணத்திலிட ஒரிதழ் தாமரை சூரணத்திலிட கிராணி 6, அதிசாரம் 12. தீரும். கருணைக்கிழங்கு சூரணத்தில் கடுகுகூட்டி தேன் மத்தித்து 20 நாள் கொடுத்துவர மூலம் 9 பவுந்திரம் 20 தீரும். ஆவரம்பட்டை தைலத்தில் பணஎடை கொடுத்து வர சலக்கழிச்சல் 20 சோபாரோகம் 12 கல்சதைநீர்அடைப்புகள் 18 உஷ்ணரோகம் 6 மூத்திரக்கழிச்சல் மதுமேகம் 20 மூத்திரமண்டி மூத்திரப்பாளை 6 எலும்புருக்கி 12 புத்து நோய் 24 உள்சுரம் காங்கை 8 தீரும். அழிசம்பட்டை குழித்தைலத்திலிட வயிற்றுநோய் 60 வாயுத்திரட்சி 32 விப்புருதிக் கட்டிகளும் தீரும். எருக்கலம் பழுப்பு வாட்டி

பிளிந்து கால். அரை அவுன்ஸிலிட பேதியாகும். மோரும் சோறுமுண்ண நிற்கும். விசபாகம் பைத்தியம்12ம் சோகை காமாலை நீர்க்கோவை கவுசி மகோதரம் சுரம் வீக்கமும் தீரும். இன்னும் அனுபானம் அறிந்து செய்ய 4448 வியாதிகளையும் நிர்மூலமாக்கும். இம்மருந்து சித்தவைத்தியப் பெருமையை எடுத்துக் காட்டுவதாம். வாய் பிடியாது; சமயோசித பத்தியம் வைக்கவும். ஆள்பலம் நோயின்பலம் அறிந்து பிரயோகிப்பது வைத்தியர் கடமையாம்.

## 348 தாமிர மெழுகு.

யந்திரம் எழுதும் இலேசான தாமிரத்தகடு துரும்பு போல் கத்தரித்த தூள் பலம் ஒன்று பீங்கானிலிட்டு அதன் மேல் கெந்தகம் நுணுக்கியது பலம் ஒன்று இட்டு அது மிதக்க எலுமிச்சம்பழ சாறு நிறைய விட்டு கஸ்தூரி பச்சைக் கற்பூரம் வகைக்கு ஒரு வராகன்எடை தூளித்துப் போட்டு கலக்கி வெயிலில் வைத்து வரவும். தாமிரம் கரைந்து மெழுகு ஆகிவிடும். கல்வத்திலிட்டு நன்றாக அறைத்து சிமிழில் வைத்து மூடிவைக்கவும். 1×3 பாசிப் பயறு அளவில் நெய் அல்லது வெல்லத்தில் காலை மாலை கொடுத்துவர வாதம் 80 குன்மம் 8 கபரோகங்களும் தீரும். சமயோசித பத்தியம், இச்சாபத்தியம் வைக்கவும்.

## 349 தில்லை ரசம்.

தில்லை மரப்பட்டை சூரணம் பலம் 5, ரசம் பலம் ஒன்று இது இரண்டும் கல்வத்திலிட்டு 2 சாமம் அறைக்க ரசம் மடிந்து சூரணத்தில் உறவாகி விடும். இந்த மருந்து காலை மாலை 5 குன்றியளவு பால் முதலிய அனுபானங்களிலிட

இச்சாபத்தியமாயிருக்க மோர் பால் நெய் நன்ருய் சேர்த்து வர, வாதம் சூலே முடக்கு திமிர் முதலிய கொடிய நோய் களைத் தீர்க்கும். எத்தனை வருடம் சாப்பிட்டு வந்தாலும் வாய் பிடியாது, கெடுதல் செய்யாது.

## 350 லிங்கம் பூரம் பாசாணக் கட்டு.

சிறு அடுப்பில் ஓடுவைத்து அதன்மேல் லிங்கம் பலம் ஒன்று வைத்து ஒரு மூங்கில் குச்சி நுனியில் சிறிது துணி தொங்கச் சுற்றி கொக்குமந்தாரைப்பூச் சாறில் தோய்த்து அந்தக் கட்டிக்கு சுவரச் சுவர சுருக்குக் கொடுக்கவும். சிறு தீ எரிக்கவும். இவ்விதம் ஒருசாமம் சுருக்கிட்டு அந்தப் பூவை அறைத்து அந்தக் கட்டிக்குக் கவசித்து சீலேமண் செய்து ஒருகூடை உமிக்குள் வைத்துப் புடமிட்டு ஆறி எடுக்க நீறிவிடும். இவ்விதம் ரசகற்பூரம் பாசாணம் முதலியவைகளையும் கட்டலாம்.

## 351 அயக்காந்த சிந்தூரம்.

வெள்ளாவியில் வைத்து அவித்து எடுத்த காந்தம் பலம் 2 தேங்காய் எண்ணெயில் 3 நாள் ஊறவைத்து அரப் பிட்டுக் கழுவி எடுத்த இரும்பு அரபொடி பலம் 4 கெந்தகம் பலம் 4 இவைகளை நாவல்பட்டை சாறில் 3 நாள் ஊற வைத்து கல்வத்திலிட்டு ஷை சாறுல் 2 சாமம் அறைத்து வில்லேசெய்து காயவைத்து ஒட்டிலிட்டு சீலேமண் செய்து குழிக்குள் கஜபுடமிடவும். மீண்டும் முன் சாறுவிட்டு முன் போல் அறைத்து 10 புடமிட்டு கடைசி பொற்றலேக்கரிப் பான் சாறுல் ஒரு புடமிட உயர்ந்த சிந்தூரமாம். பண எடை தேன் நெய் கசாயம் முதலிய அனுபானங்களிலிட லேகியத்தில் வைத்துக் கொடுக்க சோகைநீர் பித்தநீர்

காமாலைநீர் கரப்பான்நீர் மகோதரநீர் உடல் வீங்குநீர் துர் நீர்களும் நீங்குவதோடு தேக பலமும் தாது விருத்தியும் மன உற்சாகமும் உண்டாம். அமுக்களாவேர் சூரணத்தில் சாப்பிட்டுவர தளர்ந்த நாடி நரம்புகள் முறுக்கேறி காய சித்தி தரும்.

## 351 தாமிர சிந்தூரம்.

தாமிரத்தகடுகள் சுத்தரித்து பலம் 1 எடுத்து கெந்தகப் பலம் 1 சேர்த்து எலுமிச்சம்பழ ரசத்தால் அறைத்து விரவி ஓட்டில்வைத்து ஓடுமூடி சீலைமண் செய்து குக்கிடப் புடமிட வெட்டையாகி விடும். அதை செவ்வல்லி கிழங்கின் சாறுல் ஒருசாமம் அறைத்து ஓட்டில்வைத்து ஓடுமூடி சீலைமண் செய்து குக்கிடப் புடமிடவும். இவ்விதம் 12 புடங்களிட முருக்கம்பூ போல் சிந்தூரமாகும். களிம்பு வாடை இனிப்பு சுவை முதலிய கெட்ட குணங்களிராது. அரிசி எடை குன்றிஎடைகளில் ஆள்பலம் நோயின் பலமறிந்து அனுபானங்களிலிட குன்மம் குட்டம் வாதம் முதலிய கொடிய நோய்கள் தீரும் பசி தீவிரமாம். காலம் நேரம் நோய் நாடி அளவு பத்தியம் வயது திடம் அறிந்து ஔஷதப் பிரயோகம் செய்வது வைத்தியர் கடமை. புடம் எரிப்பு சத்துரு மித்துரு கைபாகம் செய்பாகம் சுருதி யுத்தி அனுபவத்தை அனுசரித்துச் செய்வது வாதிகள் கடமையாம்

**ஸ்ரீ ராமகிரிச் சித்தர் ரசாயன நூல் முற்றிற்று.**

சுபம் ! சுபம் !! சுபம் !!!

# பெரியோர் வணக்கம்.

## எழுசீர் விருத்தம்.

குருத்துவ வகத்யர் சுந்தரர் மூலர்
கொங்கணர் கருவூரார் யூகி
மருத்துவர் பிரமர் கன்னி நாகீசர்
மச்சர் கோரக்கர் நந்தீசர்
கருத்துறு முரோமர் சட்டர் வாசமுனி
கபிலர் பிண்ணாக்கிடைக் காடர்
வருத்துவர் புசுண்டர் தேரையர் போகர்
வள்ளுவர் காந்தியைப் பணிவாம்.

## எண்சீர் விருத்தம்.

புற்பூண்டு தானியமே வுணவென் றுணேப்
பொல்லார்கள் கல்லெறியப் பொறுத்திட் டாணேச்
சொற்பூண்டு போதியடித் துறந்த கோணேத்
தொட்டகராம் விட்டபதத் துணையூ ராணே
பற்பூண்டு கிடந்தவனே எழுப்பி ஞணேப்
பழமதுரைத் தொழிலாளர் தலைவன் றன்னே
நெற்பூண்டு நிலவளங்க ணிறையிந் நாட்டில்
நெஞ்சாரத் துதித்துநித நினைப்போம் வாரீர்!

மதுரை வரகவி மு. கணபதியாபிள்ளை அவர்களால் பல ஏட்டு முறைகளையும் ஆராய்ந்து தன் பரம்பரை அனுபவத்தையும் ஒருங்கே திரட்டி எழுதப் பெற்ற **சித்த வைத்திய சிந்தாமணி** என்னும் அரிய வைத்திய நூல் விரைவில் வெளிவரும்.